கோகுலம்

GOKULAM

பிப்ரவரி '84 ரூ. 3.





அமரர் எம்.ஜி.ஆர்

தோற்றம்: 17-1-1917 மறைவு: 24-12-1987



உயிர்களிடத்தில் அன்புவேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.

கோகுலம்

1988 பிப்ரவரி மாத இதழ்

மலர் 6 : இதழ் 1
தனிப் பிரதி ரூ. 3/–
ஆண்டுச் சந்தா ரூ. 36/–

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா.



புகைப்படம்: எஸ். ராமகிருஷ்ணு

அருமைச் சிறுவர் சிறுமியரே,

உங்களில் பலர் கிறிஸ்துமஸ் வாழ்த்து, புத்தாண்டு வாழ்த்து, பொங்கல் வாழ்த்து என்று பல வாழ்த்துக்களை அன்போடு அனுப்பியிருக்கிறீர்கள். ஒவ்வொருவருக்கும் நன்றி தெரிவித்துத் தனித்தனியாகக் கடிதம் எழுத ஆசைதான், ஆனாலும், இயலவில்லை. ஆகையால், வாழ்த்து அனுப்பிய எல்லாருக்கும் எங்களின் மனங்கனிந்த நன்றியை 'கோகுலம்' வாயிலாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்த ஆண்டு,தேசபக்தரும் தியாகியுமான தீரர் எஸ். சத்தியமூர்த்தி அவர்களது நூற்றாண்டு விழாவும், 'சங்க நாதம் கேட்குது' என்று தொடங்கி மகாத்மா காந்தியின் கொள்கைகளைத் தமிழகத்தில் பரப்பிய நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளையவர்களின் நூற்றாண்டு விழாவும் பல இடங்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

இந்த இரு பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளையும் நீங்கள் அவசியம் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்களைப் போல் சிறந்த தேசபக்தர்களாக, கவிஞர்களாக உங்களில் பலர் விளங்க வேண்டும்.

உங்கள் பள்ளிகளிலும் இவர்க்ளது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவீர்கள் என நம்புகிறோம். இவர்கள் நினைவாக, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி முதலியவற்றை நடத்தலாம். இவர்களது வாழ்க்கை வரலாற்றில் காணப்படும் சுவையான நிகழ்ச்சிகளை மேடையில் நடித்துக் காட்டலாம். இவர்களது திருவுருவப் படங்களை உங்கள் பள்ளிகளில் திறந்து வைக்க ஏற்பாடு செய்யலாம். இப்படி எத்தனையோ வழிகளில் நம் நாட்டில் பிறந்து, நமக்குப் பெருமை தேடித் தந்தவர்களுக்கு நன்றி செலுத்துவதோடு நாமும் உயர்வு பெறலாமல்லவா?

—அழ. வள்ளியப்பா



பிள்ளைகளைப் போற்றிய வள்ளல்

—புத்தனேரி சுப்பிரமணியம்

ஒரு வேன் கோயம்புத்தூரை நெருங்கிக் கொண்டிருந்தது. சாலையின் இரண்டு பக்கங்களிலும் அலை அலையாக மக்கள் நெருக்கியடித்துக் கொண்டு ஆர்வமாக நின்றனர்.

வேனில் கம்பீரமான தோற்றத்துடன் இரு பக்கத்து மக்களையும் நோக்கி வலது கையை உற்சாகமாக அசைத்துக் கொண்டு வந்தார் ஒரு மாபெருந் தலைவர்.

அவரது மோகனப்புன்னகை அனைவரையும் வசீகரம் செய்தது.

'வாழ்க வாழ்க!' என்ற முழக்கமும் கைதட்டல்களும் வானத்தை எட்டின.

அந்தப் பெரிய கூட்டத்தின் நெருக்கடியில் மாட்டிக் கொண்டாள் ஒரு தாய். அவள் தன் கைக்குழந்தையை மேலே தூக்கிப் பிடித்த வண்ணம் கூட்டத்திற்குள் நுழைந்தாள்.

''தலைவரே! என் குழந்தைக்குப் பெயர் சூட்டி வாழ்த்துங்கள்!'' என்ற அந்தத் தாயின் தீனக் குரல் மக்களின் கூச்சலில் எடுபடவில்லை.

விடாப்பிடியாகக் கூட்டத்திற்குள் புகுந்தாள் அந்தத் தாய். இந்த நிலையில், தலைவரின் வேன் அருகே நெருங்கி விட்டது. ஆனந்தப் பரவசம் கொண்ட தாய், ''ஐயா! ஐயா!'' என்று கூச்சலிட்டாள். வேன் கிட்டே போக முடியாமல் தவித்தாள். திடீரென்று அவளுக்கு ஓர் ஆவேசம் வந்தது.

தன் குழந்தையை அலாக்காகத் தூக்கித் தலைவரை நோக்கி வீசி எறிந்தாள்!

அசகாய சூரரான அந்தத் தலைவர் சட்டென்று குழந்தையைத் தம் கைகளில் தாங்கிப் பிடித்துக் கொண்டார்! (கிரிக்கெட்டில் 'கிரேட் கேட்ச்' என்பார்களே, அதைப் போல!)

குழந்தையை மார்போடு அணைத்துக் கொண்டார், தலைவர். முத்தம் கொடுத்தார்.

''இந்தப் பிஞ்சுக் குழந்தையை வீசி எறிந்த பாவி யார்?'' என்று கடும் கோபத்துடன் கேட்டார் தலைவர்.

அருகில் நின்ற மக்கள் பரபரப்புடன் அந்தத் தாயை இழுத்து வந்து தலைவரின் வேன் பக்கம் நிறுத்தினார்கள்.

''ஏனம்மா? உனக்குக் கொஞ்சம் கூட இரக்கம் இல்லையா? பெற்ற பிள்ளையைக் கொடூரமாக ஏன் இப்படி வீசி எறிந்தீர்கள்?''

என்று தலைவர் கோபம் பொறி பறக்கக் கேட்டார்.

''மன்னிக்க வேண்டும் மகராசா! என் குழந்தைக்கு நீங்கள்தான் பெயர் வைக்க வேண்டும் என்று தூக்கிக் கொண்டு வந்தேன். உங்களை நெருங்க முடியவில்லை! அதனால் தான் என்னவானாலும் ஆகட்டும் என்று சமயம் பார்த்துக் குழந்தையை உங்களை நோக்கி வீசி எறிந்து விட்டேன்...!'' என்று தேம்பினாள் அந்த அன்னை.

அத்தாயின் ஆசை தலைவரை நெகிழச் செய்தது.

''என்ன இருந்தாலும் நீங்கள் செய்தது மிகப் பெரிய கொடுமை! பெயர்

வைப்பது என்ன பிரமாதம்? பிள்ளை முக்கியமா? பெயர் முக்கியமா?... கவலைப்படாதே. இதோ உன் பிள்ளைக்கு 'சத்யா' என்று பெயர் சூட்டுகிறேன். திருப்திதானா?''

என்றார் தலைவர். தாய் பூரித்தாள். கைகூப்பித் தொழுதாள்.

உடனே தலைவர், அந்தக் குழந்தைக்கு மீண்டும் முத்தம் கொடுத்து, அந்தத் தாயிடம் ஆயிரம் ரூபாயையும் பரிசாக வழங்கினார்.

''குழந்தையைப் பத்திரமாக வளர்க்க வேண்டும். அதன் வாழ்க்கையையும் வீசி எறிந்து விடாதீர்கள்!'' என்று புன்னகை ததும்பப் பாசத்துடன் கூறினார்.

''வாழ்க தலைவர்!'' என்று மக்கள் முழங்கினார்கள்.

அந்த மாபெருந்தலைவர் யாராக இருக்கும் என்று வாசகர்களே ஊகித்திருப்பார்கள்.

ஆம்; அவர்தான் புரட்சித்தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். உண்மையாகவே நடந்த பாசம் ததும்பும் நிகழ்ச்சி இது.

பண்டித ஜவாஹர்லால் நேருவைப் போலவே குழந்தைகள் மீது அளவற்ற பாசம் கொண்டவர் எம். ஜி. ஆர்.

மற்றொரு உருக்கமான நிகழ்ச்சி.

பல ஆண்டுகளுக்கு முன் நெடுஞ்சாலை ஒன்றில் தம் படகுக் காரில் பயணம் செய்து கொண்டிருந்தார், மக்கள் திலகம்.

வழியில் ஒரு குடிசையிலிருந்து ஒரு சிறுமி வீறிட்டு அழுது கொண்டு பதறிய வண்ணம் பரபரப்பாக வெளியே ஓடி வந்தாள். அவளை அடித்து விரட்டிக் கொண்டிருந்தாள் தாய். குழந்தைக்குச் சுமார் ஐந்து வயது இருக்கும்.

கண்ணீரோடு வேகமாக ஓடி வந்த சிறுமி எம். ஜி. ஆரின் காருக்குக் குறுக்கே வரும் சமயம் சட்டென்று கார் நிறுத்தப்பட்டது.

காரிலிருந்து புரட்சித் தலைவர் இறங்கி வந்தார். சிறுமியைக் கையிலே தூக்கினார். கண்ணீரைத் துடைத்தார்.



படம்: சுபா

சிறுமியுடன் குடிசைக்குச் சென்றார்.

"ஏனம்மா, குழந்தையை இப்படி அழஅழ அடித்துத் துரத்துகிறீர்கள்?" என்று கேட்டார்.

"பசிக்குது, பசிக்குது என்று என் பிராணனை வாங்குகிறது இந்தச் சனியன்!" என்று எரிச்சலோடு சொன்னாள் அந்தத் தாய்.

"பசிக்கிற குழந்தைக்குச் சோறு போட வேண்டியதுதானே? ஏன் அடிக்கிறீர்கள்?" என்று கோபமாகக் கேட்டார் எம். ஜி. ஆர்.

"சோறு இருந்தாப் போட மாட்டேனா? இரண்டு நாளாய் நானும் குழந்தையும் பட்டினி!" என்று தன் சோகத்தை வெளிப்படுத்தினாள் அந்தத் தாய்.

உடனே எம். ஜி. ஆர். தம் பையிலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து அந்தத் தாயிடம் நீட்டினார்.

"நீங்க என்னங்கய்யா? பசிக்குதுன்னு சொன்னா என்னமோ தாளை எடுத்துக் கொடுக்கிறீங்க?" என்று பரிதாபமாகக் கேட்டாள் அவள்.

உடனே அருகில் நின்ற மக்கள் திலகத்தின் உதவியாளர், "அம்மா! இது வெறும் தாள் இல்லை! நூறு ரூபாய் நோட்டு!" என்றதும், அந்தத் தாய் மெய்சிலிர்த்து,

"அப்படியா? நான் இதுவரை இப்படி ஒரு நூறு ரூபாய் நோட்டைக் கண்ணாலே கூடப் பார்த்ததில்லை! "ஐயா! நீங்க மகராசனா இருக்கணும்!" என்று கையெடுத்துக் கும்பிட்டாள்.



குழந்தைக்கு முத்தம் கொடுத்து, "நல்லாப் படிக்கணும்!" என்று கன்னத்தில் தட்டிக் கொடுத்தார் தலைவர்.

"சாப்பாட்டுக்கே வழியைக் காணோம்! இதுக்குப் படிப்பு வேறே கேடா?" என்று விசனத்தோடு கூறினாள் அத்தாய்.

"கவலைப்படாதீர்கள்! உங்களுக்கு என்ன உதவி வேண்டுமானாலும் நான் செய்கிறேன்!" என்று ஆறுதல் கூறிய எம். ஜி. ஆர்., தம் உதவியாளர் மூலம் முகவரியைக் கொடுத்து, அந்தத் தாயின் முகவரியையும் குறித்துக் கொள்ளச் சொன்னார். தொடர்ந்து உதவிகளும் செய்து வந்தார்.

"சாப்பாட்டுக்கே வழியில்லை! படிப்பு வேறே கேடா?"

என்ற அந்தத் தாயின் கேள்வியைப் பல ஆண்டுகள் அசை போட்டுக் கொண்டே இருந்தது எம். ஜி. ஆரின் சிந்தனைகள்.

சின்னஞ்சிறு வயதில் தானும் தன் அண்ணனும் பசியாலும் பட்டினியாலும் பட்ட துன்பங்களை எண்ணிப் பார்த்தார்.

துள்ளித் திரிகின்ற பருவத்திலே
பள்ளிக்குச் செல்ல முடியாமல்
இன்னும் பசியால் சுற்றித் திரியும்
பிள்ளைகளின் துன்பம் தீர்த்திடுவேன்'

என்று சபதம் எடுத்துக் கொண்டார். அதன் பயனாகவே சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார் மக்கள் திலகம்.

எழுபது லட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு அளித்துவரும் இந்தத் திட்டம் அனைவராலும் பாராட்டப்படுகின்றது. மற்ற மாநிலங்களுக்கும் இந்தத் திட்டம் வழிகாட்டுகின்றது.

இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கியும், காலணிகள் வழங்கியும் சின்னஞ் சிறுவர்களின் தேவையை நிறைவேற்றிய பாசம் மிக்க முதலமைச்சராக விளங்கினார் எம். ஜி. ஆர்.

குழந்தைகளைப் பாசத்தோடு தூக்கிக் கொஞ்சி மகிழ்வதில் தணியாத ஆசை கொண்டவர் பொன்மனச்

செம்மல்.

ஜாதி பேதம் பாராமல் குழந்தைகளை ஆதரித்து வந்தார். நரிக்குறவர் குழந்தையானாலும் கொஞ்சம் கூட முகம் சுழிக்காமல் தூக்கி முத்தம் கொடுத்து மகிழ்வார்.

ஏழைக் குழந்தைகளைத் தூக்கி மடியில் வைத்துக் கொஞ்சும் போது, எந்தக் குழந்தையாவது சிறுநீர் கழித்தால் கூட அதையும் பாசமாக ஏற்றுப் புன்னகை புரிவார். அருவருப்படைய மாட்டார்.

குழந்தைகளுக்குப் பொருத்தமாகப் பெயர் சூட்டும்போது, தங்கச் சங்கிலி, தங்கக் காப்பு, ரொக்கப் பரிசு முதலான பல வகைகளில் தாராளமாக உதவி செய்வார்.

ஒவ்வொரு வருடமும் ஜூன் ஜூலை மாதங்களில் ஏழைக் குழந்தைகளின் படிப்புச் செலவுக்காகத் தாய்மார்களுக்கு எம். ஜி. ஆர். உதவி வந்த மொத்தத் தொகை லட்சக் கணக்கில் இருக்கும். இப்படி இரண்டாம் பேருக்குத் தெரியாமல் விளம்பரம் இல்லாமலே அவர் செய்து வந்த உதவிகள் ஏராளம்.



கலைத் துறையிலும் இளம் வயதினரைப் போற்றி ஆதரித்த வள்ளல் எம். ஜி. ஆர். ஐந்து ஆண்டுகளுக்கு முன் சுமார் 10 வயதுச் சிறுவனாக விளங்கிய மாண்டலின் சீனிவாசனின் இசையைத் தற்செயலாகத் தொலைக் காட்சியில் பார்த்து மகிழ்ந்தார் எம். ஜி. ஆர். பரவசம் அடைந்தார். அந்தச் சிறுவனின் இசை ஞானம் அவரைக் கவர்ந்தது. உடனே சீனிவாசனை வரவழைத்துப் பாராட்டினார். அந்த ஞானச் சிறுவனைப் போற்றிப் புகழ்ந்து பரிசுகள் வழங்குவதற்காகவே கலைவாணர் அரங்கில் மாபெரும் விழாவை நடத்தினார். அதற்குப் பிறகுதான் மாண்டலின் சீனிவாசனின் புகழ் நாடெங்கும் பரவியது. இப்போது யு. சீனிவாசன் முதல் வரிசை இசைவாணராகப் புகழ் பெறுகிறார் என்றால் அதற்கு எம். ஜி. ஆரின் கைராசியும் ஒரு காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது.

அண்மையில் பேபி சரோஜா என்ற ஏழைச் சிறுமி எம். ஜி. ஆர். தோட்டத்துக்குச் சென்றாள். எப்படியோ மக்கள் திலகத்தின் பார்வை அவள் மீது பட்டது.

தான் மியூசிக் அகாடமியில் வீணை கற்றுக் கொள்வதாகவும், தனக்கு ஒரு வீணை வாங்கித் தரவேண்டும் என்றும் எம். ஜி. ஆரிடம் பேபி சரோஜா வேண்டுகோள் விடுத்தாள். உடனே வீணை வித்தகர் தஞ்சாவூர் கே. பி. சிவானந்தம் மூலம் நல்லதோர் புதிய வீணையை இரண்டாயிரம் ரூபாயில் வாங்கச் செய்தார். அந்த வீணை இயல் இசை நாடக மன்றத்தின் மூலம், ஒரு தனி விழாவில் டாக்டர் எம். ஜி. ஆர். சார்பில், சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி. அவர்களால் பேபி சரோஜாவுக்கு வழங்கப்பட்டது.

ஏர் இந்தியாவும் ஹிந்து நிறுவனமும் சேர்ந்து நடத்திய பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற சிறுவர் சிறுமியர் ஒவ்வொருவரையும் விழாவில் பாராட்டிய எம். ஜி. ஆர்., ஒவ்வொருவருக்கும் ஐயாயிரம் ரூபாய் தம் சொந்தப் பரிசாக வழங்கினார். கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த அன்பளிப்பை மக்கள் திலகம் வழங்கி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தருணத்தில் என் சொந்த அனுபவம் ஒன்றையும் சொல்லவேண்டும்.

1963 மே மாதம் 6 ஆம் நாள்

எங்கள் வீட்டின் புதுமனை புகு விழாவுக்கு அன்று மாலை எம். ஜி. ஆர். வருவதாகத் தகவல் அனுப்பினர். இதை அறிந்ததும் எங்கள் வீட்டுக் குழந்தை, எம். ஜி. ஆருக்குத் தானே மாலை அணிவிக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தது. எனவே,பெரிய ரோஜா மாலையைக் குழந்தையின் கையில் கொடுத்தோம்.

சொன்ன நேரத்தில் எம். ஜி. ஆர். வந்தார். குழந்தை பெரிய ரோஜா மாலையைத் தூக்க முடியாமல் தூக்கி எம். ஜி. ஆருக்குப் போட முனைந்தது. உடனே எம். ஜி. ஆர். மண்டியிட்டுக் குனிந்து குழந்தையிடம் மாலையை ஏற்றுக் கொண்டபின், அந்த மாலையை அவள் கழுத்திலேயே சூட்டி, அப்படியே வாரி அணைத்துத் தூக்கிக் கொண்டு வீட்டுக்குள் வந்தார். தம்மடியிலேவைத்துக்கொண்டு கொஞ்சி மகிழ்ந்தார். குழந்தைக்கு ஒரே கொண்டாட்டம்! எங்களுக்கும் தான்!

மக்கள் திலகம் எங்கள் உபசரிப்பை ஏற்றுச் சுமார் ஒரு மணி நேரம் கழித்துப் புறப்படும் வரை, அவரது மடியை விட்டுக் கீழே இறங்கவில்லை அந்த மழலைச் செல்வம். அவரது குழந்தைப் பாசம் எல்லோரையும் மெய் சிலிர்க்க வைத்தது.


அவர் நடித்த படங்களிலும் குழந்தைகளுக்கு ஏற்ற அறிவுரைகள் பாடல் காட்சிகளாகப் பரவசம் ஊட்டிய சிறப்பை மக்கள் அறிவார்கள்.

''நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி —
இந்த
நாடே இருக்குது தம்பி''

''நல்ல பேரை வாங்க வேண்டும்
பிள்ளைகளே — இந்த
நாடு என்னும் தோட்டத்திலே
நாளை மலரும் முல்லைகளே!''

''தூங்காதே தம்பி தூங்காதே —
வெறும்
சோம்பேறி என்ற பெயர்
வாங்காதே!''

முதலான எம். ஜி. ஆர். படப் பாடல்களிலும் அவரது குழந்தைப் பாசம் பொங்கித் ததும்பியது.



பழைய கதை; புதிய பாடல்

கறுப்பும் வெளுப்பும்



குழந்தைக் கவிஞர்

முண்டாசுக் கட்டுடனே
மிகக்கறுத்த தாடியுடன்
என்றென்றும் தோன்றிடுவார்
இன்பரசர் என்பவராம்.

அன்றொருநாள் பகலினிலே
அவர்தூங்கும் அறையினிலே
சென்றனரே ஓர்இளைஞர்
திடுக்கிட்டுப் போயினரே!

"எத்தனையோ மேடைகளில்
இவரையுமே பார்த்ததுண்டு.
இத்தினமே ஓர்உண்மை
யான்அறிந்து கொண்டுவிட்டேன்.

முண்டாசுக் கட்டதனை
மிகஅருகில் வைத்துவிட்டுக்
கண்மூடித் தூங்குவதால்
கண்டுகொண்டேன் உண்மைதனை.

தலைமுடியோ வெளுத்திருக்க,
தாடிமட்டும் கறுத்திருக்க,
இளைஞரைப்போல் காட்சிதரும்
இவர்வேடம் கண்டுகொண்டேன்!

நரைத்ததலை மறைத்திடவே,
நல்லதொரு தலைப்பாகை!
கறுப்புவர்ணம் தாடியிலே
கணக்காகப் பூசியுள்ளார்."

இளைஞருமே இவ்விதமாய்
எண்ணுகின்ற போதினிலே,
எழுந்துவிட்டார் இன்பரசர்.
என்னசொன்னார் தெரிந்திடுமோ?

"பிறந்தநாளில் என்னுடனே
பிறந்ததிந்தத் தலைமயிரும்.
இருபதாண்டு சென்றபின்னே
இந்தத்தாடி முளைத்ததப்பா.

தலைமுடிக்கு அறுபதென்றால்,
தாடிவயது நாற்பதுதான்.
இளைஞனே நீ இதைஅறிவாய்"
என்றுகூறிச் சிரித்தனரே!

மின்மினிக் கதைகள்



கால் பிடித்த மூடர்கள்

துறவி ஒருவரிடம் ஏராளமான சீடர்கள் இருந்தனர். அவர்களில் இரண்டு பேர் துறவியின் தேவைகளைக் கவனித்து வந்தனர்.

கால்களைப் பிடித்து விடுவது, சாப்பிடுவதற்குத் தேவையானவற்றைக் கொண்டு வருவது இருவரின் வேலையாக இருந்தது.

துறவியின் கெட்ட நேரம்... அந்த இருவருமே முரட்டு முட்டாள்களாக இருந்தனர்.

மிகவும் வயது முதிர்ந்தவரான துறவி அடிக்கடி படுத்து விடுவார். இரண்டு சீடர்களும் போட்டி போட்டுக் கொண்டு அவர் கால்களைப் பிடித்து விடுவார்கள்.

ஆனால், அவர்கள் இருவரும், 'நான்தான் முதலில் துறவியார்க்குத் தொண்டு செய்வேன். எனக்குத்தான் முதல் உரிமை' என்று அடிக்கடி சண்டை போட்டுக் கொள்வார்கள்.

இதைக் கண்டு துறவியார், சீடர்கள் தன் மீது வைத்திருக்கும் அன்பை எண்ணிப் பூரித்துப் போவார்.

இருந்தாலும் நாளுக்கு நாள் அவர்கள் சண்டை அதிகமாகிக் கொண்டே வந்தது.

இதைத் தீர்க்க என்ன செய்வது என்று சிந்தித்தார் துறவி.

தன் இரு சீடர்களையும் அழைத்து, "இனி உங்களுக்குள் எந்தச் சண்டையும் வரக் கூடாது. உங்களில் ஒருவன் என் வலது காலையும், இன்னொருவன் இடது காலையும் பிடித்து விடுங்கள்," என்றார். சீடர்கள் இருவரும் இதனை ஏற்றுக் கொண்டனர்.

சில நாட்கள் சென்றன. முதலாம் சீடன் ஏதோ வேலையாக வெளியூர் சென்று விட்டான்.

இரண்டாம் சீடன் மட்டும் துறவியின் இடது காலை வழக்கம் போல் பிடித்துக் கொண்டு இருந்தான்.

வலது காலையும் அதே போலப் பிடித்து விட்டால் நன்றாக இருக்கும் என்று துறவிக்குத் தோன்றியது.

சீடனைப் பார்த்து, ''என் இன்னொரு காலையும் நன்றாகப் பிடித்து விடு'' என்றார்.

அதற்குச் சீடன், ''எனக்குரிய காலைத்தான் நான் பிடிப்பேன். அந்த மடையனுக்கு உரிய காலை நான் பிடிக்க மாட்டேன்'' என்று பதில் சொன்னான்.

துறவி அவனை மீண்டும் மீண்டும் வற்புறுத்தினார்.

அவ்வளவுதான். அவனால் கோபத்தை அடக்க முடியவில்லை.

''அவனுக்குரிய காலையா என்னைப் பிடிக்கச் சொன்னீர்கள். அந்தக் காலை என்ன செய்கிறேன் பார்'' என்று கோபத்துடன் கத்திவிட்டு அந்தக் காலை ஓங்கி மிதித்தான்.

துறவி, ''ஐயோ அம்மா!'' என்று வலியால் துடித்தார். அவர் கால் நன்றாக வீங்கிவிட்டது.

சிறிது நேரம் சென்றது. ஊருக்குப் போயிருந்த இன்னொரு சீடன் வந்து சேர்ந்தான்.

நடந்ததை அறிந்த அவனால் கோபத்தை அடக்க முடியவில்லை. ''எனக்குரிய காலையா உதைத்து வீங்க வைத்தாய்? உன் காலை என்ன செய்கிறேன் பார்'' என்று கத்திவிட்டுப் பக்கத்தில் இருந்த பாறாங்கல்லைத் துறவியின் இன்னொரு காலில் போடத் தயாரானான்.


இதைக் கண்ட துறவி, ''என் காலை உடைத்து விடாதே'' என்று கெஞ்சினார்.

ஆனால், அவன் கேட்கவில்லை. துறவியின் இடது காலின் மீது பாறாங்கல்லைப் போட்டான். அவர் கால் உடைந்து நசுங்கியது.

இதைக் கண்ட இன்னொரு சீடன், ''என் காலையா உடைத்து விட்டாய். உன் காலை என்ன செய்கிறேன் பார்'' என்று கத்திவிட்டு இன்னொரு பாறாங்கல்லைத் தூக்கித் துறவியின் வலது காலின் மீது போட்டான்.

அந்தச் சீடர்களின் முட்டாள்தனத்தால் துறவி வாழ்நாள் முழுமையும் இரு கால்களும் இல்லாத நொண்டி ஆனார்.

எதையும் நம்பும் ஏமாளி!



ஒரு நாள் உழவன் ஒருவன் தன் கழுதையைக் கயிற்றால் கட்டி இழுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்தான்.

வழியில் அவனைப் பார்த்த திருடன் அவன் முட்டாள் என்பதைத் தெரிந்து கொண்டான்.

புத்திசாலியான அந்தத் திருடன் தன் நண்பனைப் பார்த்து, ''எப்படியேனும் அக்கழுதையை உரிமையாளன் அறியாமல் திருட வேண்டும்'' என்றான்.

வியப்படைந்த மற்றவன், ''எப்படி உன்னால் முடியும்?'' என்று கேட்டான்.

அதற்கு அத்திருடன், ''என் பின்னாலேயே வா. உனக்குப் புரியும்'' என்றான்.

அந்த உழவனின் பின்னால் சென்று, அவனறியாமல் கழுதையைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்தான். தன் நண்பனிடம் கழுதையை ஓட்டிச் செல்லுமாறு சைகை செய்தான்.

பிறகு அந்தக் கயிற்றைத் தன் கழுத்தில் மாட்டிக் கொண்டு அவன் பின்னால் சென்று கொண்டிருந்தான்.

தன் நண்பனால் ஓட்டிச் செல்லப்பட்ட கழுதை, கண் பார்வைக்கு மறைந்ததும் அவன் நகராமல் அப்படியே நின்று விட்டான்.

கழுதைக்காரன் கயிற்றை இழுத்துப் பார்த்து வராததால் திரும்பிப் பார்த்தான்.

தன் கழுதைக்குப் பதில் ஒரு மனிதனின் கழுத்தில் கயிறு இருப்பதை அறிந்து திகைத்தான் அவன்.

''நீ யார்?'' என்று அவனைப் பார்த்துக் கேட்டான்.

உடனே அந்தத் திருடன் கண்ணீர் வடிய அழுது கொண்டே, ''ஐயா! நான் உங்கள் கழுதைதான். என் கதை வேடிக்கையானது.

''இளமையிலேயே நான் கெட்டவனாக இருந்தேன். என்னிடம் எல்லாக் கெட்ட பழக்கங்களும் இருந்தன. ஒருநாள் நன்றாகக் குடித்துவிட்டு வீட்டுக்கு வந்தேன். என் தாயார் அறிவுரை சொன்னார்கள். நான் அவரைப் பிடித்துத் தள்ளியதோடு, அடி அடியென்று அடித்தும் விட்டேன்.

என் கொடுமையைத் தாங்க முடியாத அவர்கள் என்னைக் 'கழுதையாகப் போ' என்று சாபம் கொடுத்தார்கள். நான் உடனே கழுதையாகிவிட்டேன்.

''என்னை நீங்கள் சந்தையிலே விலைக்கு வாங்கினீர்கள். என்னை அடித்து உதைத்துக் கொடுமை செய்தீர்கள். நான் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு உண்மையாக உழைத்து வந்தேன்.

இன்றைக்குத்தான் எங்கம்மா இரக்கப்பட்டு எனக்காகக் கடவுளிடம் வேண்டி இருக்கிறாங்க. எனக்கும் உண்மையான உருவம் வந்து விட்டது'' என்றான்.

இதைக் கேட்ட கழுதைக்காரன், ''ஐயோ! நீ மனிதன் என்று தெரியாமல் உன்னை எப்படி எப்படியோ துன்புறுத்தி விட்டேன். என்னை மன்னித்து விடு'' என்று அவன் கழுத்தில் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டான்.

இருவரும் தங்கள் வழியே சென்றனர்.

ஒரு வாரம் கழிந்தது. கழுதைக்காரன் வேறு கழுதை வாங்குவதற்காகச் சந்தைக்குச் சென்றான்.

அங்கே அவன் கழுதையே விற்பனைக்கு நின்றிருந்தது!

அந்தக் கழுதை தன் முதலாளியைக் கண்டதும் மகிழ்ச்சியில் கத்தியது.

அதைப் பார்த்த அவன் அதன் அருகே சென்று, ''அயோக்கியப் பயலே! மீண்டும் குடித்துவிட்டு உன் தாயை அடித்தாயா? இரண்டாம் முறையாக உன்னை வாங்குவதற்கு என்னை என்ன மடையன் என்று நினைத்துக் கொண்டாய்?'' என்று சொல்லிவிட்டு அதன் முகத்தில் துப்பிவிட்டு நகர்ந்தான்.


முட்டாள் வணிகன்

ஓர் ஊரில் முட்டாள் ஒருவன் இருந்தான். அவனிடம் சிறிது பொருள் இருந்தது. அதை முதலாக வைத்து மளிகைக் கடை ஒன்றைத் தொடங்கினான்.

விரைவில் பெரும் பணம் சேர்க்க நினைத்த அவன் நெய்யில் விளக்கெண்ணெயைக் கலந்து விற்பனை செய்தான்.

அவன் கடையில் வாங்கிய நெய்யில் சமைக்கப்பட்ட உணவை யாராலும் சாப்பிட முடியவில்லை.

எல்லோரும் "என்ன நெய் விற்கிறாய்?" என்று கடையின் முன்



நின்று கூச்சல் போட்டார்கள்.

அங்கு வந்த காவலர்கள் கடையிலிருந்த நெய்யுடன் கடைக்காரனையும் இழுத்துக் கொண்டு நீதிமன்றம் சென்றார்கள்.

நெய்யின் கெட்ட வாசனையைப் பார்த்தவுடன் நீதிபதி அது கலப்படம் செய்யப்பட்ட நெய் என்று உணர்ந்தார்.

"கலப்படமான நெய்யையா விற்கிறாய்? உனக்கு இன்று தண்டனை தரப் போகிறேன். மூன்று தண்டனைகளைக் கூறுவேன்.

"அவற்றுள் உனக்குப் பிடிக்கின்ற ஏதேனும் ஒரு தண்டனையை நீ அனுபவிக்கலாம்" என்றார்.

"என்ன தண்டனை?" என்று கேட்டான் வணிகன்.

"இந்தக் கலப்படமான நெய் முழுவதையும் நீ சாப்பிட வேண்டும். அல்லது நூறு கசையடி வாங்க வேண்டும். இல்லாவிட்டால் ஆயிரம் ரூபாய் அபராதம் கட்ட வேண்டும்" என்றார் நீதிபதி.

வணிகன் சிந்தித்தான். 'நாம் அந்த நெய்யையே எளிதாகச் சாப்பிட்டு விடுவோம்' என்ற எண்ணத்தில் நீதிபதியைப் பார்த்து, "முதல் தண்டனையை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்றான்.

நெய்யிருந்த பாத்திரம் அவன் முன் வைக்கப்பட்டது. அதிலிருந்து ஒரு கரண்டி நெய்யை எடுத்து வாயில் போட்டான். நாற்றம் தாங்க முடியவில்லை. குமட்டிக் கொண்டு வந்தது. இருந்தாலும் சகித்துக் கொண்டு இன்னொரு கரண்டி நெய்யை எடுத்து வாயில் போட்டான்.

அவ்வளவுதான், அவன் தலை சுற்றத் தொடங்கியது. மயக்கம் வரும் போல இருந்தது.

தன்னால் அந்த நெய் முழுவதையும் சாப்பிட முடியாது என உணர்ந்தான் அவன்.

"நீதிபதி அவர்களே! முதல் தண்டனையை என்னால் தாங்க முடியாது.

நூறு கசையடி வாங்கிக் கொள்கிறேன்'' என்றான்.

உடனே, நீதிபதி கசையடி தருமாறு கட்டளை இட்டார்.

கசையால் அடிப்பவன் வணிகனை ஓங்கி ஓங்கி அடித்தான். கசையடி தாங்காமல் அவன் உடல் எல்லாம் வீங்கி விட்டது. நாற்பது கசையடிகள் கூட முடியவில்லை.,


''நிறுத்துங்கள். என்னால் இனி ஒரு அடி கூடத் தாங்க முடியாது. நான் ஆயிரம் ரூபாய் அபராதம் கட்டுகிறேன். என்னை விட்டுவிடுங்கள்'' என்று கெஞ்சினான் அவன்.

இதைக் கேட்ட நீதிபதி கசையடியை நிறுத்துமாறு கட்டளையிட்டார்.

வணிகன் ஆயிரம் ரூபாய் அபராதம் கட்டியபின் அவனை விடுதலை செய்தார்.

இவ்வாறாக, வணிகன் தன் முட்டாள்தனத்தால் ஒரு குற்றத்திற்கு மூன்று தண்டனைகளைப் பெற்றான்.

— பேராசிரியர் எ. சோதி தொகுத்த 'மூடன் மட்டி மடையன்' என்ற புத்தகத்திலிருந்து. வெளியிட்டோர்: நன்மொழிப் பதிப்பகம், புதுச்சேரி — 1.





என் குழந்தைப் பருவம்

— மீ.ப.சோமு —

'பல்கலை வித்தகர்' அதாவது பல துறைகளிலும் வல்லவர் என்ற சிறப்புப் பட்டத்தை மீ. ப. சோமு அவர்களுக்கு வழங்கியிருக்கிறது தருமபுர ஆதீனம். மிகவும் பொருத்தமான பட்டம்.

இவர் ஒரு புலவர், கவிஞர், கதாசிரியர், நாவல் ஆசிரியர், நாடக ஆசிரியர், கட்டுரையாளர், பத்திரிகாசிரியர், இசை நுணுக்கம் அறிந்தவர், கல்வெட்டு ஆய்வாளர், சித்தர் பாடல்களை நன்கு உணர்ந்தவர். ஒலிபரப்புத் துறையில் 40 ஆண்டுகள் பணியாற்றிப் பல புதுமைகளைப் புகுத்தியவர். தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல பேச்சாளர். சமஸ்கிருதம், ஹிந்தி, மலையாளம் ஆகிய பிற மொழிகளையும் அறிந்தவர்.

இவர், தமது 17 — வது வயதிலே 'ஆனந்த விகடன்' நடத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசையும், 18 — வது வயதிலே பாரதி தங்கப் பதக்கத்தையும் பெற்றவர். இவரது கவிதைத் தொகுப்பான 'இளவேனில்', சிறுகதை நூலாகிய ''கேளாத கானம்' — இரண்டும் தமிழக அரசின் பரிசு பெற்றவை. இவர் பல நாடுகளுக்கும் சென்று வந்து எழுதிய 'அக்கரைச் சீமையில்' என்ற நூல் சாகித்ய அகாதமி பரிசையும், இவரது கட்டுரைகளடங்கிய 'நமது செல்வம்' என்ற நூல் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் பரிசையும் பெற்றுள்ளன.

ரசிகமணி டி. கே. சி., ராஜாஜி, கல்கி போன்ற அறிஞர் பெருமக்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களின் பேரன்பைப் பெற்றவர். ராஜாஜியும் இவரும் கூட்டாகச் சேர்ந்து இரண்டு நூல்களை எழுதியிருக்கிறார்கள்!

இவர் 1954 — 56 — இல் 'கல்கி' பத்திரிகை ஆசிரியராகவும், 1959 — இல் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும் விளங்கியவர்., தற்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

சிறுபிள்ளையாகத் துள்ளித் திரிந்த நாட்களை எண்ணிப் பார்க்கும் போது, எல்லாருக்குமே ஒரு தனியான களிப்பு ஏற்படுவது இயல்பேயாகும்! அதிலும் அந்த நாட்கள் செல்வச் செழிப்போடு திகழ்ந்த நாட்களாக இருந்து விட்டாலோ, சொல்லவே வேண்டாம்! களிப்போடு பெருமிதமும், உவகையோடு உற்சாகமும் உள்ளத்தில் பால் பொங்குவது போல் பொங்க ஆரம்பித்து விடும் அல்லவா!

''திருநெல்வேலி ஜில்லா, திரு



நெல்வேலித் தாலுகா, திருநெல்வேலிப் பாலம், திருநெல்வேலி ஜங்ஷன், மேலவீரராகவபுரம் சரகம், மீனாட்சிபுரம் கிராமம் மீ. பொ. பரமசிவம்பிள்ளை குமாரனும், மீ. பொ. சுடலை முத்துப் பிள்ளை அபிமான புத்திரனுமான மீ. ப. சோமசுந்தரமாகிய நான் மேற்படி ஜில்லா, மேற்படி தாலுகா, மேற்படி சரகம், மேற்படி கிராமம்...'' என்று ரிஜிஸ்டர் ஆபீஸில் ஆவணக் களரிப் பத்திரத்தில் எழுதிக் கையெழுத்துப் போட்டிருக்கிறேன். அத்தகைய மீனாட்சிபுரம் என்னும் கிராமத்தில் 'குட்டக்கரை வீடு' என்று அழைக்கப் பெற்ற பரம்பரை நிலக்கிழார் இல்லத்தில் 1921 இல் நான் பிறந்தேன்.

நிலபுலன்களும், வாணிபமும், பணியாட்களும் நிரம்பியிருந்த பெரிய குடும்பம் அது. தமிழ்ப் பண்டிதர்கள் சொல்வது போல், ''நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக'' எனது இளமைப் பருவம் நான்கு வயது வரை வசதிகளிலும் செழிப்புகளிலும் மிதந்தது!

நான்காவது வயதில் என் தந்தை எனக்கு 'அக்ஷராப்யாஸம்' என்று அந்தக் காலத்தில் அழைக்கப் பெற்ற பள்ளியில் சேர்க்கும் விழாவை ஒரு கல்யாணத்தைப் போலே பட்டணப் பிரவேசமும், இசைக்கச்சேரிகளுமாக ''ஜாம் ஜாம்'' என்று நடத்தினார்! பிள்ளை படிப்பதற்காக நீண்ட தூரம் போகக் கூடாது என்று நினைத்த என் தகப்பனார், எங்கள் குட்டக்கரை வீட்டை ஒட்டியே பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவழித்து நகராண்மைக் கழகத்துப் பள்ளிக்கு ஒரு புதிய கட்டடமே கட்டிக் கொடுத்தார்!

அதெல்லாம் ஓர் இனிய கனவு! கனவுதான்; ஏனென்றால் எனக்கு நான்கு வயது முடிவதற்குள்ளேயே என் தந்தை திடீரென்று காலமானார்! தூத்துக்குடித் துறைமுகத்துக்குச் சற்றுத் தொலைவிலே நடைபெற்ற 'முத்துக் குளித்தல்' நிகழ்ச்சியிலே இவர் தொடர்புற்று, இலட்சக்கணக்கில் ஒரு பெரிய வணிக ஒப்பந்தம் செய்து முத்துக்களை ஏலம் எடுத்துக் கொண்டிருந்தார். அதற்காகச் சில நாட்கள் தொடர்ச்சியாகக் கடலுக்குள்ளேயே கப்பலை நங்கூரமிட்டுத் தங்கினார். ஊர் திரும்பும்போது 'டபுள் நிமோனியா!' அந்தக் காலத்தில் இப்போதுள்ள ஊசி மருந்துகள் எல்லாம் ஏது? ஒரே வாரத்தில் ஒரு நள்ளிரவில் உயிர் பிரிந்தது.

அவ்வளவுதான்! அந்த நள்ளிரவிலேயே நான் ஏழையானேன்!

ஆம்; எங்கள் வியாபாரக் கிளைகளை எல்லாம் மூட நேர்ந்தது. சிவபூஜையைத் தவிர உலக விவகாரம் எதுவுமே தெரியாத என் பெரிய தந்தை, பலருடைய ஏமாற்றுகளுக்கு உள்ளானார். சொத்துக்கள் பெரும்பாலும் கைமாறின. நான் பிறந்த அந்த அரண்மனை போன்ற வீடு மட்டும் நான், ''மேஜர்'' ஆகும்வரை சில பெரிய தனவந்தர்களின் கைப்பிடியிலே சிக்கி, விற்பனைக்காகக் காத்திருந்தது!

சோகமான திருப்பந்தான். ஆனாலும் எங்கள் குட்டக்கரை வீடு எங்கள் வசம் இருந்த நாள்வரை, எந்தக் கஷ்டமும் எதிர்காலச் சிக்கல்களைப் பற்றிய கவலைகளும் இல்லாமல் துள்ளியே திரிந்தேன்!

'துள்ளித் திரிதல்' என்றால் எழுத்துக்கு எழுத்து அது உண்மை! ஏனென்றால் எங்கள் குட்டக்கரை வீட்டிலே 'டேபிள் டென்னிஸ்' ஆடுவதற்கும்,

பின்புறம் 'கிரிக்கெட்' ஆடுவதற்கும், மிகப் பெரிய இடங்கள் என் தந்தையால் அமைக்கப்பட்டிருந்தன. அதோடு மாடியிலே இசைக் கச்சேரிகள் நடப்பதற்குரிய வகையில், ஒலி நுட்பம் தேர்ந்த முறையிலே ஒரு பெரிய அரங்கம் இருந்தது. என் தந்தை இலக்கியப் புலவர்களிடமும், இசைக் கலைஞர்களிடமும் ஆதரவோடு கூடிய அன்பைச் செலுத்தும் மன இயல்பு கொண்டவர். என் அன்னை சிவபூஜையில் நாள்தோறும் தொன்மையான மரபுப்படி சங்கீதம் பாடி, தேவாரத் திருமுறைகளை ஓதி இசை வழிபாடு இயற்றுவார். என் தமக்கையர் பல ஆண்டுகள் வீணை பயின்றவர்கள் — என் தாயாரின் அம்மான் ஒரு பெரிய சாரங்கிக் கலைஞர்! எனவே வீடு முழுவதும் ஒரே இசைமயமாகவே இருக்கும்!

என் பெரிய தந்தை மறைந்த போது எனக்கு வயது ஒன்பது. அதன் பிறகு என் தாயாரின் அரவணைப்பில் வளர்ந்தேன். எத்தனையோ வசதிகளோடு இருந்த குடும்பம், வறுமையாகிவிட்டது என்று, பிள்ளைக்குத் தெரிந்து விடக்கூடாது என்று எண்ணிய என் தாயார், என்னை எந்தக் கவலையும் ஏற்படாதவாறு மிகவும் செல்லமாக வளர்த்தார். கிராமபோனும், இசைத் தட்டுக்களுமாக வாங்கிக் கொடுத்துக் கொண்டே இருந்தார்.

பள்ளிப் படிப்பில் என்னை மேற்பார்வை செய்வதற்கு வீட்டில் பெரியவர்கள் யாரும் கிடையாது. என்றாலும் என் அதிர்ஷ்டம் எனக்கு மூன்று சிறந்த பள்ளி ஆசிரியர்கள் வாய்த்தார்கள். நான் கணிதத்திலும், ஆங்கிலத்திலும், தமிழிலும் முதல் மதிப்பெண் வாங்குவேன். இந்தப் பெருமை முழுவதும் அந்த மூன்று ஆசிரியர்களையே சாரும்.

என்னுடைய கணக்கு வாத்தியார் டி.வி. சுந்தரமய்யங்காரின் அம்மாஞ்சி திருக்குறுங்குடி தோத்தாத்திரி ஐயங்கார். இவர் பள்ளித் தலைமை ஆசிரியர். பின்னர் அடுத்த பள்ளிக்கு நான் வந்ததும், ரங்கசேஷ ஐயங்கார் என்ற அற்புதமான ஆசிரியர். அவரோடு எஸ். வி. கிருஷ்ணராவ் என்னும் தமிழாசிரியர்! அன்போடு என்னை ஊக்கப்படுத்திய இந்த மூன்று ஆசிரியர்களும் என் பிள்ளைப் பிராயத்தோடு இணைந்த நல்லாசிரியப் பெருமக்கள்! இவர்களை நன்றியோடு நினைப்பதற்கு இது ஒரு சந்தர்ப்பம் என்று கருதி மகிழ்கிறேன்!

ஐந்தாம் வகுப்பு வரை மீனாட்சிபுரம் நகராண்மைப் பள்ளி! பிறகு, எட்டாம் வகுப்பு முடிய வயற்காட்டுத் தெரு என். பி. கிருஷ்ணய்யர் மேனிலைப் பள்ளி! பின்னர் உயர் நிலைக் கல்வியிலிருந்து கல்லூரிக் கல்வி முடிய திருநெல்வேலி ஹிந்துக் கல்லூரி.

ஹிந்துக் கல்லூரியின் உயர்நிலைப் பள்ளியிலே படிக்கும்போது, டி. எஸ். கிருஷ்ணசாமி ஐயர் என்னும் தலைமை ஆசிரியர் எனக்கு ஆங்கிலத்திலே சிறப்பான வகுப்புக்கள் நடத்திப் பயிற்சி அளித்தார். வி. சிதம்பர ராமலிங்கம் பிள்ளை என்னும் தமிழாசிரியர் வடமொழியும் தமிழும் கற்றுத் தேர்ந்த ஒரு மாபெரும் இலக்கிய இலக்கணக் கடல்! எனக்கு இவர் தமிழ் பயிற்றுவித்தார். டி. கே. சி. அவர்களின் மருமகன் டி. கே. சண்முகசுந்தர முதலியார் எனது தேர்வுப் பரடமான கணக்கிலே பயிற்சி தந்தார். இந்த மூவரும் எனக்குக் கல்வி கற்பித்ததோடு, வாழ்வில் சில குறிக்கோள்கள் உண்டாவதற்கும் காரணமானார்கள்!

என் தந்தை என்னை ஒரு பெரிய வழக்குரைஞராகக் கனவு கண்டார். என் அன்னையோ என்னை ஒரு சங்கீத



வித்துவானைக் கற்பனை செய்தார். இதற்கு ஏற்ப, எங்கள் குட்டக்கரை வீட்டின் பெரிய மாடியிலே ஒரு பகுதியில் கல்லூரி மாணவர்கள் தங்கிப் படித்து வந்தார்கள். அவர்களிலே சட்டத்துறையிலே வல்லவரான செல்லபாண்டியன் (பிற்கால சபா நாயகர்) அவர்களும் இருந்தார்கள். அவருடைய கல்லூரிப் படிப்பின் காலம் அது! அவரைப் போலவே நெல்லை வழக்கறிஞர் கஸ்தூரி ஐயங்கார் கல்லூரி மாணவராகத் தங்கியிருந்தார்! இந்தச் சட்ட நிபுணர்களோடு, இசையிலே தேர்ந்த வி. வி. சடகோபனும், காயாமொழி ஆதித்தனூர் குடும்பத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் சிலரும் இருந்தார்கள். மாலை நேரங்களில் தாமிரவருணிக் கரையில் ரயில் பாலத்தடியில் மணலிலே இருந்து பாடிக் கொண்டே இருப்போம்! ஓய்வு நேரங்களில் மாடிக்குப் போனால், ஒரே இசை மயமாகவே இருக்கும்! அதோடு, சென்னையிலிருந்து நெல்லைக்கு வருகிற பெரிய பெரிய பாடகர்கள் எல்லாம் வி. வி. சடகோபனுக்கு நெருங்கிய பழக்கம்! எனவே, பல இரவுகளில் ''ஸ்பெஷல்'' கச்சேரிகள் நடந்த வண்ணமாக இருக்கும்.

ஆம்; நானும் சிறு வயதில் நன்றாகப் பாடுவேன். சாரங்கியும் வீணையும் சிறிது காலம் பயின்றேன். இந்த இரண்டு இசைக் கருவிகளும் எங்கள் குடும்பத்தில் வழிவழியாக வந்த வழிபாட்டு இசைக் கருவிகள் என்பதால், என் தாயார் என் இசை முயற்சிகளை மிகவும் ஊக்கப்படுத்தி வந்தார்.

இதெல்லாம் பதினைந்து வயது வரை! அதன் பிறகு என் பாதையே மாறிவிட்டது! ஹிந்து கல்லூரியில் ஓர் இலக்கியச் சொற்பொழிவுக்கு வந்த ரசிகமணி டி. கே. சி. யிடம் என்னை எங்கள் தலைமை ஆசிரியர் கிருஷ்ண சுவாமி ஐயர் அறிமுகப்படுத்தினார். அந்த வினாடியிலிருந்து இசைப் பாதை இலக்கியப் பாதையிலே திரும்பியது. தமிழாசிரியர் அருணாசலக் கவுண்டரும், ஆங்கிலப் பேராசிரியர் சீனிவாச ராகவனும் நெருங்கிய உறவானார்கள். கல்கி ரா. கி. அவர்களும், ராஜாஜி அவர்களும் ரசிகமணியின் வாயிலாக அறிமுகமானார்கள். பிற்காலத்தில் ரசிகமணியையும் விட அதிகமாக ராஜாஜியின் உறவு எனக்கு மிகவும் நெருங்கிய ஆன்மநேயத் தொடர்பாகவே மலர்ந்தது! இந்தத் தொடர்புகள் அனைத்தும் சேர்ந்து, எனது பிள்ளைப் பிராயத்தின் பயிற்சிகளுக்கு ஓர் வடிவம் அமையவும், வாழ்வின் குறிக்கோளிலே ஒரு பிடிப்பு ஏற்படவும் வகை செய்தன.

இப்போது எனக்கு அறுபத்தேழு வயது நடக்கிறது. இன்று என் பிள்ளைப் பிராயத்தைத் திரும்பிப் பார்க்கிறேன். அண்ணா நகரின் எட்டாவது நேர் சாலை



யில் இருந்து கொண்டு, மீனாட்சிபுரம் குட்டக்கரை வீட்டை மனக்கண்ணினால் பார்க்கிறேன். மீனாட்சிபுரம் எனக்குப் புதிதாக இருக்கிறது. நான் மீனாட்சிபுரத்துக்குப் புதியவனாக இருக்கிறேன். என்றாலும், பிறந்த கிராமமும், பிறந்த வீடும் வெளிப் பார்வையிலேயா இருக்கின்றன? அவை அகப் பார்வையிலே அல்லவோ நிலைபெற்று நிற்கின்றன!

மீனாட்சிபுரம் என்பது என் உள்ளத்திலே இருக்கிறது. குட்டக்கரை வீடு என் நெஞ்சிலே உறைகிறது. எனது பிள்ளைப் பிராயம் இவற்றோடு பின்னிப் பிணைந்து காண்கிறது! இவற்றையும், தாமிரவருணி நதியையும், குறுக்குத் துறைக் கோவிலையும், பாலத்தையும், மணற்பரப்பையும் கோகுலம் வாசகர்களோடு சேர்ந்து எண்ணிப் பார்ப்பதிலே உண்டாகிற இந்த உவகைக்காக ஆசிரியருக்கும், உங்களுக்கும் நன்றி செலுத்துகிறேன்!

குழந்தை இலக்கியப் போட்டியில் பரிசு பெற்றோர்

குழந்தை எழுத்தாளர் சங்கம் அறிவித்த குழந்தை இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்ற கீழ்க்கண்டவர்களுக்குக் கோவையில் நடந்த குழந்தை இலக்கிய மாநாட்டில் மத்திய இணை அமைச்சர் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்கள் பரிசுகள் வழங்கினர்:

கவிதை

முதற் பரிசு ஏவி. எம். தங்கப்பதக்கம்



மு. வை. அரவிந்தன்
கிருஷ்ணகிரி

இரண்டாம் பரிசு வெள்ளிப் பதக்கம்



இர. வாசுதேவன்
சென்னை

நாடகம்

முதற் பரிசு ஏவி. எம். தங்கப் பதக்கம்



விர. வசந்தன்
திருச்சி

இரண்டாம் பரிசு வெள்ளிப் பதக்கம்




டாக்டர் நாகப்பா
நாச்சியப்பன்
காரைக்கால்

நாவல்


எல்லப்பா — ரங்கம்மாள் நினைவுப் பரிசு

முதற் பரிசு
ரூ. 1000/–



பூதலூர் முத்து
மதகடிப்பட்டு (புதுவை)

இரண்டாம் பரிசு
ரூ. 500/–



இரா. பிரபாகரன்
காளிங்கவரம்

சிறுகதை

செல்லப்பன் நினைவுப் பரிசு

முதற் பரிசு
ரூ. 1000/–



ஜே. சீனிவாசன்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
சிதம்பரம்.

இரண்டாம் பரிசு
ரூ. 750/–



இராம சிவகுமார்
கந்தசாமிக் கண்டர் கல்லூரி,
வேலூர் (சேலம்)

ஐயோ வேண்டாம்!

ஒரு கிராமத்துப் பெரியவர் பட்டணத்தில் உள்ள ஒரு டாக்டரிடம் சென்று, "என்னால் சரியாக உணவு சாப்பிட முடிவதில்லை. பேசினாலும் வலிக்கிறது" என்றார்.

டாக்டர் அந்தப் பெரியவரைப் பரி, சோதித்துவிட்டு, "தொண்டையில் ஒரு கட்டி இருக்கிறது. மண்டையிலே ஆபரேஷன் செய்து விடலாம்" என்றார்.

"ஐயோ! மண்டையிலே ஆபரேஷனா? வேண்டாம் டாக்டர்" என்று



அந்தப் பெரியவர் அலறினார்.

"மண்டையில் ஆபரேஷன் இல்லை. மண்டே (Monday) அதாவது திங்கட்கிழமை ஆபரேஷன் செய்யலாம்" என்று டாக்டர் கூறிய பிறகுதான் அவர் நிம்மதி அடைந்தார்.

— பி. கோவிந்தசாமி (5703), பேதாதம்பட்டிபுதூர்.

நல்ல பதில்



ஒருவர் வீட்டில் நெருப்புப் பிடித்து விட்டது. தீயணைக்கும் படையைத் தொலைபேசியில் அவர் அழைத்தார்.

வீட்டுக்காரர்: ஐயா, எங்கள் வீட்டில் நெருப்பு! சீக்கிரம் வாருங்கள்!

தீயணைப்பு அதிகாரி: அப்படியா? இடத்தைச் சொல்லுங்கள்!

வீட்டுக்காரர்: எங்கள் வீட்டுச் சமையல் அறையில்தான்.

அதிகாரி: உங்கள் வீட்டுக்கு எப்படி ஐயா வருவது?

வீட்டுக்காரர்: உங்களிடம்தான் தீயணைக்கும் வண்டி உள்ளதே. அதில் வாருங்கள்."

அதிகாரி: ?! ?!

—ஏ. வி. கணேஷ் பிரகாஷ் (18,434), சேலம் — 7.

சிருங்காரவனம்

உலக சாதனை

இமய மலையில் உள்ள கலாபக்தார் என்ற சிகரத்தில், 'யோகியோ'



என்ற ஜப்பானியர் ஏறி உலக சாதனை புரிந்திருக்கிறார். இந்தச் சிகரத்தின் உயரம் 5,545 மீட்டர்தான். இது ஒரு சாதனையா என்கிறீர்களா? ஆமாம், அந்த ஜப்பானியருக்கு இரண்டு கால்களும் இல்லை. கைகளாலேயே ஏறியிருக்கிறாரே?

ஆதாரம்: சௌந்தர்யம் இதழ்
தகவல்: டி. எல். சிவகுமார் (9815), வந்தவாசி.

யோசி, வாசி




1. பெரியோர் சிறியோருக்கு வழங்கும் 'சி'
2. மருத்துவருக்கும், தையற்காரருக்கும் உதவும் 'சி'
3. குளக்கரைப் படிக்கட்டுகளில் உள்ள 'சி'
4. வாசனை அறிய உதவும் 'சி'
5. ஜோதிடக் கலையில் வரும் 'சி'
6. 'சி'யில் முடியும் மாதம்,
7. 'சி'யில் முடியும் புண்ணியத் தலம்.

விடைகள்: 1. ஆசி, 2. ஊசி, 3. பாசி, 4. நாசி, 5. ராசி, 6. மாசி, 7. காசி.

— இரா. பிரசன்னா (3221), கரூர்.

அதிசயம், ஆனால் உண்மை!

நான் சமீபத்தில் திருச்செந்தூர் சென்றிருந்தேன். கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டுத் திரும்பும் வழியில் ஏகப்பட்ட கூட்டம். என்னவென்று பார்த்தால், நம்பவே முடியவில்லை. அது என்ன



தெரியுமா?

ஒரு நாய் படுத்திருக்க, பக்கத்தில் ஒரு குரங்கு உட்கார்ந்து பேன் பார்த்துக் கொண்டிருந்தது. குரங்குக்கும், நாய்க்கும் ஆகாது என்பார்கள். ஆனால், இங்கே நான் கண்ட காட்சி...! என்னிடம் காமிரா இருந்திருந்தால், அந்த அதிசயக் காட்சியைப் படம் பிடித்திருப்பேன்.


— தங்கை கார்த்திகைராஜா (16,097), விருத்தாசலம்.

கவலையின் காரணம்

கங்காரு — 1: ஏன் கவலையா இருக்கே?

கங்காரு — 2: நேற்று என் குட்டியை யாரோ 'பிக்பாக்கெட்' அடிச்சிட்டுப் போயிட்டாங்க.

— எஸ். மாதவன் (204), திருச்சி — 14.






ஜாஸ் சிட்டி

'ஜாஸ்' என்பது பிரபலமான மேல் நாட்டு வாத்தியம். 19 – ஆம் நூற்றாண்டின் இறுதியில்தான் இந்த வாத்தியம் புதிதாகத் தோன்றியது. முதன் முதலாக இந்த வாத்தியம் தோன்றிய நகரை 'ஜாஸ் சிட்டி' என்று காரணப் பெயர் சூட்டி அழைக்கின்றனர். இந்த 'ஜாஸ் சிட்டி'தான் அமெரிக்காவிலுள்ள நியூ ஆர்லியன்ஸா நகரம்.

— எஸ். ஜெயஸ்ரீ (1254),
திருச்சி – 14.

இவற்றில் ஒன்று



கிருஷ்ணா, கோதாவரி, நர்மதா, காவேரி – இவற்றில் ஒரு நதி மட்டும் தனித்து விளங்குகிறது. அது எந்த நதி? என்ன விசேஷம்?

மேலே குறிப்பிட்ட நான்கு நதிகளில் மூன்று நதிகள் மேற்கிலிருந்து கிழக்காக ஓடி வங்கக் கடலில் கலக்கின்றன. ஆனால், நர்மதா நதி மட்டும் கிழக்கிலிருந்து மேற்காக ஓடி அரபிக் கடலில் கலக்கிறது.

— கே.ச. பக்தவத்சலம் (6426),
விருத்தாசலம் – 1.

தாய்நாட்டின் சொத்து



கம்யூனிஸ்ட் தலைவராக இருந்த ப. ஜீவானந்தம் அவர்கள் தொடக்கத்தில் காங்கிரசில் இருந்தபோது காந்திஜியைச் சந்தித்தார்.

"உங்களுக்கு ஏதேனும் சொத்து உள்ளதா?" என்று கேட்டார் காந்திஜி.

"தாய்நாடுதான் என் சொத்து" என்றார் ஜீவானந்தம்.

"இல்லை, இல்லை. நீங்கள்தான் தாய்நாட்டின் சொத்து" என்றார் காந்திஜி.

— பி. செந்தில்குமார் (6861),
கோவை – 4.

கேஸட்

நாம் விரும்பும் பாட்டு, பேச்சு முதலியவற்றை இன்று கேஸட்டில் பதிவு செய்து, மீண்டும் மீண்டும்



கேட்டு மகிழ முடிகிறது. கேஸட் என்ற பெயர் எப்படி வந்தது? பெட்டியை CASSE என்று பிரெஞ்சு மொழியில் சொல்லுவார்கள். ஏதாவது ஒரு சொல்லோடு ETTE என்று சேர்த்தால், 'சிறிய' என்று அர்த்தம் வரும். அதாவது 'CASSETTE' என்றால், 'சிறிய பெட்டி' என்று பொருள்!

— த. ஜெயபிரகாஷ் (17,387),
கோட்டார்.

பொன்மொழிகள்



* தனக்குத் தெரிந்ததைத் தெரியும் என்றும், தெரியாததைத் தெரியாது என்றும் கூறுவது எதுவோ அதுவே அறிவாகும்.

— கன்பூஷியஸ்.

* உண்மைத் தத்துவம் என்பது விதைகள். ஆர்வம் என்பது மழைநீர். அடக்கம் என்பது கலப்பை.

— புத்தர்


* இனிய சொல் உனது இனிய வாழ்க்கையாகும்.
பொறுமை உனது ஆஸ்தியாகும்.
நேர்மை உனது வெற்றியாகும்.

— பாம்பாட்டிச் சித்தர்.
தொகுப்பு: நா. சாலினி தேவி
(15,790), மதுரை — 1.

விடை என்ன?

1. காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடுவான். முக்காடு போட்டால் மூலையில் அமர்வான்.
— அவன் யார்?

2. காற்றிலே பறக்கும்; காற்றாடி



யல்ல. சக்கரம் உண்டு; சைக்கிள் அல்ல. — அது என்ன?

3. வாயில்லை; வார்த்தைகள் சொல்வான். உயிர் இல்லை; ஊருக்குப் போவான். கால் இல்லை; வீட்டுக்கு வருவான்.
— அவன் யார்?

விடை: 1. பேனா, 2. நம் தேசியக் கொடி, 3. கடிதம்.

— என். சரவணகுமார்
(10,838), சேலம் — 1.

இருப்பது



ஓட்டலில் சாப்பிட வந்தவர்: சர்வர், என்ன இருக்கு?

சர்வர்: இட்லி இருக்கு, சாம்பார் இல்லை. வடை இருக்கு; சட்னி இல்லை. பூரி இருக்கு; மசாலா இல்லை.

வந்தவர்: கதவு இருக்கு, பூட்டு இருக்கா?

சர்வர்: ஓ, இருக்கே!

வந்தவர்: பேசாமல் ஓட்டலைப் பூட்டிவிட்டுப் போகிறதுதானே?

— கே. சதீஷ்குமார் (10,483),
பென்னாகரம்.

உஷாவைக் காணோம்!

சிற்பி சோமு

திறந்தவெளி மாடியில் உள்ள பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்த சாந்தா, பள்ளியிலிருந்து வரும் தனது குழந்தைகள் கண்ணனையும், உஷாவையும் ஏன் இன்னும் காணோம் என்று ஆவலுடன் அவர்கள் வரும் வழியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்போது....

கண்ணன் பதறிக் கொண்டே ஓடி வந்து வீட்டுக்குள் நுழைந்தான். அவன் ஏன் இப்படிப் பரபரப்புடன் ஓடி வருகிறான் என்பதை அறிய 'திடு திடு'வென மாடியிலிருந்து இறங்கி வந்தாள் சாந்தா.

''அம்மா... அம்மா... நம்ம உஷாவைக் காணோம்! அவங்க டீச்சர் என் கிளாசுக்கு வந்து சொன்னாங்க. மதியம் சாப்பிட டிபன் பாக்ஸ் எடுத்துக் கொண்டு வெளியே போன உஷா, மீண்டும் கிளாசுக்கு வரவில்லையாம். ஒரு வேளை வீட்டுக்குப் போயி இருப்பாளோன்னு கேட்டு விட்டு, பிறகு என்னைப்போய்ப்பார்த்துவரச் சொன்னாங்க...'' என்று ஓடிவந்த களைப்புடன் கூறினான் கண்ணன்.

''என்னப்பா... கண்ணா... என்ன சொல்றே! உஷாவைக் காணோமா? ஸ்கூலை விட்டு அவள் எங்கே போவாள்...? தனியே எங்கேயும் போய்ப் பழக்கமில்லாதவளாயிற்றே...? பள்ளியிலிருந்து உன்கூடத்தானே தினமும் வீட்டுக்கு வந்து பழக்கம்! ஆமா, எல்லா இடத்திலேயும் நல்லாத் தேடிப் பார்த்துட்டியா... ஒரு வேளை அப்பாவைப் பார்க்க நம்ம கடைக்குப் போயிருந்தால்...?'' என்று மனக்கலவரத்துடன் வினவினாள்... சாந்தா.

''அங்கேயும் வரவில்லை என்று அப்பா சொன்னதாக டீச்சர் சொன்னாங்கம்மா... முதலில் உஷாவைக் காணோம் என்றதும் நம்ம வீட்டுக்கு போன் செய்து பார்த்திருக்காங்க. போன் சரியா வேலை செய்யலையாம். அப்புறம் அப்பாவுக்கு போன் செய்து கேட்டிருக்காங்க. 'உஷா அங்கு வரவில்லை' என்றதும் உடனே என்னை அழைத்து வீட்டுக்குப் போய்ப் பார்த்து வரச் சொன்னாங்க...'' என்றான் கண்ணன்.

''அதோ அப்பாவே வர்றார் போலிருக்கே'' என்ற சாந்தா வாசலுக்கு விரைந்தாள்.

போர்டிகோவில் வந்து நின்ற புதிய மாருதி காரிலிருந்து காசிநாதன் — சாந்தாவின் கணவர் இறங்கினார்.

''என்னங்க... நம்ம உஷாவைக் காணோமாமே...'' என்று அவரிடம் பரபரப்புடன் கூவினாள் சாந்தா.

''ஆமா சாந்தா... அது விஷயமாகத் தான் வந்திருக்கேன். உள்ளே வா. விவரம் சொல்றேன்...'' என்ற காசிநாதன் வந்த வேகத்துடனேயே மாடிக்கு விரைந்தார்.

மாடிக்குப் போனவர், மின்னலென மிக விரைவாக கையில் ஒரு சூட்கேசுடன் வெளியே வந்தார்.

பயம்... ஒரு பக்கம்... அதனால் ஏற்பட்ட கலவரம் ஒரு பக்கம் மனத்திலே ஒரு நிலை கொள்ளாத தவிப்பை ஏற்படுத்த நின்றிருந்த சாந்தா, 'அவர் எங்கே வந்தார்? என்ன செய்யப் போகிறார்?' என்று ஒன்றும் புரியாமல் நின்றிருந்தாள்.

''கண்ணா.... இதோ பார்... இந்த

சூட்கேசில் ரூபாய் பத்தாயிரம் இருக்கு. எடுத்துக் கொண்டு போ!... நம்ம உஷாவைக் கடத்திக்கொண்டு போனவன் இந்தத் துண்டுச் சீட்டில் உள்ள விலாசத்தில் இருக்கிறானும். நம்ம காரைக் கண்டதும், அவனே உஷாவுடன் வந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு, உஷாவை அனுப்புவதாக போனில் கூறியிருக்கிறான்... ம்... உடனே புறப்படு...'' என்றார் காசிநாதன் அமைதியாக.

ஒரு கையில் துண்டுச் சீட்டையும் ஒரு கையில் சூட்கேசையும் வாங்கிக் கொண்ட கண்ணன் 'சிட்'டெனப் பறந்து போய்க் காரில் அமர்ந்து புறப்பட்டான்.

''என்னங்க... இவ்வளவு பணத்துடன் கண்ணனை அனுப்புகிறீர்களே! அந்த திருட்டுப் பசங்க... பணத்தை பிடுங்கிக் கொண்டு உஷாவை அனுப்பவில்லையானால்...?''

''சாந்தா... நீ ஒன்றும் கவலைப் படாதே... நம்ப கண்ணன் மிகவும் கெட்டிக்காரன். காரியத்தைக் கச்சிதமாக முடித்துக் கொண்டு வந்து விடுவான்... சரி... வா... எனக்கு ஒரு 'கப்' காப்பி கொண்டுவா...'' என்று கூறிய காசிநாதன் மிக சாதாரணமாக சோபாவில் அமர்ந்தார்.

பதிலேதும் கூறாத சாந்தா, காப்பி போட்டு எடுத்துவர அடுக்களைக்குச் சென்றாள்.

குழந்தையைக் காணோம் என்ற பரபரப்போடு, மிகப் பெரிய தொகையான ரூபாய் பத்தாயிரத்தை மிக அலட்சியமாகச் சிறுவனான கண்ணனிடம் தன் கணவர் கொடுத்தனுப்பியதையும் கண்ட சாந்தாவுக்கு மேலும் மேலும் மனத்தில் பயம் தோன்றியது. காரண காரியமில்லாமல் அவர் அப்படி நடந்து கொள்ள மாட்டார் என்ற தைரியம் ஒருபுறம் இருந்தாலும், பயம் மேலோங்கி நின்றதால், அவள் மனம் சஞ்சலத்திலேயே உழன்றது... எப்படியோ காப்பியைத் தயாரித்துக் கொண்டு வந்தவள், தன் கணவர் சோபாவில் அதற்குள் அயர்ந்து தூங்கிக் கொண்டு இருப்பதைக் கண்டு மலைத்து நின்றாள். 'இவ்வளவு பரபரப்புக்கிடையிலும் இவ



ரால் எப்படி நிம்மதியாகத் தூங்க முடிகிறது!' என்று அதிசயத்துடன் பார்த்த சாந்தா, அவரை எழுப்பிக் காப்பியைக் கொடுத்தாள். காப்பியை வாங்கிக் குடித்தார் காசிநாதன்.

வெளியே —

கார் வந்து நிற்க, அதிலிருந்து கண்ணனும், உஷாவும் இறங்கி உள்ளே ஓடிவந்தனர்.

உஷாவைக் கண்டதும் ஓடோடிப் போய், அவளைத் தூக்கிக் கொஞ்சினாள் சாந்தா.

''என்னப்பா கண்ணா! போன காரியம் வெற்றிதானே...? பணத்தைச் சேர்க்க வேண்டிய இடத்திலே சேர்த்திட்டியா...?'' என்றார் காசிநாதன்.

''ஓ! கரெக்டா சேர்த்துட்டேம்பா ..'' என்றான் கண்ணன்.

''என்னங்க, பணத்தை வாங்காமலா திருட்டுப் பசங்க உஷாவை அனுப்புவானுக? ஏம்மா உஷா, அந்தத் திருட்டுப் பசங்க உன்னை ஒன்றும் அடித்துத் துன்புறுத்தவில்லையே?'' என்று கனிவுடன் கேட்டாள் சாந்தா.

உஷா 'திருதிரு' வென்று விழித்தாள்.

''சொல்லும்மா... அந்தப் பசங்க உன்னை அடிச்சாங்களா...?'' என்று கேட்டார் காசிநாதன்.


''அப்பா... வந்து...'' என்று திக்கித் திணறிய உஷா கண்ணனையே பார்த்தாள்...

''அப்பா அது வந்து... திருடனுக ஒன்றும் உஷாவை அடிக்கலையாம். நான் முதலிலேயே கேட்டுத் தெரிந்து கொண்டேன்... ஏம்மா உஷா, அப்படித்தானே...?'' என்று உஷாவை முந்திக் கொண்டு கூறினான் கண்ணன்.

''அப்பா... அப்பா... அண்ணாவை நீங்க அடிக்க மாட்டேன்னு 'பிராமிஸ்' பண்ணினா, நான் உண்மையைச் சொல்லிடுறேம்பா...'' என்று கூறிய உஷா, அம்மாவிடமிருந்து ஓடி அப்பா மடியில் அமர்ந்தாள்.

''உண்மையா... அது என்ன...?'' என்று வியப்புடன் கேட்டாள் சாந்தா.

''நீ... நீ... என்னடி சொல்றது... கழுதை, நானே அப்பாவிடம் சொல்லிவிடுகிறேன்'' என்ற கண்ணன், ''அப்பா! என் பிரண்ட் தங்கராஜ் 'டென்த்'லே நல்ல மார்க் வாங்கி பாஸ் பண்ணி இருந்ததுதான் உங்களுக்குத் தெரியுமே... அவன்... 'பாலி



டெக்னிக்'லே சேர்ந்து படிக்க ஆசைப் பட்டான். ஆனால், அவங்க அப்பா, 'அதுக்கெல்லாம் நம்மிடம் வசதி இல்லே'ன்னு சொல்லிட்டார். அவனை சேர முயற்சி பண்ணினேன்... அவங்க அம்மா துணையுடன். ஆனால், ரூபாய் பத்தாயிரம் தேவைப்பட்டது அதில் சேர. அவ்வளவு பணத்துக்கு அவங்க எங்கே போவாங்க...? விஷயத்தை என்னிடம் சொல்லி நான் மேற் கொண்டு படிக்க முடியாமல் போய் விடும் போலிருக்கிறது' என்று வருந் தினான் தங்கராஜ். அப்போது இந்த உஷாதான் 'குழந்தைக் கடத்தல்' யோசனையை எங்களுக்குக் கூறியது" என்று தயங்கித் தயங்கிக் கூறிமுடித் தான் கண்ணன்.

''உடனே நீங்க ஆட்டத்தைச் செய லாக்கிட்டீங்களாக்கும்'' என்றாள் சாந்தா. பேசாது நின்றான் கண்ணன்.

''சரி... அதுக்கு மேலே நடந்ததை நான் சொல்றேன்'' என்ற காசிநாதன் தன் மனைவி சாந்தாவைப் பார்த்தார்.

''என்னங்க, எல்லாம் உங்களுக் கும் தெரியுமா?'' என்றாள் சாந்தா.

''ஆமா, சொல்றேன் கேளு. கண் ணனும், தங்கராஜும் இணைபிரியா நண்பர்கள் என்பதுதான் உனக்குத் தெரியுமே!. அவன் மேலே படிக்க முடியாத நிலை ஏற்பட்டதும், என்ன செய்யலாம் என்ற வேளையில், இந்த உஷாக்குட்டி அந்த யோசனையைச் சொல்ல தங்கராஜும், அவங்க அம் மாவும் பெரியவங்களை ஏமாற்றக் கூடாது, என்று எவ்வளவோ சொல்லி இருக்காங்க. ஆனால் கண்ணனும், உஷாவும் அவர்களை விடலை... ஆனால், தங்கராஜுக்கு இந்தத் திட்டம் பிடிக் கலே நேற்று மாலை நம்ம கடைக்கு ஓடி வந்து, நடந்த விவரங்களைச் சொன்னான். 'கண்ணன்— உஷா திட் டத்தை ஏற்றுக் கொள்ள என்னால் முடியலே. உங்களை ஏமாற்றிக் குறுக்கு வழியிலே என் படிப்பைத் தொடர நான் விரும்பலே. நான் வேண்டாம் என்று கண்ணனிடம் கூறினால், ஒரு வேளை அவன் என் மீது கோபப்பட்டு அதனால் எங்கள் நட்பு பாதிக்கப்பட லாம். ஆகவே, நீங்கதான் மாமா' அவனுக்குப் புத்தி சொல்லணும்' என்று கேட்டுக் கொண்டான் அந்த உத்தமன். தங்கராஜுவோட நல்ல குணமும், நேர்மையான வழியிலேயே படிப்பைத் தொடர வேண்டும் என்ற உறுதியான் மனமும் என்னைக் கவர்ந் தன'' என்று நிறுத்தினார் காசிநாதன்.

''அதனாலே நீங்களும் அவங்க ளோட சேர்ந்து நாடகம் ஆடினீங்க ளாக்கும்...'' என்று சிணுசிணுத்தாள் சாந்தா. ''ஏண்டி குட்டிக் கழுதை, இந்த வயசிலேயே திட்டமா தயாரித் துக்கொடுக்கிறே...?'' என்று உஷாவை அடிக்கக் கையை ஓங்கினாள் சாந்தா.

''சாந்தா... சாந்தா... உஷாவை அடிக்காதே. அன்பாகத் திருத்து. நம்ம குழந்தைகள் தவறு செய்தாலும், அதில் எத்தகைய நல்ல நோக்கம் மேலோங்கி இருக்கு, பார்த்தியா...?"

''எங்களை மன்னிச்சுடுங்கப்பா'' என்று கூறிய கண்ணன் காசிநாதன் காலில் விழுந்து வணங்கினான்.

அப்போது.....

கையில் சூட்கேஸுடன் வந்த தங்கராஜ், நடந்தவற்றைக் கண்டு தயங்கியவாறு நின்றான்.

''வாப்பா... தங்கராஜ்! ஏன் அங் கேயே நிற்கிறே?'' என்று அழைத்தார் காசிநாதன்.

''இந்தாங்க மாமா, நீங்க கொடுத் தனுப்பிய பணம். சரியா இருக்கான்னு பார்த்துக்கோங்க...'' என்று சூட் கேஸை அவரிடம் கொடுத்தான்.

''தங்கராஜ், நீ உண்மையிலே தங்க ராஜாதான். நீ மேற்கொண்டு படிக்க நானே ஓர் ஏற்பாடு பண்ணிட்டேன். நீயும், கண்ணனும் எப்போதும் போல இணைபிரியாத நண்பர்களாகவே இருந்து, நல்லாப் படிச்சு முன்னுக்கு வரணும். என்னம்மா உஷா, உனக் கும்தான் சொல்றேன்'' என்ற காசி நாதன் காலில் கண்ணன், தங்கராஜ், உஷா... மூவரும் வணங்கி ஆசி பெற் றனர் — மன்னிப்புக் கோரும் விதமாக.

'தன் கணவர் எவ்வளவு சாதுர்ய மாகக் காரியத்தை முடித்திருக்கிறார்! குழந்தைகளை எவ்வளவு பக்குவமாக அவர்கள் போக்கிலேயே விட்டுத் திருத்தி இருக்கிறார்!' என்று நினைத்த சாந்தாவுக்குப் பெருமை பிடிபட வில்லை. தான் எவ்வளவு பாக்கியசாலி, உயர்வான கணவரையும், உத்தமமான பிள்ளைகளையும் பெற்றதற்காக என எண்ணி மகிழ்ந்தாள்.

பந்தும் பாப்பாவும்

தேவி நாச்சியப்பன்



"அம்மா... பால் ரெடியா?" கேட்டபடியே கதவைத் தட்டினான் அருண். தினமும் பள்ளி விட்டு வந்ததும் அருண் கேட்கும் கேள்வி இதுதான். அருணின் அம்மாவும், அவன் வரும் நேரத்திற்குப் பாலைக் காய்ச்சிக் குடிக்கக் கூடிய சூட்டிலே தயாராக வைத்திருப்பார்கள். அருண் என்னதான் பசியுடன் வந்தாலும், கைகால் முகம் கழுவி வேறு உடை மாற்றிக் கொண்டுதான் பாலைக் குடிப்பான். பிறகு, அம்மா தரும் பலகாரங்களைச் சாப்பிடுவான்.

அருணுக்குக் கவிதா என்றொரு தங்கைப் பாப்பா இருந்தாள். தவழ்ந்து, திரிந்து மழலை பேசும் கவிதாவை அவனுக்கு மிகவும் பிடிக்கும். எது சாப்பிட்டாலும் பாப்பாவுக்கும் ஊட்டி விடுவான். கவிதா அழுதால் அருணுக்கு மிகுந்த கவலையாக இருக்கும். அவனால் முடிந்த அளவு வேடிக்கை எல்லாம் காட்டி பாப்பாவைச் சிரிக்க வைத்து விடுவான். அருண் பள்ளி விட்டு வந்து சிறிது நேரம் கவிதாவுடன் விளையாடுவான். பிறகு நண்பர்களுடன் விளையாடக் கிளம்பி விடுவான்.

சென்ற கோடை விடுமுறையில் சென்னைக்குப் போயிருந்தான் அருண். அப்போது அவன் மாமா அவனுக்கு ஒரு "கிரிக்கெட் செட்" வாங்கிக் கொடுத்திருந்தார். அதை வைத்துக் கொண்டு அருண், அவர்கள் தெருவில் வசிக்கும் மற்ற சிறுவர்களுடன் தினமும் மாலை வேளையில் விளையாடுவான்.

அருண், அடுத்த வீட்டுக் குமார், எதிர் வீட்டுப் பிரகாஷ், நான்கு வீடு தள்ளியிருக்கும் பாலு, அவன் தம்பி மூர்த்தி ஆக ஐந்து பேரும் தினமும் விளையாடுவார்கள். அவர்கள் வீட்டு முன்பாக நிறைய இடமிருந்தது. இருந்தாலும், அங்கே விளையாட முடியாது. காரணம், அந்தத் தெருவில் வீடுகளின் முன்பாகவே கழிவு நீர் ஓடும் சாக்கடைகள் இருந்தன. பஞ்சாயத்து அலுவலகத்துக்குப் பல முறை கடிதங்கள் எழுதியும் நேரில் சென்று முறையிட்டும் பயனில்லை. தெருவில் விளையாடினால் பந்து சாக்கடைக்குள் விழுந்து விடுமே என்பதால், சிறுவர்கள் அருகில் இருந்த ஒரு காலி இடத்தைக் கிரிக்கெட் மைதானமாக்கினார்கள்.

அருண் வசித்து வந்த தெருவிலே இரண்டு பட்டறைகள் இருந்தன. பட்டறைகளில் தங்க நகைகள் செய்வார்கள். பல வடிவங்களில் நகைகள் செய்யும் போது சில சமயங்களில் மெல்லிய சிறிய துகள்கள் காற்றில் பறந்து தூசி, கழிவு நீருடன் கலக்கக் கூடிய வாய்ப்புண்டு.

'தங்கம் சலிப்பவர்கள்' என்று சிலர் இருக்கிறார்கள். இவர்கள் மூன்று நான்கு குடும்பங்கள் வானமே கூரையாகக் கொண்டு வசிப்பார்கள். அவர்கள் பட்டறைகள் உள்ள பகுதியில் இருக்கும் சாக்கடை, குப்பை கலந்த மண் இவற்றை எல்லாம் முறைப்படி சலித்து, கிடைக்கக் கூடிய துளி தங்கத்தை விற்று அதில் கிடைக்கும் பணத்தில் குடும்பம் நடத்துவார்கள். அப்படி ஒரு கூட்டம் அருண் வீட்டிற்கு அருகில் 2 மாதமாகத் தங்கியிருக்கிறார்கள்.

அருண், அவன் நண்பர்களுடன் கிரிக்கெட் ஆடும் போது தங்கம் சலிக்-

கிறவர்களின் ஏழைக் குழந்தைகள் ஆறு, ஏழு பேர் தினமும் வந்து வேடிக்கை பார்ப்பார்கள். அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கையில், ஒரு முறை, அருண் பந்தைப் போட, குமார் பேட்டால் அடித்தான். பந்து வெகு தூரம் சென்று விழுந்தது. ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்த ஏழைச் சிறுவர்களில் ஒருவன் வேகமாய் ஓடிப் போய் அந்தப் பந்தை எடுத்து வந்தான்.

அருணுக்குக் கோபம், கோபமாக வந்தது. "டேய்,உன்னை யாருடா எடுத்து வரச் சொன்னா? எங்களுக்கு எடுத்துக்கத் தெரியாதா? உன்னை அப்படியே உதைச்சுப் போட்டுடுவேன். மூஞ்சி



யப் பாரு மூஞ்சியை. குளிச்சு எத்தனை நாளாச்சோ." என்று சத்தம் போட்டுத்திட்டிக்கொண்டிருந்தான், அருண். அப்போது அவன் அம்மா அங்கே வந்தார்கள். "ஏன் அருண், இப்படிச் சத்தம் போடுகிறாய்?" என்று கேட்டார்கள். அருணும், அவன் நண்பர்களும் நடந்ததைக் கூறினார்கள். அருணின் அம்மா, "அட இதுக்குத் தானா இப்படிச் சத்தம்போட்டாய்? பாவம், அவர்களும் குழந்தைகள் தானே! உனக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் தானே ஓடிப் போய்ப் பந்தை எடுத்து வந்திருக்கிறான்?" என்றார்கள்.


அருண் கோபம் மாறாமல், "போங்கம்மா, எனக்கு இந்தப் பசங்களைப் பார்த்தாலே பிடிக்கலை. சாக்கடைக்குள்ளே எல்லாம் கையை விடுறாங்க. இவன் கையாலே தொட்ட பந்தைத் தொடவே எனக்குப் பிடிக்கலை." என்றான். மேலும், "இந்தப் பந்தை யாராவது கழுவி விட்டுத் தாருங்கள். அப்போதுதான் நான் தொடுவேன்." என்றான்.

"இவனை மாற்றவே முடியாது" என்று முணுமுணுத்தபடி அருணின் அம்மா, ஏழைச் சிறுவனிடமிருந்த பந்தை வாங்கிக் கழுவிக் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

எப்போதும் போல் அருண் நண்பர்களுடன் கிரிக்கெட் விளையாடுவதை, தங்கம் சலிப்பவர்களின் குழந்தைகள் பார்ப்பார்கள். மறந்தும் அந்தப் பந்தைத் தொட மாட்டார்கள்! அருகில் வந்து விழுந்தாலும் தள்ளி நின்று கொள்வார்கள்!

அருணின் தங்கை கவிதா இப்போது சிறிது, சிறிதாக நடக்கப் பழகி விட்டாள். ஒருநாள் மாலை. அருண் விளையாடப் போனான். அருணின் அம்மா சமையல் அறையில் வேலையாக இருந்தார்கள். கவிதா அண்ணா போனதைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். மெதுவாக நடந்து வந்து தெருவாசல் படியில் நின்றாள். அங்கு அண்ணனைக்

சின்னப் பாப்பா



காலையிலே எழுந்து நீயும் சின்னப் பாப்பா,
கடவுளுக்குநன்றிசொல்லுசின்னப் பாப்பா.

பள்ளிக்கூடம்செல்லுகின்றசின்னப்பாப்பா,
பாதை பார்த்து நடக்க வேணும் சின்னப்
பாப்பா.

பாதையிலேமுள்கிடந்தால்,சின்னப்பாப்பா,
பாய்ந்தே அதை எடுத்துப் போடு சின்னப்
பாப்பா.

பள்ளியிலேபடிக்கும்போதுசின்னப்பாப்பா,
பாடங்களைக் கவனித்திடு சின்னப் பாப்பா.

பாங்காய்க் கல்வி கற்று நீயும் சின்னப்
பாப்பா,
பாரதனில் உயர வேண்டும் சின்னப் பாப்பா.

— தி. வெங்கடேசன் (7561),
மயிலாடுதுறை.

காணவில்லை என்றதும் அந்தப படியில் இருந்து இறங்கிக் காலை வைத்தாள். கால் இடறிச் சாக்கடைக்குள் விழுந்து விட்டாள்.

அருண், குமார், பிரகாஷ், பாலு நால்வரும் விளையாட ஆரம்பித்தார்கள். மூர்த்தி அப்போதுதான் வீட்டிலிருந்து கிளம்பினான். அவன் வரும் போதுதான் கவிதா சாக்கடைக்குள் விழுந்து விட்டாள். அதைப் பார்த்ததும் மூர்த்தி ஓடிப் போய், "அருண், கவிதா சாக்கடைக்குள்ள விழுந்துட்டா" என்று கத்தினான். அருண், அவன் நண்பர்கள், வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஏழைச் சிறுவர்கள் எல்லாரும் ஓடி வந்தார்கள். சிறுவர்கள் பதற்றமாக ஓடி வந்தார்கள். அன்றொரு நாள் பந்தை எடுத்துக் கொடுக்கப் போய் அருணிடம் திட்டு வாங்கிய ஏழைச் சிறுவன் அனைவருக்கும் முன்பாக வேகமாக ஓடி வந்து சாக்கடைக்குள் இறங்கினான். கவிதாவைத் தூக்கிவெளியில்நிறுத்தினான். உடனே, அழுகையுடன் நின்று கொண்டிருந்த அருண், அழுது கொண்டிருந்த அன்புத் தங்கையை உடம்புடன் சேர்த்து அணைத்தபடி தூக்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தான்.

என்னவோ வாசலில் சத்தம் கேட்கிறதே என்று எட்டிப் பார்த்த அருணின் அம்மா திடுக்கிட்டார்கள். அருண் தூக்கிக் கொண்டு வந்த கவிதாவின் உடல் முழுவதும் சாக்கடைத் தண்ணீர் பட்டுக் கருமையாக இருந்தது. அருணின் சட்டை, கை எல்லாம் கூட சாக்கடைத் தண்ணீர் பட்டிருந்தது. அருணின் அம்மா கவிதாவை வாங்கி உடையை அவிழ்த்து விட்டு, தண்ணீர் ஊற்றிக் குளிப்பாட்டி விட்டார்கள்.

அருணும் கால், கை கழுவி வேறு சட்டை போட்டுக் கொண்டான்.

கவிதாவைத் தூக்கிக் கொண்டு வெளிவந்த அருணின் அம்மா நடந்ததை விவரமாகக் கேட்டார்கள். அருண், "நான் விளையாடப் போய் விட்டேன். கதவு திறந்திருந்ததால், கவிதா பின்னாடியே வந்து படியிலிருந்து விழுந்து விட்டாள் போலிருக்கு" என்றான்.

அருணின் அம்மா, "நீ பாப்பாவுடன் முன் ஹாலில் விளையாடிக் கொண்டிருக்கிறாய் என்று நினைத்துக் கொண்டிருந்தேன் நான்" என்றார்கள்.

அருணின் நண்பர்களும், ஏழைச் சிறுவர்களும் வாசலில் நின்று கொண்டிருந்தார்கள். மூர்த்தி, அவன் பார்த்ததையும், அருணைக் கூப்பிட்டதையும் கூறி, "கவிதாவைக் காப்பாற்றியவன் இவன்தான்". என்று கவிதாவைச் சாக்கடையிலிருந்து தூக்கிய பையனைக் காட்டினான்.


அதைக் கேட்ட அருணின் அம்மா, "அடடே, அதே பையன்தான்! அன்று சுத்தமான கையினால் உன் பந்தை இவன் தொட்டான். அதைத் தொடவே உனக்கு அருவருப்பாக இருந்தது. இன்று சாக்கடைக்குள் இறங்கி அதற்குள் விழுந்து கிடந்த உன் தங்கையைத் தூக்கி நிறுத்தியதும் எப்படி அருவருப்பின்றி உடம்புடன் சேர்த்து அணைத்துத் தூக்கி வந்தாய்? அவனைத் திட்டவில்லையா?" என்று கேட்டார்கள்.


அருண் தன் தவற்றை உணர்ந்தபடி, "நான் அன்று செய்தது தவறுதான் அம்மா. மன்னித்து விடுங்கள். இனி அப்படிச் செய்ய மாட்டேன்." என்றான்.

அருணின் அம்மா, "நீ மன்னிப்புக் கேட்க வேண்டியது, அந்தச் சிறுவனிடம்தான். இனிமேல், அந்தக் குழந்தைகளையும் உங்களுடன் விளையாடச் சேர்த்துக் கொள். அதுதான் உன் தவற்றை உணர்ந்து நீ திருந்தியதற்கு அடையாளம். மேலும் அவனுக்கு நீ நன்றி செலுத்துவதாகவும் இருக்கும்" என்றார்கள்.

அன்று முதல் அருணின் கிரிக்கெட் டீம் ஐந்து பேரிலிருந்து பதினொரு பேராக வளர்ச்சி அடைந்தது!

ஓவியராகலாம்







பொங்கல்
கண்ணா, எங்கள் பொங்கல் வாழ்த்துகள்! பானை நிறைய வெண்ணெய் இந்தா!
பொங்கல் வாழ்த்து!
மாயக் கள்ளன்! மறைஞ்சுட்டானே! எங்கே போயிருப்பான்?
பொங்கல் வாழ்த்து!
ஹை. இதோ!
நம்ம கொடுத்த பானையிலேயே இருக்கான்! ஐயா!
பொங்கல் வாழ்த்து!
சிவிங்கியாரே! பொங்கலுக்கு ஒட்டடை அடிக்கணும் வீட்டுவரை வரீங்களா!
சும்மா அழுது அடம் பிடிக்காதே! பொங்கலுக்குனு இதோட இருபது கட்டுக்கரும்பு வாங்கியாச்சு!

குதூகலம்!

தஞ்சை மாலா.


எழுதிக்கோ; பத்து கிலோ அரிசி அறுபது ரூபாய், ஐந்து கிலோ வெல்லம் முப்பது ரூபாய்!
ம் சரி
முந்திரிப்பருப்பு; பன்னிரெண்டு ரூபாய்! அரைக்கிலோ நெய், முப்பது ரூபாய்!
அப்புறம்
ஏலம், கிராம்பு, திராட்சை, பத்து ரூபாய் கடலைப் பருப்பு, பச்சைக் கற்பூரம் ஏழு ரூபாய் எல்லாம், என்ன ஆகும்?
எழுபது, எண்பது பேருக்கு அருமையான, பொங்கல் ஆகும்!
கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?
நீ பண்ணின பொங்கல்லே கல் இருக்குதுன்னு நம்ம குழந்தை என்ன டெக்னிக்கா சொல்கிறன் பாரு!!



இருமொழிகளில் பழமொழிகள்

PARALLEL PROVERBS

படிப்பது இராமாயணம்: இடிப்பது பெருமாள் கோவில்.

A honey tongue, a heart of gall.

ஊருடன் ஒத்து வாழ்.

While in Rome,be a Roman.

நல்லவனுக்கு எல்லாம் நல்லதே.

To the good the world appears good.

பொய்க்கு எல்லை இல்லை.

One lie leads to another.

உலகம் பல விதம்.


It takes all sorts to make a world.

மனக்கோட்டை வாழ உதவாது.

It is no use building castles in the air.

இளங்கன்று பயமறியாது

Youth must have its fling.



முள் முள்ளை எடுக்கும்.

One nail drives another.

எதையும் நம்புபவன் ஏமாந்து போவான்.

Quick believers need broad shoulders.

எதற்கும் ஒரு காலம் உண்டு.

There is a time for all things.



காகத்தின் குரலை கழுதை மெச்சும்.

Fools praise fools.

போன விநாடி திரும்பாது.

Time once lost, is lost for ever.

ஊரின் போக்கே ஒருவனின் போக்கு..

Society moulds man.

மௌனம் பாதி சம்மதம்.

Silence is half commitment.

உலகம் பலவிதம்.

It takes all sorts to make a world.

அரை வைத்தியன் ஆபத்தானவன்.

A little knowledge is a dangerous thing.

தான் ஆடா விட்டாலும் தன் சதை ஆடும்.

Blood is thicker than water.


பல மரங்கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டான்

Jack of all trade is master of none.

தொகுப்பு: பாரதி பா. மு. தாசன்.

சித்திரப் புதிர்! 24


ஆழி



❶ எதைக் குறித்து இந்தத் தபால்தலை வெளியிடப்பட்டது?



❷ இது என்ன தானியம் தெரியுமா?



❸ இதில் எத்தனை முக்கோணங்கள் இருக்கின்றன?



❹ முகத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்: இவள் எந்த நாட்டுப் பெண்?




❺ மேல்நாடுகளில் இதிலிருந்துதான் சர்க்கரை தயாரிக்கிறார்கள். என்ன இது?

விடை : வேறு பக்கம்

கைக்கடிகாரம்

சரஸ்வதி ராஜேந்திரன்



சரவணனுக்கு ஏக்கமாக இருந்தது. யாராவது 'மணி என்னவாகிறது?' என்று கேட்கும் பொழுது இடது கையை உயர்த்திப் பார்த்து மணி சொல்லும் மற்ற மாணவர்களைப் பார்க்கும் பொழுது அவனுக்கு ஏக்கமாக இருக்கும்.

அவன் வகுப்பில் அவனைப் போல் ஒன்றிரண்டு பேரைத் தவிர மற்ற மாணவர்கள் எல்லோருமே வசதி படைத்தவர்கள்தான். அப்படி ஒன்றும் எதைப் பார்த்தாலும் தனக்கு அது வேண்டும் என்று நினைக்கும் குணமுடையவன் அல்ல சரவணன்.

இருப்பினும் கைக்கடிகாரத்தின் மீது அவனுக்குத் தீராத ஆசை. ஓர் எலெக்ட்ரானிக் கடிகாரம் இன்றைக்கெல்லாம் முப்பத்தைந்து ரூபாய்தான். அதை வாங்கிக் கொடுக்கும் அளவுக்குக் கூடவா அப்பாவிடம் பணம் இல்லை?

தேவையில்லாமல் இந்தச் சின்ன விஷயத்தில் அப்பா ஏன் அழுத்தம் பண்ணுகிறார் என்று அவனுக்குப் புரியவில்லை.

ஒருநாள் பொறுக்க முடியாமல் அப்பாவிடம் சென்று கேட்டான், கடிகாரம் வாங்கித் தரச் சொல்லி.

''நீ நல்ல பிள்ளையாக எல்லோரிடமும் நடந்து கொள், நான் கடிகாரம் வாங்கித் தருகிறேன்'' என்று அப்பா சொன்னார்.

சரவணனுக்கு அது போதாதா? மிகவும் பிரயத்தனப்பட்டு நல்ல பெயர் வாங்கினான்.

பெரியவர்களிடம் மரியாதையாக நடந்து கொண்டான். தெருவில் வயதானவர்கள் சென்றால் வலுக்கட்டாயமாக அவர்கள் கைகளைப் பிடித்து அழைத்துச் சென்று தெருவைக் கடக்க உதவுவான்.

இப்பொழுதெல்லாம் அம்மா, அப்பா சொல்லும் வேலைகளைத் தட்டாமல் செய்தான்.

இரண்டு வாரங்கள் சென்றன.

அப்பா கடிகாரம் வாங்கித் தரவில்லை. அவனுக்கு ஆத்திரமாக வந்தது.

நேராக அப்பாவிடம் சென்றான்.

பேப்பர் படித்துக் கொண்டிருந்த அப்பா அருகில் நிழலாடவே நிமிர்ந்து பார்த்தார்.

''என்னப்பா சரவணா, என்ன வேண்டும்?'' என்று கேட்டார்.

''அப்பா, இந்த இரண்டு வாரங்களில் என்னிடம் மாற்றம் எதுவும் காணவில்லையா நீங்கள்?'' மறைமுகமாகக் கைக்கடிகாரத்தை ஞாபகமூட்டினான்.

''இல்லையே! எப்பொழுதும் போல்

தான் நீ இருக்கிறாய்'' என்றார் அப்பா.

ஆத்திரமுற்ற சரவணன் ''ஆமாம். நான் நல்லவனாக இருந்து என்ன லாபம்? நல்லவனாக இருந்தால் கடிகாரம் வாங்கித் தருகிறேன் என்று சொன்னீர்கள். ஆனால், வாங்கித் தரவில்லை. பின் ஏன் நான் நல்லவனாக இருக்க வேண்டும். நல்லவனுக்கு நல்ல காலமில்லை.'' என்று படபடவென்று பேசி விட்டு வெளியேறினான்.

அப்பா சிரித்துக் கொண்டார்.

கடிகாரம் கிடைக்காத ஏமாற்றத்தில் வகுப்பில்கூட அவன் யாரிடமும் அதிகம் பேசவில்லை. அவன் முகவாட்டத்தைக் கண்ட ஆசிரியர், ''சரவணா, உன் உடம்புக்கு என்ன?'' என்று கேட்டார்.

''தலையை வலிக்கிறது சார்!'' என்று பொய் சொன்னான் சரவணன்.

''அப்படியானால் ஓய்வு எடுத்துக் கொள்'' என்று ஆசிரியர் சொல்ல, புத்தகத்தை எடுத்துக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டான் சரவணன்.

வரும் வழியில் ஒரு வயதான கிழவி அவனைக் கூப்பிட்டு, ''தம்பி, மயக்கமா வருது. அந்தக் கடையிலே என் பேரன் நிற்கிறான் அவனைக் கூப்பிடேன்'' என்று சொன்னாள்.

சரவணன் முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டான். 'ஆமாம், இந்த உதவியைச் செய்வதால் எனக்கு என்ன நன்மை விளையப் போகிறது' மனத்திற்குள் எண்ணியவாறே ''முடியாது. வேறு ஆளைப் பாருங்க'' என்று கொடூரமாகச் சொல்லி விட்டுச் சென்றான்.

பழக்கப்பட்டவர்கள்கூட இவன் குணமாற்றத்தைக் கண்டு வியப்படைந்தார்கள்.

சரவணன் எதைப் பற்றியும் கவலைப்படவில்லை. இந்த இரண்டு வாரங்களில் அவன் கற்றுக் கொண்ட பாடம் 'நல்லவனாக இருந்து ஒரு லாபமுமில்லை' என்பதுதான்.

சிந்தித்தபடியே நடக்கையில்தான் அது நடந்தது.

ஒரு சின்னப் பெண் குழந்தை. மூன்று வயதிருக்கும். கடையில் சாமான் வாங்கிக் கொண்டிருக்கும் அம்மாவை விட்டு விட்டுத் தளர்நடை போட்டு மெயின் ரோட்டில் வந்து கொண்டிருந்தது. எதிரே வெகு வேகமாக ஒரு பஸ் வந்து கொண்டிருந்தது.

ஒரு நிமிடம் அவன் தன் மனசுக்குள் வைத்திருந்த வைராக்கியமெல்லாம் மறந்து போனவனாய், தன் உயிரையும் மதிக்காமல் ஓடிச் சென்று அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு சாலை ஓரமாகத் தாவிச் சென்றான். அப்போது அவன் நிலைதடுமாறிக் கீழே விழுந்தான்.

பயத்தில் குழந்தை அலற, சரவணனும் பயத்தில் மயக்கமுற்றான்.

கண் விழித்தபோது அவனைச் சுற்றி அவனது அப்பா, அம்மா, அந்தக் குழந்தையின் பெற்றோர் ஆகியவர்கள் நின்றிருந்தனர்.

சரவணன் தன் கையைத் தூக்கிப் பார்க்கையில் புத்தம் புதுக் கடிகாரம் பளபளத்தது.

அப்பா சொன்னார் ''ஆமாம் சரவணா, நீ குழந்தையினுடைய உயிரைக் காப்பாற்றியதால் அந்தக் குழந்தையின் அப்பா உனக்கு இந்தக் கைக் கடிகாரத்தை பிரசண்ட் பண்ணியிருக்கிறார். இப்ப திருப்திதானே?''

''அப்பா, என்னை மன்னிச்சுடுங்க அப்பா. நல்லவனாக நடந்தா ஏதாவது பரிசு கிடைக்கும். அப்படின்னு நினைச்சு நான் நல்லவனா நடக்க முயன்றேன். அது சரியில்லைதான். ஆனால், இப்போது என்னையும் அறியாமல், ஓடிப் போய்க் குழந்தையைக் காப்பாத்தினேன். கடிகாரம் கிடைக்குமென்று நான் இதைச் செய்யவில்லை அப்பா'' கண்களில் நீர் வழிய அவன் இப்படிக் கூறினான்.

அப்பா அருகில் வந்து அவனைத் தட்டிக் கொடுத்தார். ''கவலைப் படாதே சரவணா, உன் நல்ல மனசு எனக்குப் புரியுது. தன்னலமற்ற சேவைதான் உயர்ந்தது. அதை என்றைக்குமே நீ மறக்கக் கூடாது'' என்றார்.

இப்பொழுதெல்லாம் சரவணன் எந்தப் பலனையும் எதிர்பார்க்காமல் எல்லோருக்குமே உதவி செய்கிறான்.

விசித்திரம்

தேனீர் குடிக்கச் சம்பளம்!



மேற்கு வங்காள மாநிலத்தைச் சேர்ந்த ராம்பிரசாத் பாசு என்பவர் டொக்லாய் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றுகிறார். தேயிலையைச் சுவைத்துப் பார்த்து அதன் தரம் பற்றிக் கூறும் வேலைதான் அவருக்கு. அதற்கு அவருக்கு மாதச் சம்பளம் என்ன தெரியுமா? ரூ. 12,000!

கண்ணாடியைத் தின்றவர்!

தனஞ்ஜய் குல்கர்னி என்பவர் பூனேயில், உடைந்த டியூப் லைட், பல்பு துண்டுகள், இன்ஜக்‌ஷன் புட்டிகள் போன்ற 2½ கிலோ எடையுள்ள கண்ணாடித் துண்டுகளை 20 நிமிடங்களில் விழுங்கினார்! இந்த உலக சாதனைக்கு புனே விளையாட்டில் மருத்துவக் காரியதரிசியான டாக்டர் சம்பத் சான்றிதழ் கொடுத்திருக்கிறார்.




ஒரு வைரக் கல்லின் விலை ரூ.5 கோடி!



1880 — ஆம் ஆண்டு, முதன் முதலாக, தென் ஆப்பிரிக்காவில், கிம்பர்லி வைரச் சுரங்கத்தில் கண்டெடுக்கப்பட்ட 54.99 காரட் வெள்ளை வைரக் கல் ஒன்று ஏலம் விடப்பட்டது. அதை அமெரிக்காவில் லாரன்ஸ் கிராம் என்னும் நவரத்தின வியாபாரி ரூ. 5 கோடிக்கு ஏலம் எடுத்தார். இவ்வளவு விலைக்கு இதுவரை எந்த வைரமும் ஏலம் போனதில்லை. இது ஓர் உலக சாதனை.

'பண்டா'வைக் கொன்றால் மரண தண்டனை!

கரடி இனமான 'பண்டா' என்னும் மிருகம் சீனாவில் உள்ளது. அதன் தோலுக்காக அதை வேட்டையாடுவார்கள். அந்த இனம் அழிந்து விடுமோ என்று சீன அரசாங்கம் ''பண்டா'வைக் கொன்றால் மரண தண்டனை விதிக்கப்படும்' என்று அறிவித்துள்ளது.



செய்திகள்

ஒரு பழைய தபால் தலை 1½ கோடி ரூபாய்!



அமெரிக்காவில் 135 ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்ட தபால்தலை ஒன்று ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது. ஜப்பான் நாட்டு வங்கி ஒன்று அதை ரூ. 1½ கோடிக்கு வாங்கியிருக்கிறது. இது ஓர் உலக சாதனை. தபால்தலையை வாங்கிய வங்கியின் பெயர் ரகசியமாக இருக்கிறது. இதற்கு முன் 1885 – ஆம் ஆண்டு, பழைய தபால்தலை ஒன்று 1 கோடியே 22 லட்சத்திற்கு விற்பனையானது.


காணமல் போனவர்களைக் கண்டுபிடிக்க...




தென் கொரியாவில் காணமல் போனவர்களைப் பற்றி சிகரெட் பெட்டிகளின் அட்டைகளில் போட்டோவுடன் தகவல்களையும் வெளியிடுகிறார்கள். காணமல் போனவர்களைக் கண்டுபிடிக்க இது மிகவும் உதவுகிறது. எட்டு வருடங்களுக்கு முன்பு காணமல் போன 16 வயதுச் சிறுமியை இந்தத் தகவல்களைப் படித்த லாரி டிரைவர் ஒருவர் கண்டுபிடித்துப் பெற்றோரிடம் சேர்த்தார்.

கங்காருவின் அன்பு!

இத்தாலி நாட்டில் உள்ள மிருகக்காட்சி சாலை ஒன்றில், ஒரு பெண் கங்காரு தனது குட்டியை வயிற்றில் உள்ள பையில் வைத்துக் கொண்டு உயரமான ஒரு சுவரில் ஏறி விட்டது. தவறி விழுந்ததில் குட்டி இறந்துவிட்டது. பெண் கங்காரு பலத்த காயம் அடைந்தது. எனவே, மிருகக்காட்சி சாலை அதிகாரிகள் அந்தப் பெண் கங்காருவைச் சுட்டுக் கொன்று விட்டார்கள். தனது ஜோடியைப் பிரிந்த துயரத்தில், ஆண் கங்காரு அடுத்த நாள் அதே சுவரில் ஏறி, அதிலிருந்து கீழே குதித்துத் தற்கொலை செய்து கொண்டது!



– ஆழி



சந்தித்தேன் மிருகராஜனை

மொ.பா. குருராஜன் (518)

நான் ஒரு சிங்கத்தைச் சந்திக்கத் திட்டமிட்டு வண்டலூர் அண்ணா உயிரியல் பூங்காவில் நுழைந்து சிங்கம் இருந்த திறந்தவெளியில் குதித்தேன்.

''ஹும்! அப்பா. ரொம்ப நாளைக்குப் பிறகு ஒரு மனிதன் கிடைத்தான்'' என்றபடி என் மேல் பாய வந்தார் சிங்கராஜா.

நான்: யோவ்! யோவ்! சற்று நில்லும் ஐயா!

சிங்கம்: ஏன்? எதற்காக?

நான்: ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு. காட்டுராஜா... நீரே இப்படி அவசரப்பட்டால் எப்படி?

சிங்: அரசன் அன்று கொல்லும்; தெய்வம் நின்று கொல்லும்.

நான்: நான் என்ன தவறு செய்தேன், கொல்வதற்கு?

சிங்: என்னை இந்தச் சிறையில் அடைத்ததே குற்றம் இல்லையா?

நான்: நீர் காட்டிலிருந்தால் உமது பெருமை யாருக்கும் விளங்காது. உம்மைப் பார்த்து ரசிக்கவும் முடியாது.

சிங்: எனக்கென்னப்பா பெருமை உள்ளது?

நான்: உம்முடைய பெயரில் அரிமா என்ற சங்கம் பல அரிய சேவைகள்

செய்து வருகிறது. ஒரு பட்டாசுக் கம்பெனிக்கு உம் பெயர் வைக்கப் பட்டுள்ளது. புலவர்கள் கண்ணனைப் பகைவரின் ஆண் சிங்கமே என்றழைக்கின்றனர்.

சிங்: ஆமாம், புலவர்களுக்கென்ன? அவர்கள் 'இந்திரனே! சந்திரனே!' என்பார்கள். அவர்கள் புகழ்ச்சியெல்லாம் எமக்குப் பிடிக்காது.

நான்: உமக்கென்று அரசாங்கம் குஜராத்தில் ஒரு காட்டினை வைத்துள்ளது. அதன் பெயர் 'கிர்' என்பதாகும். உம் பெயரில் சிம்மம் என்ற ராசி உள்ளது.

சிங்: அங்கேயும் இதேபோல் சுதந்திரமாகச் சுற்ற முடியாமல் நீங்கள் வைத்துள்ளீர்களா?

நான்: இல்லை! இல்லை! அங்கே நீர் சுதந்திரமாய் இருக்கலாம்.

சிங்: எம் பெருமை இவ்வளவு தானா?

நான்: இல்லை! இன்னும் நிறைய உள்ளது.

சிங்: சரி, அவற்றை விவரமாய்க் கூறும்!

நான்: நீர் காளி என்ற தெய்வத்தின் வாகனமாய் மதிக்கப்படுகிறீர்.

சிங்: சர்க்கஸில் வேலை செய்யும் என் சகோதரன் காளி என்ற ஓர் ஆளிடம் வேலை செய்கிறான். அவனுக்கு அங்கே ஒன்றும் அவ்வளவாய் மதிப்பில்லை.

நான்: நான் அந்தக் காளியைச் சொல்லவில்லை!

சிங்: சரி, எந்தக் காளியோ? மேலே சொல்லும்?

நான்: நீர் சிறந்த வீரர். ஏனெனில் நீர் மறைந்திருந்து தாக்காது நேருக்கு நேர் நின்று போர் புரிகிறீர். பாரதத்தின் சின்னஞ்சிறு குழந்தைகள் இந்திய நாட்டின் இளஞ்சிங்கங்கள் எனப்படுகின்றனர். உமது நல்ல குணங்கள் எனக்குப் பிடிக்கும்,

சிங்: நல்ல குணங்களா?

நான்: ஆமாம். நீர் பேராசைப் படுவதில்லை. தேவையான அளவு மட்டுமே உணவுக்காக மிருகங்களைக் கொல்கிறீர். ஆனால், எங்கள் மக்கள் உணவுப் பொருட்களைப் பதுக்கி வைக்கின்றனர். உணவில் கலப்படம் செய்து விற்கின்றனர்.

சிங்: ஓஹோ! அப்படியா?

நான்: அது மட்டுமல்ல. எங்கள் நாட்டில் சமுதாய ஏற்றத் தாழ்வுகளும் நிற வேற்றுமைகளும் அதிகம். ஆனால், நீரோ காட்டுமிராண்டியுடனும் கூட, சரிசமமாய் வாழ்கிறீர். உமக்கு நிற வேற்றுமைகள் இல்லை. இங்கு மாடியில் வாழ்பவன் செல்வன். குடிசையில் வாழ்பவன் ஏழை.

சிங்: அப்படியென்றால் மனிதர்களை விட நானே பரவாயில்லை. அப்படித்தானே?

நான்: அப்படித்தான்! இங்கு கார் இருந்தால் செல்வன். ஆனால் நீர் ஓர் அரசராய் இருந்தும் கர்வம் இல்லாமல் உம் நாட்டு மக்களைப் போலவே உள்ளீர். இங்கு மக்கள் ஆடம்பரமாய் ஆடை அணிகின்றனர். ஆனால் நீரோ அப்படியில்லை. இத்தகைய சிறந்த குணங்களாலேயே நீர் இந்தியாவின் தேசியச் சின்னத்தில் இடம் பெற்று உள்ளீர்.,

சிங்: நல்லது, நல்லது!

நான்: என்னைக் கொல்லாமல் விட்டதற்கு நன்றி, நான் வருகிறேன்.

சிங்: சரி, சென்று வாரும்.

நீங்களும் சிங்கத்தைப் பார்த்துப் பேட்டி காண வேண்டுமா? உடனே வாருங்கள், வண்டலூருக்கு! உங்களுக்காகக் காத்திருக்கிறார் விலங்கரசர்!

நன்றி,

வணக்கம்.



எருமையின் வெற்றி

நான்காவது நூற்றாண்டில், இரண்டு எருமைகள் ஒரு பெரும் போரையும் பல உயிர்கள் பலியாவதையும் தடுத்து நிறுத்தின. சுமத்திராத் தீவு யாருக்கு என்பதில் ஜாவாவும் மலேயாவும் போர்க் கொடி உயர்த்தின. இரு நாட்டுத் தளபதிகளும் தங்கள் தங்கள் சார்பாக இரு எருமைகளை மோத விட்டனர். எந்த நாட்டின் எருமை வெற்றி பெறுகிறதோ அந்த நாட்டுக்கே சுமத்திரா என்ற ஏற்பாட்டின்படி மலேயாவின் எருமை வெற்றி பெற்றது. இன்றும் சுமத்ராவின் பெரும் பகுதியை மினங் காபா (Minang Kabau) என்றே அழைக்கின்றார்கள். அதன் பொருள் — எருமையின் வெற்றி.

— ஆர்.எஸ். சுப்பிரமணியன்.

அஸ்ஸாம் மாணவரின் அதிசய சாதனை!



அஸ்ஸாம் ராஜ்யத்திலிருந்து அந்த இளைஞன் சென்னைக்கு வந்திருந்தான். அவனுக்கு வயது பதினாறு தான் ஆகிறது! பத்தாவது வகுப்பில் 67 சதவிகிதம் எடுத்ததோடு விஞ்ஞானத்திலும்சமூகபாடத்திலும்விசேஷத் தகுதி பெற்ற மாணவன்! இந்த மாணவன் சென்னை சர்வகலா சாலை இண்டோர் ஸ்டேடியத்தில் ஷட்டில் பாட்மிண்டனில் அபாரமாக ஆடி ஜூனியர் சாம்பியன் பட்டம் சூட்டிக் கொண்டான்!தேசியஜூனியர்சாம்பியன் பட்டம் பெறுவது அவனுக்கு இதுவேமுதல்தடவை!அவனதுமுழுப் பெயர் திபங்கர் பட்டாசார்ஜி! அஸ்ஸாமில் ஷட்டில் பாட்மிண்டன் ஆட்டத்தில் முதல் வரிசை ஜூனியர் ஆட்டத்தில் வகிக்கிறான்! ஸீனியர் போட்டிகளிலும் பங்கேற்று இரண்டாம் ரேங்கைக் கைப்பற்றியிருக்கிறான்!கௌஹாத்தியிலுள்ள சென்ட்ரல் ஸ்கூல் மாணவன் இவன்!

''எனக்கு நான்கு சகோதரர்கள். மூன்று பேர் இந்த ஷட்டில் காக் விளையாட்டில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தச் சென்னையில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்ள எனது இளைய சகோதரன் ரிப்பன் பட்டாசார்ஜியும் வந்திருக்கிறான். எனது தந்தை கௌஹாத்தியில் வெள்ளத் தடுப்புக் காரியாலயத்தில் உதவி நிர்வாக இன்ஜினியர். எனது தந்தையும் கோச் பிரதீப் சாலிஹாவும்தான் எனதுவெற்றிகளுக்குப்பின்னணியில் உறுதுணையாக இருப்பவர்கள்!'' என்று இளைஞன் திபங்கர் விவரித்துச் சொல்கிறான்!


''சென்னையில் நடைபெற்ற பந்தயங்களில் உனக்கு மிகவும் கஷ்டமான பந்தயம் எது?''


''நான் மிகவும் கஷ்டப்பட்டு ஆடிய பந்தயம் 1986 ஜூனியர் சாம்பியன் அஜாய் காந்திக்கெதிராக ஆடிய செமி ஃபைனல் பந்தயம்தான்! இரண்டே செட்களில் 15 — 6, 15 — 9 ஸ்கோர் கணக்கில் ஜயித்தது மறக்க முடியாத நிகழ்ச்சி! ஒரு சாம்பியனை வெல்வதென்பது இலேசான காரியமா?'' என்று வியக்கிறான் திபங்கர். அதைவிட அவனை மகிழ்ச்சியுறச் செய்தது சர்வதேச இந்திய ஆட்டக்காரர் பிரகாஷ் படுகோன் அவனது மாட்சினை அமர்ந்திருந்து கண்ணுற்றதுதான்!

சங்கீதம் கேட்பதும், தபால் தலை சேகரிப்பதும் திபங்கர் பட்டாசார்ஜிக்குப் பொழுதுபோக்குகள்! இந்த இளம் சாம்பியனுக்குரிய ஆசை இன்னும் தேறி, சர்வதேசப் பந்தயங்களில் கலந்து கொள்ள வேண்டும் என்பதுதான்!


தமிழக அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் ஜூனியர் சாம்பியன் திபங்கர் பட்டாசார்ஜிக்குப் பரிசு வழங்கிக் கௌரவித்தார்! பெரியவர்களிலிருந்து சிறியவர்கள் வரை இந்த இளம் ஆட்டக்காரருக்குக் கிடைத்த விருதைக் கைதட்டி வரவேற்றனர்!


— குண்டுமணி


பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி சிறிது சிறிதாக நமது தேசத்தை ஆக்கிரமித்து நாடாளத் தொடங்கிய காலம்... காசியில்...
பாகீரதி! நமது அடிமை நாட்டுக்கு இன்னொரு பிரஜை பிறந்து விட்டாள்...
மனம் கசந்து பேசாதீர்கள்! மனுவை வீர மகளாக வளர்க்கலாம்...
குழந்தை மனுவுக்கு நாலு வயதான போது தாய் பாகீரதி இறந்து விட....
இந்தத் தாயில்லாக் குழந்தையை வைத்துக் கொண்டு என்ன செய்வது? எப்படி வளர்ப்பது......?
ஜான்ஸி ராணி லக்ஷ்மிபாய்
கதை: ஆனந்தி படம்: வினு
மோரோ பந்தைக்காண ஒரு நண்பர் வந்தார்...
தங்களை வரச் சொல்லி பிட்டூரிலிருந்து தங்கள் நண்பர் பாஜிராவ் பலமுறை சொல்லி அனுப்பி விட்டாரே... அங்கே போய் விடுங்கள்.
மனுவை அழைத்துக்கொண்டு பிட்டூருக்கு வந்து சேர்ந்தார் மோரோ பந்த்......
பாஜிராவ்! நலம்தானா?
நண்பரே! வருக! வருக!


பாஜிராவ்! இவள்தான் என் மகள், மனு.
மோரோபந்த்! இவன் தான் என் சுவீகாரப் புதல்வன் நானா கோண்டு பந்த்.
பாஜிராவ் பெருந்தன்மையுடன்....
மோரோபந்த்! என் மகன் நானாவுடன் உங்கள் மகள் மனுவும் ஓர் இளவரசி போலவே வளரட்டும்....
பாஜிராவ்! தங்கள் அன்புக்கு நான் அடிமை!
மோரோபந்த் இருவருக்கும் வீரக் கதைகள் சொன்னார்...
துச்சாதனனைக் கொன்று திரௌபதியின் சபதத்தை நிறை வேற்றிவைப்பேன் என்று பீமன் முழங்கினான்...
நானா குதிரை ஏற்றம் பழகினான்...
அப்பா, நானும் குதிரைச் சவாரி பழகுவேன்!
சரி.
மனு முந்திக் கொள்ள....
ஒரு பெண் இளவரசனை விட வேகமாகச் செல்வதா?


நானு குதிரைச் சவுக்கைச் சொடுக்க...
ஆ! ஐயோ!
இளவரசனுக்கு உதவப் பலர் ஓடி வந்தனர்...
பயப்படாதே, நானு! உனக்கு ஒன்றும் ஆகாது!
நானுவுக்கு ஒரே தடபுடல் உபசாரம்...
வைத்தியரைக் கூப்பிடு!
மெதுவாய்த் தூக்கு!
ஜாக்கிரதை!
வைத்தியர் சிகிச்சை அளித்தார்...
ஒரு வாரத்தில் காயங்கள் ஆறிவிடும்.
போதும், போதும்! உனக்கு இனி குதிரை ஏற்றமே வேண்டாம்!
அன்றிரவு...
அப்பா, இளவரசன் என்றால் காயம் படாமலிருக்குமா? இவ்வளவு அமர்க்களம் பண்ணுகிறார்களே...
ஏதோ இந்தமட்டோடு போயிற்றே...



அப்பா! எத்தனையோ ராஜகுமாரர்களின் கதைகளைக் கூறினீர்களே! அவர்களெல்லாம் பட்டுக்குஞ்சலத்தையா ஆயுதமாகப் பயன்படுத்தினார்கள்?
அதெல்லாம் அந்தக்காலம். இன்று வெள்ளைக்காரன் ராஜ்யம். நமது பாக்கிய சூரியன் அஸ்தமித்து விட்டான்...
அஸ்தமித்தால் என்ன? மீண்டும் சூரியோதயமாகத்தானே செய்யும்!
சில தினங்கள் சென்று...
காயமெல்லாம் ஆறிவிட்டதே! குதிரைச்சவாரிக்கு வாயேன்!
ஐயய்யோ, என்னால் முடியாது!
லட்டு சாப்பிட்டுக் கொண்டு உட்கார்ந்திரு!
மனு! இளவரசரிடம் மரியாதைக் குறைவாகப் பேசாதே!
நானு தைரியமாக இருக்க வேண்டும் என்றுதானே சொல்கிறேன்!
நானாவைப் பட்டத்து யானையில் அமரச் செய்தார் பாஜிராவ்...
நீ இனி யானைச் சவாரி செய்தால் போதும்!




★ பிற்காலத்தில் 'நானா சாகேப்' என்று சரித்திரத்தில் வீரப்புகழ் பெற்றான்.



...கீதை படித்தாள்.
வீரன் அர்ச்சுனனை மாவீரனாக்கியது கீதைதான்...
ஒரு நாள் ஜான்ஸி சமஸ்தானத்திலிருந்து...
பிட்டூர் பேஷ்வா பாஜிராவைப் பார்க்க, தாத்யா தீக்ஷித் சாஸ்த்திரி வந்திருக்கிறேன்...
பாஜிராவ் வரவேற்றார்.....
ஜான்ஸி மன்னர் கங்காதர்ராவ் நலந்தானே...?
உடல் நலம் தான்; மனம் தான் சரியாயில்லை...
காரணத்தை விளக்கினார் தீக்ஷித்...
சந்ததி இல்லாத சமஸ்தானங்களை வெள்ளையர் தங்களுடையது என்று அறிவித்துப் பிடுங்கிக் கொள்கிறார்கள்... ஜான்ஸி மன்னருக்குப் பிள்ளையில்லாக் குறை... அரசியும் இறந்து போனாள்...
ஜான்ஸிக்கு நல்ல ராணியைத் தேடித் தான் நான் பல ஊர்களுக்கும் போகிறேன்...
ஹூம்... வியாபாரம் செய்ய வந்த வெள்ளையர் ஏதேதோ சூழ்ச்சி செய்து நாடாளுகிறார்கள்...


கேட்டுக் கொண்டே வந்தார் மோரோபந்த்...
வெள்ளையர்களா அவர்கள்? கொள்ளையர்கள்!
தீக்ஷித்துக்கு மோரோபந்தை அறிமுகம் செய்து வைத்தார் பாஜிராவ். பிறகு...
ஜான்ஸி மன்னருக்குத் தகுந்த பெண்ணைத் தேடிக் கொண்டிருக்கிறார் தீக்ஷித்...
அப்படியே என்னுடைய தாயில்லாப் பெண்ணுக்கும் ஒரு வரன் கிடைத்தால் சொல்லுங்களேன்.
..மனுவுக்குக் கல்யாண வயதாகி விட்டது...
பார்ப்போம்; எதற்கும் உங்கள் மகள் ஜாதகத்தை என்னிடம் கொடுத்து வையுங்கள்...
அன்றிரவு உறங்கப் போகு முன் பொழுது போகாமல் மனுவின் ஜாதகத்தை ஆராய்ந்த தீக்ஷித்....
நம்பவே முடியவில்லையே! இத்தனை சிறப்பு அம்சங்களா! இவளுக்கு ராணியாகும் யோகமே இருக்கிறதே...!
மறு நாள்...
பாஜிராவ்! உங்கள் நண்பர் மகளுக்கு வரன் தேடுவதென்றால் அவளை ஒருமுறை நான் பார்த்து வைப்பது நல்லது....
உண்மைதான்.



பாஜீராவ் தந்தையையும் மகளையும் அழைத்து வரச் செய்தார்...
ஆசீர்வாதம் பண்ணுங்கள்...
சீக்கிரமே விவாகம் நடக்கட்டும்...
மோரோபந்த்! உங்கள் மகள் சிறந்த அழகியாக வளர்ந்திருக்கிறாள்...... பார்த்தாலே தெரிகிறது... ஆனால் அறிவு?.....
பாஜீராவ் இடை புகுந்து...
அதை நான் சொல்கிறேன்...அவளுக்கு மராட்டியும் சமஸ்கிருதமும் தெரியும்... இதிகாசங்களைப் படித்திருக்கிறாள்... கீதையில் ஆழ்ந்து போயிருக்கிறாள்... துப்பாக்கிப் பயிற்சி... குதிரை ஏற்றம்... வாள் வீச்சு... பக்தி உள்ளம்...
தீக்ஷித் வியந்து...
அடேயப்பா! இத்தனை கெட்டிக்காரப் பெண்ணுக்கு மாப்பிள்ளை கிடைக்காமல் போவாரா, பார்க்கலாம்...
தங்களிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டேன். இனி ஈசுவர சித்தம்...
ஜான்ஸி திரும்பிய தீக்ஷித், மன்னர் கங்காதர் ராவைச் சந்தித்து....
அதிசயமான ஒரு பெண்ணைச் சந்தித்தேன். அழகி, அறிவாளி, வீராங்கனை... பெயர் மனு... உங்களுக்கு மனைவியாகச் சகல விதத்திலும் ஏற்றவள்......


தீக்ஷித்! நாற்பது வயதுக்குமேல் எனக்குத் திருமணமா?
அரசே! வெள்ளைக் காரர்கள் சூழ்ச்சியால் நாட்டை அபகரிக்கப் பார்க்கிறார்கள்....
அவர்கள் சூழ்ச்சியில் நாம் விழக்கூடாது...
அதற்குத் தாங்கள் உடனே விவாகம் செய்து கொள்ள வேண்டும்...
எதிர் காலத்தில் ஜான்ஸியை ஆள உங்களுக்கு வாரிசு உதிக்க வேண்டும்...
சரி!
பிட்டூரிலிருந்து மனு புறப்பட்டாள். பாஜிராவை வணங்கி...
ஆசி கூறுங்கள்.
மகராஜியாய் இரு!
போய் வருகிறேம்....
பாஜிராவ் பரிசுகள் வழங்கினர்.
அடேயப்பா, என்ன இதெல்லாம்?
ஜான்ஸி ராணியாகப் போகிறாயே, உனக்கு ராஜாங்க சீர்தான் தரவேண்டும்!



ஜான்ஸியில் திருமணம் சிறப்பாக நடந்தது!....
இந்த நாட்டுக்கு லக்ஷ்மியாக நீ விளங்க வேண்டும்.
மனுவுக்கு லக்ஷ்மி என்ற பெயரே பிறகு நிலைத்தது.
அந்தப்புரத்தில் லக்ஷ்மி....
தேவி, நாங்கள் உங்கள் அடிமைகள்.
அடிமை என்று இந்த நாட்டில் யாரும் கிடையாது. இனி அப்படி சொல்லவே கூடாது!
மகாராணி லக்ஷ்மி பாய்கி ஜே!
மகாராஜா கங்காதர் ராவ்கி ஜே!
காசி! சுந்தர்! உங்களுக்குக் குதிரை ஏற்றம் தெரியுமா?
நன்றாக நடனம் ஆடுவேன் தேவி!
பாட்டு, நடனம் முதலிய கலைகளைக் கொஞ்ச காலத்துக்கு மூட்டை கட்டி வையுங்கள். நான் உங்களுக்கெல்லாம் போர்ப் பயிற்சி அளிக்கப் போகிறேன்!


அந்தப்புரத்தை மலர்களால் அலங்கரித்தார்கள்...
தோழிகளே! மலர்களின் மணத்தையும் அழகையும் அனுபவித்தால் போதாது; மலர்களைத் தரும் இந்நாட்டு மண்ணை நீங்கள் நேசிக்க வேண்டும்!
அந்தப்புரத்துக்கு மகாராஜா கங்காதர்ராவ் வந்தார்....
லக்ஷ்மி! உன்னை என் மனைவியாக மட்டுமல்ல, சகாவாகவே நடத்தப் போகிறேன்....
அது என் பாக்கியம்... நாட்டு நிலவரங்களை அறிந்துகொள்ள உங்களுக்கு உதவ நானும் ஆவலாயிருக்கிறேன்....
நமது சமஸ்தானத்தில் ஆங்கிலேயக் கம்பெனி ஆட்சியின் அரசியல் பிரதிநிதியாகக் காப்டன் டன்லப் இருக்கிறான்; கம்பெனி படைகளையும் இங்கே வைத்திருக்கிறான்.
தர்ம சங்கடம் தான்.
சில காலம் சென்று காப்டன் டன்லப் தர்பாருக்கு வந்து...
கங்காதர்ராவ்! இந்த உடன்படிக்கையில் உங்கள் கையெழுத்து தேவை!



என்ன இது?
எமது கம்பெனிப்படைக்கு ஜான்ஸி ராஜ்ய கஜானாவிலிருந்து சம்பளம் தரவேண்டும்!
உங்கள் படைகளை எமது நாட்டு எல்லைக்குள் இருக்க அனுமதிப்பதே முறையற்றது; அதற்குச் சம்பளம் வேறு நாங்களே தருவதா?
தரமுடியாது என்கிறீரா?
கங்காதர்ராவ் கலங்கிப் போனார்...
அப்படிக் கூறவில்லை... உம்... ஆண்டொன்றுக்கு மூன்று லட்சம் ரூபாய் தருகிறேன்!
வெரிகுட்!
ஜான்ஸி கோட்டைக்குள்ளே பெரிய மைதானம். ராணி லக்ஷ்மி பாய் தோழிகளுக்கும் போர்ப் பயிற்சி அளித்தாள்....
சில ஆண்டுகள் சென்று லக்ஷ்மிக்குக் குழந்தை பிறந்தது... ஆனால்...
நாடாள மகன் பிறந்தான் என்று மகிழ்ந்தேன்... இவ்வளவு சீக்கிரம் இறந்து விட்டானே!
பிறப்பும் இறப்பும் இறைவன் செயல். மனத்தைத் தேற்றிக் கொள்!



சிலகாலம் சென்று மன்னர் கவலையுடன்.....
வாரிசில்லாத ராஜ்யங்களை ஆங்கிலேயர் தம் வசப்படுத்திக் கொள்வார்களே......?
பிட்டூர் பேஷ்வாவைப் போல் நாமும் ஒரு மகனை தத்து எடுத்துக் கொள்வோம்...
தாமோதர் ராவ் என்ற சிறுவனை சுவீகாரம் செய்து கொண்டனர்...
ஜான்சி மன்னர் இறக்கும் தருவாயில்...
லக்ஷ்மி! தாமோதர் பெரியவனாகும் வரை ராஜ்யத்தை நீதான் கவனித்துக் கொள்ள வேண்டும்.
மன்னரின் மரணத்துக்குக் காத்திருந்த ஆங்கிலேயர்...
கங்காதரராவுக்கு நேர்சந்ததி இல்லாதபடியால் ஜான்சியை பிரிட்டிஷ் கம்பெனி ராஜ்யத்துடன் இணைத்துக் கொள்வோம்!...
லக்ஷ்மி கம்பீரமாக...
இவ்வளவுதானா? இன்னும் ஏதாவது உண்டா?
அரண்மனையையும் கோட்டையையும் காலி செய்வதுடன் படைகளையும் கலைத்துவிட வேண்டும்...!



வேறு வழியின்றி, கோட்டைக்கு வெளியே ஒரு மாளிகையில் குடியேறிய லக்ஷ்மியை பால்ய சிநேகிதன் நானா காண வந்தான்...
நம் நாட்டில் நாம் அயலாராகி விட, அயலான் நம்மை ஆள்கிறான்! என்ன கொடுமை!
லக்ஷ்மியையும் நானா சாகிப்பையும் காணப் பலர் ரகசியமாக வந்தனர்.
அந்தப்புரப் பெண்களுக்கெல்லாம் போர்ப் பயிற்சி அளித்தீர்களே; எங்கள் வீரத்தைக் காட்ட சந்தர்ப்பம் அளியுங்கள்..!
ஆறுமாத சம்பளம் தந்து எங்களை அனுப்பிவிட்டான் வெள்ளைக்காரன். நீங்கள் எப்போது அழைத்தாலும் வருகிறோம்.....!
காலம் கனியக் காத்திருங்கள்..!
ராணி லக்ஷ்மியின் அந்தப்புரத் தோழிகள் ஆங்கிலேயரின் படை முகாமில் நடனமாடினர்....
வாரே வாஹ்... பியூட்டிஃபுல்!
அங்கிருந்த இந்திய சிப்பாய்களிடம் ரகசியம் பேசினர்...
நீ இந்தியன். உனக்குத் தன்மானமில்லையா? நமது ராணிக்கு உதவி செய்வாயா?
கண்டிப்பாக...



தாமோதர் ராவுக்குப் பூணூல் போடுவதாக அறிவித்து, பலருக்கு அழைப்பு அனுப்பினாள் லக்ஷ்மிபாய்.... உபநயன முகூர்த்தம்.... ....
உபநயனத்தைச் சாக்கிட்டு வந்தவர்கள் ரகசிய ஆலோசனை நடத்தினர்....
நானா சாகிப்! தாந்யாடோபே! ஜவாஹர்சிங்! ரகுநாத்சிங்! ... இப்படி பலர் இருக்க எனக்கென்ன கவலை? உங்கள் விஜயத்தை வெள்ளையன் சந்தேகிக்கப் போவதுமில்லை!
தாந்யாடோபே திட்டம் வகுத்தார்.
ஆங்கிலேயரிடம் பணியாற்றும் இந்தியப் படைவீரர்கள் அனைவரிடமும் புரட்சியைத் தூண்டி விட வேண்டும். அது எரிமலையாக ஒரே சமயத்தில் வெடிக்க வேண்டும்- *மே மாதம் உம் தேதி பகல் பதினொரு மணிக்கு!
புரட்சிக்குக் காரணம் என்ன கூறுவதென்பதை நானா சாகிப் விளக்கினார்....
பன்றிக் கொழுப்பும் பசுவின் கொழுப்பும் தடவிய தோட்டாக்களைத் தொட மாட்டோம் என்று சிப்பாய்கள் மதத்தின் பெயரால் மறுப்பார்கள்! ஆங்கிலேயர் ஆத்திரமடைவார்கள்! புரட்சி உருவாகும்!
மீரட், கான்பூர், டில்லி என்று எங்கும் புரட்சி பரவியது.... பிரிட்டிஷ் படைத் தலைவன் ஹியூ ரோஸ்....
எல்லாவற்றுக்கும் ஜான்ஸி ராணிதான் காரணம்.... முதலில் அவளை ஒழித்துக் கட்ட வேண்டும்!
*1857ம் ஆண்டு


பலதடவை தோற்றும் ஹியூராஸ் ஒரு வெறியோடு யுத்தம் செய்தான்...
பெண்களிடம் நாம் தோற்பதா? ஒரு நாளும் இல்லை...
பிரிட்டிஷ் படைகளை எதிர்த்து ராணி லக்ஷ்மிபாய் தீரத்தோடு போரிட்டாள்...
வெற்றி அல்லது வீர மரணம்!
ஒரு கை துண்டிக்கப்பட்ட பிறகும் லக்ஷ்மி இடக் கரத்தால் வாள் வீச, ஹியூராஸ்...
மற்றொரு கரத்தையும் செயலிழக்கச் செய்வேன்...
இரு கரங்களையும் இழந்த லக்ஷ்மிபாய் குதிரையிலிருந்து வீழ்ந்தாள்....
வாழ்க சுதந்திரம்!
லக்ஷ்மிபாயின் வீர மரணம் சரித்திரத்தில் இடம் பெற்றது. சிப்பாய்க் கலகம் என்று ஆங்கிலேயர் வர்ணித்த யுத்தமே முதல் இந்திய சுதந்திரப் போராட்டமாகும்.





எந்த எந்தப் பழமொழிகளை இந்த இரு படங்களும் உணர்த்துகின்றன? தெரியாத போனால்,

— விடை **66**– ஆம் பக்கம்.

அயர்லாந்துக் கதை

வேட்டை நாய்



'கொக்கரக்கோ!'

சேவல் கூவியது.

படுக்கையில் படுத்திருந்த சிறுவன் துள்ளி எழுந்தான். 'அம்மா! அம்மா!' என்று அழைத்துக் கொண்டே அம்மாவின் அருகிலே ஓடினான்.

"என்னடா, என் கண்ணே?" என்று அன்பாகக் கேட்டாள் அம்மா.

"அம்மா, மாமாவின் ஊருக்குப் போகப் போகிறேன். போகட்டுமா, அம்மா?"

இந்தக் கேள்வியைக் கேட்டதும் அம்மா புன்சிரிப்புடன், "என்ன, மாமா ஊருக்கா! அடேயப்பா! அது சமீபத்திலா இருக்கிறது? குறைந்தது நூறு மைலாவது இருக்குமே!" என்றாள்.

"இருக்கட்டுமே!... அம்மா, எனக்கு மாமாவைப் பார்க்க வேண்டுமென்று ஆசையாய் இருக்கிறது. மாமாவின் பிள்ளைகளைப் பற்றி அந்த வியாபாரித் தாத்தா சொன்னாரே; கேட்டாயா? அவர்களெல்லாம் 'ஹாக்கி' விளையாடுவதில் மிகவும் கெட்டிக்காரர்களாம். அற்புதமாக விளையாடுகிறார்களாம். எனக்கும்தான் ஹாக்கி விளையாடத் தெரியுமே! நானும் அங்கே போய் அவர்களுடன் சேர்ந்து விளையாடலாம் அல்லவா? எனக்கு விடை கொடுத்து அனுப்பு, அம்மா."

"என்ன! விடை கொடுத்து அனுப்புவதா! நீயோ சிறு பையன். இவ்வளவு தூரத்தில் உள்ள மாமாவையும், அவருடைய குழந்தைகளையும் நீ போய்ப் பார்ப்பது என்பது சுலபமான காரியமா? வழியில் எத்தனையோ காடுகள்; மலைகள்; ஆறுகள்! அவ்வளவையும் நீ கடந்து செல்ல வேண்டும். சிறுபிள்ளைத்தனமாகப் பேசுகிறாயே!"

"என்னம்மா நீ இப்படிச் சொல்கிறாய்! நான் என்ன, கோழையா? அல்லது, கோழையான ஒரு குடும்பத்திலே பிறந்தவனா? என் அப்பாவைப் போல் நானும் ஒரு பெரிய வீரனாக வேண்டாமா?"

இதைக் கேட்டதும், அம்மாவின் கண்கள் கலங்கின. அதே சமயத்தில், மகனின் வீர வார்த்தைகள் அவளுக்கு இன்பத்தைக் கொடுத்தன.

"ஆமாம், நீ போகிறேன் என்கி

றாயே! நீ மட்டும் தனியாகவா போகப் போகிறாய்? துணை வேண்டாமா?''

''துணை யா! எதற்கு அம்மா? யாருமே என்னுடன் வரவேண்டாம். நான் மட்டுமே செல்லப் போகிறேன். என் அப்பாவைப்போல் நானும் வீரனாக வேண்டாமா? அதற்கு நல்ல அனுபவம் வேண்டாமா? எந்தத் திசையில் போக வேண்டும் என்பதை மட்டும் சொல்லிவிடு; நான் இன்றே புறப்பட்டுப் போகிறேன்.''

''என்ன! இன்றே புறப்படப் போகிறாயா? அவசரப்படாதே! அந்த வியாபாரித் தாத்தா சொன்னது முழுவதையும் கேட்டாயா? உன் மாமா கூடிய சீக்கிரத்தில் இங்கு வரப் போகிறாராம். அவர் வரும்போது அவருடன் கூட நீயும் போகலாம்.....''


''ஆமாம், அந்தத் தாத்தா அது மட்டுமா சொன்னார்? யுத்தத்தில் ஈடுபட்டிருந்ததால், ஐந்நூறு வருஷங்களாக உன்நாட்டு விஷயங்களை மாமா கவனிக்க முடியாமலே போய்விட்டதாம். இப்போதுதான் அவர் அவற்றையெல்லாம் கவனிக்கிறாராம். அதனால் வேலை அதிகமாக இருக்கிறதாம். வேலை அதிகமாக இருக்கும் போது, மாமா எப்படிச் சீக்கிரத்தில் இங்கு வர முடியும்? நான் போய், அவரை அழைத்து வருகிறேன். விடை கொடு, அம்மா!''

அம்மா எவ்வளவோ கூறிப் பார்த்தாள். ஆனால், அந்தச் சிறுவன் விடவில்லை. அம்மாவைச் சமாதானப் படுத்தி, ஒருவழியாக அவனுடைய அனுமதியைப் பெற்று விட்டான்!

ஸெதாந்தா — இதுதான் அந்தப் பையனின் பெயர். அவனுக்கு வயது இன்னும் ஒன்பது கூடப் பூர்த்தியாகவில்லை. அந்த வயதிலேயே அவன் மிகவும் தைரியசாலியாக இருந்தான்.

ஸெதாந்தாவின் மாமாதான் அந்த நாட்டு அரசர். அந்த நாட்டுக்கும், அடுத்த நாட்டுக்கும், ஐந்நூறு ஆண்டுகளாகக் கடுமையான போர் நடந்து கொண்டிருந்தது.

போர் ஆரம்பமாவதற்கு முன்பு, தலைநகரிலிருந்து நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு மண்டலத்தில், ஒரு பெரிய படையின் தலைவராக இருந்தார், ஸெதாந்தாவின் அப்பா. போர்



மிகவும் கடுமையாக நடந்து கொண்டிருந்த போது, 'உடனே ஒரு பெரிய படையுடன் புறப்பட்டு வரவும்' என்று ஸெதாந்தாவின் அப்பாவுக்கு அரசரிடமிருந்து உத்தரவு வந்தது. மனைவியையும், மகனையும் அங்கேயே விட்டுவிட்டு, ஒரு பெரிய படையுடன் புறப்பட்டார், அப்பா.

எதிரிகளை மிகவும் கடுமையாக எதிர்த்துப் போரிட்டார்கள். வெற்றியோ தோல்வியோ யாருக்கும் கிடைக்கவில்லை. எதிரிகளை இவர்கள் தாக்குவதும், இவர்களை எதிரிகள் தாக்குவதுமாகப் போர் நடந்து கொண்டே இருந்தது.

ஒரு நாள் ஸெதாந்தாவின் அப்பா எதிரிகளை எப்படியும் முறியடித்து விடுவது என்று தீர்மானித்துத் தம்முடைய படையுடன் முன் நோக்கிச் சென்றார்; வீரமாகப் போரிட்டார். ஆனால், அவர் உயிருடன் திரும்பவில்லை; போர்க்களத்திலே இறந்து விட்டார்! வீர சொர்க்கம் அடைந்தார்.

அவர் இறந்த செய்தியைக் கேட்டதும் ஸெதாந்தாவும், அவன் அம்மாவும் அடைந்ததுயருக்கு அளவே இல்லை. வாடினர்; வருந்தினர்; கண்ணீர் விட்டனர்; கதறி அழுதனர்.

ஆனால், இது நடந்து இப்போது இரண்டு ஆண்டுகள் கழிந்து விட்டன. போரில் எதிரிகள் முறியடிக்கப்பட்டனர். ஸெதாந்தாவின் மாமா வெற்றி மாலை சூடி வீடு திரும்பினார்.

போர் நடந்த காலத்தில் நாட்டு



மக்களின் நலத்தை அவரால் கவனிக்க முடியாமல் போய் விட்டது. ஐந்தாறு ஆண்டுகளாகக் கவனிக்காமல் விடுபட்டுப்போன வேலைகளை இப்போது தான் அவசர அவசரமாகக் கவனித்து வருகிறார் அரசர். "நம் தங்கையையும் தங்கை மகனையும் காண வேண்டும். அவர்களுக்கு ஆறுதல் கூறி நம்முடன் இங்கு அழைத்துவர வேண்டும்" என்று அரசர் நினைத்தார். ஆனால், வேலை மிகுதியால் நினைத்தபடி உடனே போக முடியவில்லை. குறைந்தது ஒன்றிரண்டு மாதங்கள் சென்றுதான் போக முடியும் போல் தோன்றியது.

அவருக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவனுக்கு வயது 14; அடுத்தவனுக்கு வயது 11; மூன்றாவது பையனுக்கு வயது 9. மூவரும் ஹாக்கி விளையாடுவதில் நிபுணர்கள்! தினந்தோறும் காலையிலும் மாலையிலும் அரண்மனைக்கு அருகேயுள்ள மைதானத்தில், மற்ற பிரபுக்களின் குழந்தைகளுடன் ஹாக்கி விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

அரசரைப் பற்றியும் அவருடைய குழந்தைகளைப் பற்றியும் ஓரளவு தெரிந்து வைத்திருந்தார், ஒரு வயோதிக வியாபாரி. அவர் ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்று தடவைகள் ஸெதாந்தா இருக்கும் ஊருக்கு வியாபார விஷயமாக வருவார். அப்படி வரும்போதெல்லாம் அவர் ஸெதாந்தாவையும் அவன் அம்மாவையும் பார்க்காமல் திரும்ப மாட்டார். பார்க்கும்போது அரசரைப் பற்றியும், அவருடைய குழந்தைகளைப் பற்றியும் தமக்குத் தெரிந்தவற்றையெல்லாம் கூறுவார். ஸெதாந்தாவும் அவன் அம்மாவும் ஆவலோடு கேட்பார்கள்.

அன்று இரவு அந்த வியாபாரி ஸெதாந்தாவின் வீட்டுக்கு வந்திருந்தார். அவர் கூறியதைக் கேட்டதிலிருந்துதான் ஸெதாந்தாவுக்கு மாமாவின் ஊருக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

ஸெதாந்தா காடுகளைக் கண்டு கலங்கிவிடவில்லை. மலைகளைக் கண்டு மலைத்துவிடவில்லை; ஆறுகளைக் கண்டு அயர்ந்துவிடவில்லை. தைரியத்துடனும், நம்பிக்கையுடனும் எல்லாவற்றையும் எளிதிலே கடந்து தலைநகருக்கு வந்து விட்டான்!

தலைநகரை அடைந்ததும், அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. 'ஆ! நாம் தலைநகரை அடைந்து விட்டோம்! நம் மாமாவை இன்னும் சிறிது நேரத்தில் காணப் போகிறோம்; மாமாவின் பிள்ளைகளுடன் அளவளாவி மகிழப் போகிறோம்' என்றெல்லாம் நினைத்துக் கொண்டே அரண்மனையை நோக்கி நடந்தான்.

அரண்மனையை அவன் நெருங்கும் சமயம். அப்போது, அங்கிருந்த மைதானத்தில் சில சிறுவர்கள் ஹாக்கி விளையாடிக் கொண்டிருப்பதை அவன் கண்டான். உடனே, அவர்கள் விளையாடும் இடத்திற்கு அருகே சென்றான்; கூர்ந்து பார்த்துக் கொண்டே நின்றான்.

அங்கே விளையாடுபவர்களில் மூன்று சிறுவர்கள் ஒரே மாதிரி உடை அணிந்திருந்தனர். ஆடம்பரமாகவும், அழகாகவும் அவர்களுடைய உடைகள் இருப்பதைக் கண்டதும், 'இவர்கள்தான் நம்முடைய மாமாவின் பிள்ளைகளாக இருக்க வேண்டும். கூட விளையாடுபவர்கள் பிரபுக்களின் குழந்தைகளாக இருக்கலாம்' என்று நினைத்தான், ஸெதாந்தா.

அசையாமல் நின்ற இடத்திலேயே நின்று ஆட்டத்தைக் கவனித்தான். ஆட்டம் வெகு மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. ஆட்டத்தைப் பார்க்

கப் பார்க்கத் தானும் அவர்களுடன் சேர்ந்து பந்தாட வேண்டுமென்று துடி துடித்தான்.

அப்போது. ஒருவன் தன் கையிலிருந்த மட்டையால் ஓங்கிப் பந்தை அடித்தான். பந்து தரையில் வேகமாக உருண்டோடிக் கொண்டிருந்தது. அப்போது, எதிரில் நின்ற இன்னொரு சிறுவன் அதை எதிர்த்து அடிக்க முயன்றான். ஆனால், அவனது குறி தவறி விட்டது. பந்து அவனையும் தாண்டி வேகமாக வந்து கொண்டிருந்தது. அந்தப் பந்தைக் கண்டதும், ஸெதாந்தாவினால் சும்மா இருக்க முடியவில்லை. 'குபீ'ரென்று விளையாட்டு எல்லைக்குள் பாய்ந்தான். தன்னுடன் கொண்டு வந்திருந்த பந்தடிக்கும் மட்டையால் அந்தப் பந்தை எதிர்த்துப் பலமாக அடித்தான். அடித்ததோடு நிற்கவில்லை; அதைத் தொடர்ந்து ஓடவும் ஆரம்பித்தான்.


பூசை வேளையில் கரடி புகுந்தது போல், எவனோ ஓர் அன்னியன் திடீரென்று ஆட்டத்தில் வந்து புகுந்ததைக் கண்டதும், அந்தச் சிறுவர்கள் எல்லோரும் கூச்சல் போட ஆரம்பித்தனர்! சிலர் அவனைப் பிடித்து இழுத்து நிறுத்த முயன்றனர்; முடியவில்லை. அவன் எல்லோரையும் தள்ளிக் கொண்டு பந்தைத் தொடர்ந்து ஓடினான். கோபம் கொண்ட சிலர் அவனைப் பிடித்து அடிக்க ஓடினர்.

கூச்சல் பலமாகக் கேட்கவே அரண்மனைக்குள்ளிருந்த அரசர் உப்பரிகை வழியாக எட்டிப் பார்த்தார். எவனோ ஒரு சிறுவன் அங்கு வந்து ஆட்டத்தைக் கலைப்பதாக அறிந்தார். உடனே சேவகர்களை அனுப்பி அவனைப் பிடித்து வர உத்தரவிட்டார்.

சேவகர்கள் ஸெதாந்தாவைப் பிடித்து வந்தனர்; அரசர் முன் நிறுத்தினர்.

அரசர் அவனைப் பார்த்து, ''ஏ பையா, நீ யார்?'' என்று கோபமாகக்





கேட்டார்.

"அரசே, நான் யாரென்பது தெரிந்தால் தாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவீர்கள்!" என்று தலை நிமிர்ந்து கூறினான், ஸெதாந்தா.

"என்ன!... அப்படியா!"

"ஆம் அரசே! இந்த நாட்டுக்காகத் தம்முடைய உயிரையே கொடுத்த மாபெரும் வீரனின் மகன்தான் நான்"

இதைக் கேட்டதும், அரசருக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனாலும், அவருக்கு அவன் யார் என்பது சரியாகத் தெரியவில்லை.

"என்ன! உன் தந்தை இந்த நாட்டுக்காக உயிரைக் கொடுத்தாரா?"

"ஆம், என் தந்தை நாட்டுக்காக உயிரைக் கொடுத்தார். என் தாய் இந்த நாட்டு அரசரின் கூடப் பிறந்தாள்...!"

"என்ன! நீ சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே!"

"இன்னும் கொஞ்ச நேரம் சென்றால், தானாக விளங்கிவிடும்!"

அரசர் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தார். பிறகு, "அப்படியானால், உன் பெயர்...?"

"என் பெயர் ஸெதாந்தா!"

"என்ன! என் தங்கை மகன் ஸெதாந்தாவா!" என்று ஆச்சரியத்துடன் கூறிக் கொண்டே அவன் அருகே ஓடினார்; அவனை அப்படியே கட்டி அணைத்து முத்தமிட்டார்.

"ஸெதாந்தா, அம்மா சுகமாயிருக்கிறாளா? நீ எப்படி இங்கு வந்தாய்? நீ மட்டும்தான் வந்தாயா? அல்லது, அம்மாவும் வந்திருக்கிறாளா?" என்று படபடப்புடன் கேட்டார், அரசர்.

"நான் மட்டுமே வந்தேன். அம்மா ஊரில் இருக்கிறாள். உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் காணவே இவ்வளவு தூரம் நடந்து வந்தேன். ஆனால், நானாக வந்து உங்களைக் காண்பதற்குள் உங்களுக்கு அவசரம்! சேவகர்களை அனுப்பி என்னை அழைத்துவரச்செய்து விட்டீர்கள்!" என்று சிரித்துக் கொண்டே கூறினான், ஸெதாந்தா.

இதைக் கேட்டதும், அரசருக்கும் சிரிப்பு வந்துவிட்டது. சேவகர்கள் ஆச்சரியத்துடன் ஸெதாந்தாவையும், அரசரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே நின்றனர்.

உடனே அரசர், ஆவலாகத் தம்முடைய பிள்ளைகளை அழைத்தார். "இதோ பாருங்கள், இவன்தான் உங்கள் அத்தை மகன் ஸெதாந்தா. கெட்டிக்காரப்பையன்" என்று கூறி அவனை அறிமுகப்படுத்தி வைத்தார்.

உடனே அரசரின் மூன்று பிள்ளைகளும் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். ஒருவன், ஸெதாந்தாவின் தோளிலே கை போட்டான்; மற்றொருவன் அவன் கையைப் பிடித்துக் குலுக்கினான். கடைக் குட்டிப் பையன் அவன் வயிற்றிலே வேடிக்கையாக ஒரு குத்துக் குத்தி, "அடே, நீ பந்தாடுவதில் பெரிய சூரனாக இருப்பாய் போலிருக்கிறதே!" என்றான்.

பிறகு அரசர் ஸெதாந்தாவிடம், "போர் முடிந்ததுமே அம்மாவையும் உன்னையும் காண வேண்டும் என்று நினைத்தேன். அங்கு வந்து திரும்புவதற்குக் குறைந்தது ஒரு வாரமாவது ஆகும். அவகாசமே கிடைக்கவில்லை. எப்படியும் இன்னும் ஒரு மாதத்திற்குள் வருவதென்றுதான் இருந்தேன்... சரி, வா, அப்புறம் சாவதானமாகப் பேசிக் கொள்ளலாம். முதலில் குளித்துச் சாப்பிடு. பசியுடன் இருப்பாய்" என்று அவனை அழைத்துச் சென்றார்.

ஸெதாந்தா குளித்து முடித்தான். அவனுக்கு அழகான உடை, அறுசுவை உணவு எல்லாம் கொடுக்கப்பட்டன.

அன்றைய தினமே, 'ஸெதாந்தா சுகமாக வந்து சேர்ந்து விட்டான்'

என்று அவனுடைய அம்மாவுக்கு அரசர் ஆள் மூலம் சொல்லி அனுப்பினார். அத்துடன் 'இன்னும் ஒரு மாதத்துக்குள் ஸெதாந்தாவுடன் அங்கு வருகிறேன்' என்றும் கூறி அனுப்பினார்.

அன்று முதல் ஸெதாந்தா அவனுடைய மாமாவின் பிள்ளைகளுடன் காலையிலும் மாலையிலும் ஹாக்கி விளையாட ஆரம்பித்தான். ஒரு வாரத்துக்குள், அவன் ஹாக்கி விளையாடுவதில் பெரிய நிபுணனாகி விட்டான்! அவன் ஆட்டத்தைப் பார்த்தவர்களெல்லாம் அவனை 'வாயார வாழ்த்தினார்கள்; மனமாரப் போற்றினார்கள்.

அன்று மாலை நேரம். அரண்மனை வாயிலில் அழகான இரு குதிரைகள் பூட்டப்பட்ட ஒரு வண்டி நின்று கொண்டிருந்தது. அரண்மனைக்குள்ளிருந்து, அந்த வண்டியை நோக்கி அரசரும், அவருடன் கூட ஒரு பிரபுவும் வந்தார்கள்.

வண்டியை நெருங்கியதும், "அரசே தாங்கள் முதலில் ஏறி அமருங்கள்" என்று பணிவுடன் கூறினார் பிரபு.


அரசர் வண்டியில் ஏறினார். பிறகு பிரபுவும் ஏறிக் கொண்டார். வண்டி புறப்பட்டது.

அரசரின் பக்கத்திலே இருந்த பிரபு, ஒரு சாதாரணப் பிரபு அல்ல; அந்தத் தலைநகரிலே அவர்தான் மிகவும் பெரிய பிரபு! அவருடைய பங்களாவில் அரசருக்காக ஒரு பெரிய விருந்து ஏற்பாடு செய்திருந்தார். அந்த விருந்துக்காகத்தான் அரசரை அவர் அழைத்துக் கொண்டு போனார்.

வண்டி சிறிது தூரம் சென்றிருக்கும். அப்போது பக்கத்து மைதானத்தில் 'ஹாக்கி' விளையாடிக் கொண்டிருந்த சிறுவர் கூட்டத்தைக் கண்டார், அரசர். அந்தக் கூட்டத்தில் ஸெதாந்தா சுறுசுறுப்பாகவும், உற்சாகத்துடனும் ஆடுவதைப் பார்த்தார். உடனே, அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது.

பக்கத்திலிருந்த பிரபுவிடம், "அதோ பாரும், அந்தப் பையன் யார் தெரியுமா?" என்று கேட்டார்.

பிரபு சிறிது நேரம் அவனைப் பார்த்துவிட்டு, "ஆம் அரசே, அவன் யார்? புதுப் பையனாக இருக்கிறானே!" என்று கேட்டார்.



"உமக்குப் புதியவன்: ஆனால், எனக்கு அவன் உறவினன். என் தங்கை மகன்தான் அவன்."

இதைக் கேட்டதும் பிரபு மிகவும் ஆச்சரியத்துடன், "நான் நினைத்தது சரியாகத்தான் இருக்கிறது. பையனைப் பார்த்ததுமே, 'இவன் அரச குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருப்பானோ!' என்று சந்தேகப்பட்டேன். நான் நினைத்ததில் தவறே இல்லை. தங்கை மகன் வருங்காலத்தில் பெரிய வீரனாக வருவான். சந்தேகமே இல்லை... அது சரி... அரசே, விருந்துக்கு அந்தப் பையனையும் அழைத்துச் செல்ல நான் விரும்புகிறேன். அழைத்துச் செல்லலாமா?" என்று கேட்டார்.

"உமது விருப்பம்போல் செய்யலாம்" என்றார், அரசர்.

உடனே பிரபு, வண்டியை நிறுத்தச் சொன்னார். வண்டி நின்றது. "ஸெதாந்தா! ஸெதாந்தா!" என்று அரசர் அழைத்தார். ஸெதாந்தாவின் காதுகளில் அரசரின் குரல் விழவில்லை; அவன்தான் மும்முரமாக ஹாக்கி விளையாடிக் கொண்டிருக்கிறானே!

"ஸெதாந்தா! உன்னை அரசர் அழைக்கிறார். அதோ பார்!" என்று மற்றவர்கள் கூறியபோதுதான் ஸெதாந்தாவுக்கு அரசர் தன்னை அழைக்கிறார் என்பது தெரிந்தது. உடனே, ஆட்டத்தை நிறுத்தி விட்டு அந்தக் குதிரை வண்டியை நோக்கி அவன் ஓடி வந்தான்.

சித்திரப் புதிர்-24 விடை

1. சுதந்திரம் அடைந்து 40 ஆண்டுகள்.
2. பார்லி.
3. 35 முக்கோணங்கள்.
4. ஜப்பான்.
5. பீட்ரூட் (கிழங்கு).

"ஸெதாந்தா, இதோ இருக்கிறாரே, இந்தப் பிரபு வீட்டில் இன்று ஆறு மணிக்கு ஒரு விருந்து நடக்கப் போகிறது. அதற்கு நீயும் வரவேண்டுமாம். வா, வண்டியில் ஏறிக்கொள்" என்றார் அரசர்.

"மாமா, இன்னும் ஆட்டம் முடியவில்லை. நான் இப்போது நடு ஆட்டத்தில் வந்தால், மற்றவர்களுக்குச் சங்கடமாக இருக்கும். ஆகையால், இந்த ஆட்டம் முடிந்த பிறகு நான் வருகிறேன். நீங்கள் முன்னால் செல்லுங்கள். நான் வந்து விடுகிறேன். விலாசத்தை மட்டும் கூறிவிட்டுச் செல்லுங்கள்" என்றான்.

"தம்பி, என் பங்களா சுமார் இரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது. நீ மட்டும் தனியாகவா வரப் போகிறாய்?" என்று கேட்டார், பிரபு.

"கவலைப்படாதீர்கள். நான் வந்து விடுவேன். ஊரிலிருந்தே நான் தனியாகத்தானே நடந்து வந்தேன்!" என்றான் ஸெதாந்தா.

"சரி, சீக்கிரம் வந்துவிடு" என்று கூறி, பிரபுவின் வீட்டு விலாசத்தைக் கொடுத்து விட்டு அரசர் வண்டியை விடும்படி கூறினார். வண்டி நகர்ந்தது.


பிரபுவின் வீட்டில் ஒரே தடபுடலாக இருந்தது. பிரபுக்களும், அரசாங்க அதிகாரிகளும் வரிசை வரிசையாக வந்து கொண்டிருந்தனர். பிரபு எல்லோரையும் வரவேற்று உபசரித்துக் கொண்டிருந்தார்.

அரசர், அங்கிருந்த மிகவும் அழகான ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தார். வந்தவர்கள் ஒவ்வொருவராய் அவருக்கு வணக்கம் செலுத்திவிட்டு அவரவர் இடத்தில் போய் அமர்ந்தனர்.

மணி ஆறு அடித்தது.

பிரபு அரசரின் அருகே வந்தார். "அரசே, எல்லோரும் வந்து விட்டார்கள். விருந்தை ஆரம்பிக்கலாம் என்று நினைக்கிறேன். தங்கள் அபிப்ராயம்..." என்று இழுத்தார்.

அப்பொழுது அரசருக்கோ அல்லது அந்தப் பிரபுவுக்கோ ஸெதாந்தாவைப் பற்றிய நினைவே இல்லை. விருந்தினரை உபசரிக்கும் வேலையில் பிரபு அவனை மறந்து விட்டார். அரசரும் வந்திருந்த சில பிரபுக்களுடன் வேடிக்



கையாகப் பேசிக் கொண்டிருந்ததால், அவனைப் பற்றியே நினைக்கவில்லை.

"ஓ! தாராளமாக ஆரம்பிக்கலாம்" என்றார், அரசர்.

"சரி, கதவுகளையெல்லாம் தாழிடும்படி சொல்லி விட்டேன். எதிரிகள் எவரும் வராமல் வெளியில் காவலும் வைத்து விட்டேன்."

"யார், உம்முடைய ஆட்களே காவல் இருக்கிறார்களா? அல்லது அரண்மனை ஆட்களா?"

"ஆட்கள் எதற்கு? என்னுடைய வேட்டை நாய்தான் காவலாக இருக்கிறது! அது மிகவும் பொல்லாத நாய். அதைக் கண்டாலே எதிரிகளுக்குப் பயம்தான்! ஒரு தடவை முப்பது நாற்பது பேர் இங்கே கொள்ளையடிக்க வந்தார்கள். அவர்களையெல்லாம் மூலைக்கு ஒருவராக ஓடும்படி அது விரட்டியது இருக்கிறதே, அடேயப்பா! அதைப் பற்றிச் சாவதானமாகச் சொல்ல வேண்டும்" என்றார் பிரபு.

பிறகு, விருந்து ஆரம்பமானது. எல்லோரும் தட்டுகளைக் காலி செய்யும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டனர்.

ஸெதாந்தா ஆட்டத்தை முடித்துக் கொண்டு புறப்பட்டான். புறப்படும் போதே மணி ஆறாகி விட்டது.

பந்தைத் தெருவில் போட்டு, மட்டையால் அடித்துக் கொண்டே சென்றான். விளையாட்டாகச் சென்றதால், வெகு சீக்கிரத்தில் பிரபுவின் பங்களாவை நெருங்கி விட்டான்.

பங்களாவை நோக்கி அவன் வருவதைக் கண்டதும், அங்கு காவல் காத்துக் கொண்டிருந்த வேட்டை நாய் குரைக்க ஆரம்பித்தது. அதன் பெரிய உடலையும், கனத்த குரலையும், கத்தி போன்ற பற்களையும் யாராவது பார்த்தால், உடனே பயந்து விடுவார்கள். ஆனால், ஸெதாந்தாவா அதற்கெல்லாம் பயப்படுகிறவன்? பந்தைக் கையில் எடுத்துக் கொண்டு, நாய் நிற்கும் இடத்தை நோக்கி நடந்தான்.

பயப்படாமல் அவன் அருகே வருவதைக் கண்டதும், நாயின் கோபம் அதிகமாகிவிட்டது. வாயை 'ஆ' என்று பிளந்து கொண்டு, அவனை நோக்கிப் பாய முயன்றது. அதற்குள், ஸெதாந்தா தன் கையிலிருந்த பந்தை மேலே தூக்கினான். திறந்திருந்த நாயின் வாய்க்குள் 'லபக்'கென்று போட்டு விட்டான்! போட்டதோடு நிற்கவில்லை; கையிலிருந்த மட்டையால் அந்தப் பந்தைத் தொண்டைக்குள் நன்றாகக் குத்தித் தள்ளி விட்டான்!

பாவம், அந்த வேட்டை நாயால் பந்தை வெளியே கக்கவும் முடியவில்லை; உள்ளே விழுங்கவும் முடியவில்லை. திணறித் திண்டாடிக் கொண்

டிருந்தது. 'இதுதான் சமயம்' என்று நினைத்த ஸெதாந்தா மட்டையால் அதன் தலையிலே பலமாக ஐந்தாறு அடிகள் வைத்தான். அவ்வளவுதான்! அந்த நாய்' அங்கேயே சுருண்டு விழுந்து விட்டது. ஸெதாந்தா திரும்ப வும் நாலைந்து அடிகள் கொடுத்தான். பிறகு வாலைப் பிடித்துப் 'பரபர' என்று இழுத்தான். அப்புறமும் அந்த நாய் பிழைத்திருக்குமா, என்ன? அதன் மூச்சு நின்று விட்டது!

"ஆயுள் முடிந்தது!" என்று குதூகலத்துடன் உரக்கக் கத்தினான், ஸெதாந்தா. அந்தச் சப்தம் உள்ளே விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த வர்களின் காதுகளில் அரைகுறையாக விழுந்தது. உடனே அரசருக்கு ஸெதாந்தாவைப் பற்றிய நினைவு வந்தது. "ஐயோ! என் தங்கை மகன் வருவதாகச் சொன்னானே! ஒருவேளை அவனைத்தான் வேட்டை நாய் கடித்து விட்டதோ!" என்று கூறிக் கொண்டே வாயிலை நோக்கி ஓடினார். அவரைத் தொடர்ந்து பிரபுவும், மற்றும் சிலரும் ஓடினார்கள்.

வெளியே வந்ததும், வெற்றி முழக் கத்துடன் நிற்கும் ஸெதாந்தாவை அவர் கண்டார்; அவன் பக்கத்திலே செத்துக் கிடக்கும் வேட்டை நாயை யும் கண்டார். உடனே அவர் ஓடிப் போய் ஸெதாந்தாவைக் கட்டிப் பிடித் துக் கொண்டு, "நல்ல வேளை; நீ பிழைத்தாய்" என்றார்.

"இல்லை. கெட்ட வேளை; என் நாய் செத்து விட்டது!" என்று வருத்தத்து டன் கூறிக் கொண்டே நாயின் அருகே ஓடினார், பிரபு. அது மூச்சின்றிக் கிடப் பதைக் கண்டார்; பெருந்துயர் அடைந்தார்.

பிரபுவின் வருத்தத்தை உணர்ந்தான் ஸெதாந்தா. உடனே அவர் அருகிலே ஓடினான்.

"பிரபுவே, என்னை மன்னிக்க வேண்டும். உங்களுடைய நாயை நான் வேண்டுமென்று கொல்லவில்லை. இப் போது அது இறந்து கிடக்கிறது. நான் உயிருடன் இருக்கிறேன். இல்லாவிடில், நான் இறந்திருப்பேன். அது உயிரோடு இருந்திருக்கும். நடந்ததை நினைத்து வருந்துகிறேன். தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டுகிறேன்" என்று அவரைப் பார்த்துக் கெஞ்சிக் கேட் டான் ஸெதாந்தா.

அதற்குள் அரசர் பிரபுவைப் பார்த்து, "ஏதோ எதிர்பாராத வித மாக நடந்து விட்டது. என்ன செய் வது? வருத்தப்படாதீர்கள். இதே ஜாதியில் வேறு ஒரு வேட்டை நாய் வாங்கிக் கொள்ளலாம்" என்றார்.

ஆனால், பிரபு அரசரைப் பார்த்து, "அரசே, நான் இதைச் சிறு குட்டியி லிருந்து வளர்த்து வந்தேன். மிகவும் நன்றியுடன் இன்றுவரை எங்கள் குடும்பம், சொத்து, சுகம், எல்லாவற் றையும் பத்திரமாகவும், வீரத்துடனும் இது பாதுகாத்து வந்திருக்கிறது. இனி எதிரிகளுக்குக் கொண்டாட்டம்தான்! சிறு வயது முதல் இங்கே வளர்ந்ததால் தான் இது இவ்வளவு நன்றியறிதலு டன் இருந்து வந்தது. பெரிய நாயை வாங்கி எவ்வளவுதான் அன்பாக ரொட்டியும், கறியும் ஊட்டி ஊட்டி வளர்த்தாலும் இதற்கு ஈடாகுமா?" என்று கண் கலங்கக் கூறினார்.

ஸெதாந்தாவுக்கு மிகுந்த வருத்த மாக இருந்தது. "நம்மால்தானே இந் தக் கஷ்டம் ஏற்பட்டது!" என்று அவன் நினைத்தான். உடனே யோச னையில் ஆழ்ந்தான். ஒரு முடிவுக்கு வந்தான்.

பிரபுவைப் பார்த்து, "ஐயா, நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். இதே

பழமொழிப் புதிர் விடை:

புதிர் — 29: கற்றது கைமண் அளவு. கல்லாதது உலகளவு.

புதிர் — 30: செருப்புக்குத் தக்கபடி காலை வெட்டுவதா?

ஜாதியில் ஒரு நாய்க் குட்டியை வாங்கி நாம் வளர்ப்போம். அது நன்றாக வளர்ந்து, உங்கள் குடும்பத்தையும், உங்கள் சொத்து சுகங்களையும் நன்றாகக் காவல் காக்கும் வரை உங்களுக்கு வேறு வேட்டை நாயே தேவையில்லை. இதோ இறந்து கிடக்கும் வேட்டை நாய்க்குப் பதில், நானே உங்கள் வீட்டில் வேட்டை நாய்போல் இருந்து, காவல் காத்துவரப் போகிறேன். ஆம், தீர்மானித்து விட்டேன். இது நிச்சயம். இது சத்தியம், இனி உங்கள் வேட்டை நாய் நான்தான்; நானேதான்!'' என்று வீரமாகக் கூறினான்.

அவன் வார்த்தையைக் கேட்டு அரசர் திகைத்தார்; பிரபு மலைத்தார்; கூடியிருந்தவர்கள் வியந்தனர்.

'வேட்டை நாயாக இருப்பேன்' என்று சொன்னதோடு ஸெதாந்தா நின்று விடவில்லை. அன்று முதல் பல வருஷங்கள் வேட்டை நாய் போலவே இருந்து, அந்தப் பிரபுவின் வீட்டைக் காத்து வந்தான். எல்லோரும் அன்று முதல் அவனை 'சுலேன்' என்று அழைக்க ஆரம்பித்தனர். சுலேன் என்றால் அந்த நாட்டில் 'வேட்டை நாய்' என்று பொருள்.

ஸெதாந்தா பெரியவனான பிறகு, சாதாரண ஒரு மனிதனாக அவன் இருக்கவில்லை. ஒரு பெரிய போர் வீரனாகவே விளங்கினான்; போர் வீரனாகவே வாழ்ந்தான்; போர் வீரனாகவே இறந்தான். 'ஸெதாந்தா' என்ற பெயர் அயர்லாந்தில் அநேகமாக எல்லோருக்குமே தெரிந்த பெயராகி விட்டது

போர்க்களத்தில் அவனைக் கண்டாலே எதிரிகளுக்கு நடுக்கம்தான்! 'டேய், 'சுலேன்' (வேட்டை நாய்) வருகிறது! ஓடி வாருங்கள்; ஓடி வாருங்கள்!' என்று கூவிக் கொண்டே எதிரிகள் புறமுதுகு காட்டி ஓட ஆரம்பித்து விடுவார்கள். அவ்வளவு பயம்!




தெரியாத போனால் தெரிந்து கொள்ளுங்கள்!

- உலகிலேயே பெரிய விளையாட்டு மைதானம் (உள் அரங்கம்) ஹூஸ்டனில் இருக்கிறது. இதன் பரப்பளவு 13 ஏக்கராகும்!
- சிறந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் இறந்தால் அவர்களைப் புதைப்பதற்கென்றே தனிப்பட்ட கல்லறைகள் உள்ள நாடு இங்கிலாந்து.
- உலகிலுள்ள மொத்த மொழிகள் 2800. எழுத்து வடிவமுள்ள மொழிகள் 240.
- உலகில் ஓர் ஆண்டிற்கு 600 கோடி நூல்கள் வெளியாகின்றன.
- ஒரு நத்தை ஒரு மைல் தூரம் செல்ல 2833 மணி நேரம் எடுத்துக் கொள்கிறது.
- இருதயத்திலிருந்து இரத்தம் புறப்பட்டு மீண்டும் அது இருதயத்தை வந்து அடைய ஒரு நிமிடம் ஆகிறது!
- டால்பின் என்ற மீனுக்கு மனிதனை விட 7 மடங்கு கூர்மையாகக் காது கேட்கும் சக்தி இருக்கிறது.
- புறாக்கள் தூங்குவதில்லை. கண்ணை மூடியபடி சும்மாவே இருக்கும். உடல் நலம் இல்லாத புறாக்கள் மட்டுமே தூங்கும்.
- மருந்து என்பதை ஆங்கிலத்தில் 'மெடிசின்' என்கிறோம். இந்த மெடிசின் என்கிற ஆங்கில வார்த்தை 'மெடிகார்' என்ற இலத்தீன் சொல்லிலிருந்து தோன்றியது. அதற்கு 'நான் குணப்படுத்துகிறேன்' என்று பொருள்.
- யானைக்குட்டி பிறக்கும் போதே இரண்டரை அடியிலிருந்து மூன்றடி உயரமும் 200 பவுண்டு எடையும் இருக்கும்.
- உலகிலேயே ஆஸ்கார் பரிசை மிகுதியாகப் பெற்றிருப்பவர் வால்ட் டிஸ்னிதான். இவர் முப்பத்தைந்து முறை இப்பரிசைப் பெற்றிருக்கிறார்.

தொகுப்பு: எஸ். விஜயா சீனிவாசன்.


பொல்லாத பாம்பு
படக்கதை :- எஸ்.கே. ராமானுஜம். (ரானு÷)
ஒரு புதரில் பொல்லாத பாம்பு ஒன்று வாழ்ந்து வந்தது.
கஷ்டப்பட்டுக்கட்டிய.. கறையான் புற்றுக்குள் புகுந்து அங்கேயே வாழத்தொடங்கி விட்டது.
காலையிலும், மாலையிலும் பறவைகளின் முட்டைகளை உடைத்துக்குடித்துவிடும்
புதரின் அருகேயுள்ள தவளைகளை விழுங்கி சந்தோஷமாக வாழ்ந்து வந்தது.
பாம்பின் தொல்லை தாங்கமுடியாமல் பறவைகளும், தவளைகளும் வேறு இடத்திற்குச்சென்று விட்டன.
பாவம் ! பாம்பு இரண்டு நாட்களாகப்பட்டினியில் வாடியது....
ஆகையால் மனவருத்தத்துடன் அங்கிருந்து பாம்பு வேறு இடத்திற்குச்செல்லத்தொடங்கியது
நடுவழியில் இரண்டு சுண்டெலிகள்... சண்டை போடுவதைப்பாம்பு கண்டது.


இரண்டு எலிகளின் வால்களையும் ஒரே பிடியில் பாம்பு தன் வாயில் கவ்விப் பிடித்துக்கொண்டது.
இரண்டு எலிகளும் கதறிக்கதறி அழுது கொண்டே உயிர்ப்பிச்சை கேட்டன.
ஈ.வு, இரக்கமற்ற அப்பொல்லாத பாம்பு "இரண்டு நாள் பசிக்கு... இரண்டு எலிகள்.. ஹா.. ஹா.. ஹா!" என்று கூறி வாய் விட்டு சிரித்தது. உடனே இரண்டு எலிகளும் தப்பி ஓடி அருகிலுள்ள எலி வளைக்குள் ஒளிந்து கொண்டன...
உங்கள் இரண்டு பேரையும் சாப்பிடாமல் இவ்விடத்தை விட்டு நகரவே மாட்டேன்.
அடேய்! நாம் இருவரும் ஒற்றுமையாகவும், தந்திரமாகவும் நம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்..
நீ.. கவலைப்படாதே... பாம்பை, நான்.. பார்த்துக்கொள்கிறேன்
புத்திசாலியான ஒரு எலிமட்டும் வளையிலிருந்து எட்டிப்பார்த்தபடி.....
ஐயா! என்விரோதியைக்கொன்றுவிட்டேன்.. இனி என்னைத்தின்று.. நீங்கள்.. பசியைப்போக்கிக்கொள்ளலாம்.
உடனே சுண்டெலி அருகேயுள்ள கீரிப்பிள்ளை வாழும் புதருக்குள் ஓடியது. பாம்பு அந்த எலியைப் பின் தொடர்ந்து ஓடியது....
அவ்வளவு தான். புதருக்குள்ளிருந்த கீரிப்பிள்ளை அப்பொல்லாத பாம்பைத் தூக்கிக்கொண்டு ஓடி விட்டது.
ஐயோ! என்னைக் காப்பாற்றுங்கள்.

பயணம் தந்த பாடம்

விர - வசந்தன்

இன்று இரவு இரயிலில் ஜெயன் ஊருக்குப் புறப்பட வேண்டும். அவனது பிரயாணத்திற்கான ஏற்பாடுகளை அம்மா கவனித்துக் கொண்டிருந்தாள். சோபாவில் சாய்ந்தவாறு பத்திரிகை படித்துக் கொண்டிருந்த அப்பா, "இன்னைக்கு ராத்திரி ஜெயன் ஊருக்குப் போகணுமில்லே, அவன் எங்கே?" என்று கேட்டார்.

"விளையாடப் போறதாச் சொல்லிட்டு, கிரிக்கெட் மட்டையைத் தூக்கிக்கிட்டுப் போறான்" என்றாள் அம்மா.

அப்பா புருவத்தை நெரித்தார். "இன்னைக்குக் கூடவா விளையாட்டு; இப்படி நீயே எல்லாக் காரியத்தையும் செய்து வச்சிடறதாலேதான், அவனுக்குப் பொறுப்பு இல்லாமப் போகுது" என்று கடிந்து கொண்டார்.

"போகட்டும், சின்னப் பையன் தானே, விளையாடப் போறேன்னு ஆசைப்பட்டான். நான்தான் சரின்னேன்" என்று அப்பாவைச் சமாதானப்படுத்தினாள் அம்மா.

அப்போது கிரிக்கெட் மட்டையைச் சுழற்றியவாறு, வியர்த்து விறுவிறுக்க வந்த ஜெயன் அப்பாவுக்கு எதிரேயிருந்த சோபாவில் உட்கார்ந்து கொண்டு மட்டையைக் கீழே வைத்தான். பின், காலால் சட்டென்று எட்டியொரு உதை விட்டான். அது மொசைக் தரையில் வழுக்கிக் கொண்டு ஓடி, ஓரமாகக் கிடந்த கட்டிலின் அடியில் புகுந்துகொண்டது.

பத்திரிகை படித்துக் கொண்டிருந்த அப்பா ஏறிட்டு அவனைப் பார்த்தார்.



''ஏண்டா, அதை வைக்க வேண்டிய இடத்திலே கொண்டு வைப்பதற்கு என்ன?'' என்று கேட்டார்.

அவர் கேட்ட கேள்வியைக் காதிலேயே வாங்காமல், ''ஒரே களைப்பா இருக்கப்பா'' என்று சோபாவில் சாய்ந்தான் ஜெயன்.

அவனது செயலைப் பார்க்க ஒருபுறம் வேடிக்கையாகவும், மறுபுறம் விசனமாகவும் இருந்தது அப்பாவுக்கு. அவர் மேற்கொண்டு ஒன்றும் சொல்லாமல், ''இன்னைக்கு ஊருக்குக் கிளம்பணும் இல்ல, கொண்டு போக வேண்டியதையெல்லாம் பொறுப்பா எடுத்து வை. எதையாவது மறந்துட்டு வழியிலே திகைக்காதே'' என்றார்.

அவன் ஊர் புறப்பட வேண்டிய நேரமும் வந்தது. அப்பா அவனை அழைத்து, நூறு ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்தார் ''டிக்கெட் வாங்கவும் வழிச் செலவுக்கும் வச்சுக்க, அனாவசியமா எந்தச் செலவும் செய்யாதே. டவுன் பஸ்ஸுக்குச் சில்லறையா எடுத்துட்டுப்போ, ஒருபோதும் கவனக்குறைவா இருந்துடாதே. ரொம்பவும் ஜாக்கிரதையா இருக்கணும்'' என்று எச்சரிக்கை செய்தார்.

எல்லாவற்றிற்கும் 'சரி,சரி'யென்று தலையசைத்தான் ஜெயன். விடுமுறை நாட்களைத் தன் அத்தை வீட்டில் செலவிடத்தான் புறப்பட்டுக் கொண்டிருந்தான் அவன். அப்பாவுக்கு அலுவலகத்தில் விடுமுறை கிடைக்காததால், அவன் மட்டும் தனியே செல்லும்படி ஆயிற்று. அவனது அஜாக்கிரதையையும், பொறுப்பின்மையையும் அவன் பெற்றோர் நன்கு அறிவார்கள். ஆயினும், வேறு வழியின்றி அவனைத் தனியே அனுப்பும்படி நேர்ந்தது.

இரயில் நிலையத்தை அடைந்த ஜெயன் பயணச் சீட்டை வாங்கிக் கொண்டு மீதிப் பணத்தையும், சில்லறைகளையும், தன் பர்ஸில் வைத்து, கால்சட்டைப் பையில் செருகிக் கொண்டான்.

இரயிலில் கூட்டமேயில்லை. மேலே சாமான்கள் வைக்கும் பலகை காலியாக இருந்தது. ஜெயனுக்கு தூக்கம் கண்களைச் சுற்றியது. அவன் அந்தப் பலகையின் மீது தாவியேறி, பெட்டியைத் தலைக்கு வைத்துக் கொண்டு



தியேட்டர் சிப்பந்தி: என்னங்க, படம் முடிஞ்சு கால்மணி ஆவுது. இன்னும் உட்கார்ந்துக்கிட்டு இருக்கீங்களே?

கிராமத்து மனிதர்: அட இருப்பா, நான் ஆட்டம் ஆரம்பிச்சு அரை மணி கழிச்சுத்தானே வந்தேன்!

— கி. சீனிவாசன்.

படுத்துக் கொண்டான்.

இரயிலின் அசைவும், 'தடக், தடக்' என்ற ஓசையும் அவனைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுவதைப் போல இருந்தது.


அப்போது 'கிணங்' என்று ஓசை கேட்டது. அவன் தலையைத் திருப்பிக் கீழே பார்த்தான். அவன் கால்சட்டைப் பையில் வைத்திருந்த பர்ஸில் இருந்து ஒரு ரூபாய் நாணயம் ஒன்று நழுவிக் கீழே விழுந்து கிடந்தது.

அது தன் பையிலிருந்து விழுந்த நாணயம்தான் என்பது அவனுக்கு மிக நன்றாகத் தெரியும். ஆனாலும், கீழே இறங்கி அந்த நாணயத்தை எடுப்பதற்குச் சோம்பற்பட்டவனாய், 'ஒரு ரூபாய்தானே!' என்ற அலட்சியத்துடன் அவன் பேசாமல் படுத்துக் கொண்டான்.

அவன் அரைத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்த நேரம் யாரோ தன் தோளில் தட்டுவதை உணர்ந்து விழித்துப் பார்த்தான்.

கீழே நடுத்தர வயதில் ஒரு மனிதர் நின்று கொண்டிருந்தார். ''தம்பி, இந்த நாணயம் உன்னுடையதுதானே? கீழே கிடக்குது பாரு'', என்று அந்த ஒரு ரூபாய் நாணயத்தைக் காட்டிய அவர், அதை எடுத்து அவனிடம் கொடுத்தார்.

சிரத்தையில்லாமல் அதை வாங்கிக் கொண்ட ஜெயன், தன் மற்றொரு



கால்சட்டைப் பையில் அந்த நாணயத்தைத் திணித்து விட்டு மீண்டும் படுத்துக் கொண்டான். அவருக்கு நன்றி சொல்லக் கூட அவனுக்குத் தோன்றவில்லை.

"தம்பி, பணத்தையெல்லாம் பத்திரமா வச்சுக்கோ. இரயிலிலே திருட்டு அதிகம் உண்டு. பெட்டி ஜாக்கிரதை. ரொம்பவும் தூங்கிடாதே" என்றவாறு அங்கிருந்து நகர்ந்தார் அந்த மனிதர்.

ஜெயன் அதையெல்லாம் பொருட்படுத்தாதவனாய் மறுபுறம் புரண்டு படுத்து நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்தான். சற்று நேரத்தில் அவன் கால்சட்டைப் பையிலிருந்த பர்ஸ் நழுவிக் கீழே விழுந்ததையோ, அடுத்த நிலையத்தில் இரயில் நின்ற போது, பரட்டைத் தலையுடன் ஏறிய ஒரு மனிதன், கேட்பாரற்றுக் கீழே கிடந்த அதைத் தூக்கிக் கொண்டு சென்றதையோ அவன் அறியவில்லை.

மறுநாள் காலை பொழுது விடிந்த பொழுது இரயில் ஊர் போய்ச் சேர்ந்தது. பெட்டியைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கினான் ஜெயன்.

அவனது அத்தை வீடு இரயில் நிலையத்திலிருந்து சற்றுத் தொலைவில் இருந்தது. நகரப் பேருந்து பிடித்துத்தான் அங்கு செல்ல வேண்டும். அத்தை வீட்டிற்கு ஏதாவது இனிப்புகள் வாங்கிச் செல்லலாமே என்று நினைத்து, பணத்திற்காகப் பைக்குள் கையை விட்டவன் திடுக்கிட்டான். பர்ஸைக் காணவில்லையே!

என்ன ஆயிற்று என்று புரியாமல் திகைப்படைந்தவன் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்த ஜெயனுக்குத் திரும்பத் திரும்ப எச்சரிக்கையாக இருக்கும்படி அப்பா சொல்லி அனுப்பியது நினைவுக்கு வந்தது.

'சை, எப்படி கவனமில்லாமல் தூங்கி விட்டேன்' என்று அவன் தன்னையே கடிந்து கொண்டான்.

'ஆமாம், இப்போது அத்தை வீடு செல்ல வேண்டுமானால், நகரப் பேருந்திற்குக் காசு வேண்டுமே? எல்லாவற்றையும் மொத்தமாக இழந்துவிட்டு இப்படி மாட்டிக் கொண்டேனே!' என்று அங்கலாய்த்தான்.

அத்தை வீட்டுக்கு ஐந்தாறு கிலோ மீட்டர் போக வேண்டும். இவ்வளவு தூரத்தையும் அவன் நடந்துதான் ஆக வேண்டும். அதை நினைக்கும் போதே அவனுக்கு மயக்கம் வந்து விடும்

போலிருந்தது.

'இரயிலில் அந்த ஒரு ரூபாய் நாணயம் கீழே விழுந்த போதுகூட அந்த மனிதர் எச்சரித்தாரே, அப்போதாவது பர்ஸை எடுத்துப் பெட்டிக்குள் வைத்திருக்க வேண்டும். அதைக் கூடச் செய்யாமல் அலட்சியமாக இருந்து விட்டேனே!' என்று இப்போது வருந்தினான்.


அவனுக்குப் பளிச்சென்று அந்த மனிதர் கீழே கிடந்த ஒரு ரூபாய் நாணயத்தைத் தன்னிடம் எடுத்துக் கொடுத்ததும் தான் அதை அலட்சியமாக வாங்கியதும் அவனுடைய நினைவுக்கு வந்தன. ஆனால் அதை எங்கே வைத்தோம் என்பது உடனே நினைவுக்கு வரவில்லை. உடனே பரபரவென்று அந்த நாணயத்தை இன்னொரு பையில் தேடலானான். ஆ! பையின் ஒரு மூலையில் கிடந்தது அந்த நாணயம். உடனே, அதைக் கையில் எடுத்தான்.

அந்த ஒரு ரூபாய் நாணயத்தின் மதிப்பு என்னவென்று அவனுக்கு இப்போது புரிந்தது. 'இந்தப் பணம் மட்டும் இப்போது இல்லாவிட்டால் இவ்வளவு தூரமும் நடந்தல்லவா போக வேண்டியது நேர்ந்திருக்கும்?'

அது தன்னுடைய பணம் என்று தெரிந்தும் கீழேயிறங்கி அதை எடுப்பதற்குச் சோம்பற் பட்டுக் கொண்டு, தான் அலட்சியமாகப் படுத்திருந்ததை நினைத்தான். எதிலும் பொறுப்புடனும், கவனத்துடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று அப்பா அடிக்கடி கூறுவது அலட்சியப்படுத்தக் கூடிய அறிவுரையல்ல என்று அவன் உணர்ந்தான்.

நகரப் பேருந்து 'பாம், பாம்' என்று ஒலி எழுப்பியவாறு அவனருகே வந்து நின்றது. அதில் ஏறிக் கொண்ட ஜெயன் அந்த ஒருரூபாயைக் கொடுத்து பயணச் சீட்டைப் பெற்றுக் கொண்டான்.

நடத்துனர் கொடுத்த மீதிச் சில்லறையைச் சரிபார்த்து, மிகக் கவனத்துடன் தன் பையில் வைத்துக் கொண்டான் அவன்.



பிருந்தாவனக் கவியரங்கம்

கண்ணன் பாட்டு

மேக வண்ணக் கண்ணனே
மேலே என்ன பார்க்கிறாய்?
அல்லிக் கண்கள் தூக்கியே
அங்கே என்ன பார்க்கிறாய்?



அன்னை உன்றன் குறும்பினால்
வெண்ணெய் எங்கோ வைத்தனள்
உறியில் இங்கு இல்லையே!
ஒளித்து எங்கோ வைத்தனள்!

தேடித் தேடி அலைகிறாய்
தெரிய வில்லை இடமுமே!
கொஞ்சும் கண்ணைச் சுழற்றியே
கோப மாகப் பார்க்கிறாய்!

மண்டி யிட்டு மண்ணிலே
மழலை நீயும் தவழ்கிறாய்!
அண்ணாந்து நீ பார்க்கிறாய்.
அதோ வெண்ணெய் என்கிறாய்!

இரா. சுமதி. (17578), சீர்காழி — 10.



நத்தையம்மா

நத்தையம்மா! நத்தையம்மா!
எங்கே செல்கிறாய்? — நீ
நாள் முழுதும் ஏனோ நீயும்
நகர்ந்து போகிறாய்?

சொந்த வீடு எதுவுமின்றி
அலைந்து திரிகிறாய் — நீ
சிரமப்பட்டு ஏனோ வீட்டைச்
சுமந்து செல்கிறாய்?

மூக்கு இரண்டை நீட்டி நீட்டி
உள் இழுக்கிறாய்? — நீ
வழி நெடுக்கக் கோடு — ஏனோ
போட்டுச் செல்கிறாய்.

பா. கணேசன் (16234)
விஜய மாநகரம்.

சின்னச் சின்ன வரிகள்

சின்னச் சின்ன வரிகளிலே
சிறந்த கருத்தைத் தந்தவர் யார்?
ஒன்றே முக்கால் அடிகளிலே
உயர்ந்த கருத்தைச் சொன்னவர் யார்?





உலகம் போற்றும் வகையினிலே
உயர்ந்த நூலைத் தந்தவர் யார்?
அகிலம் வியக்கும் நிலைமையிலே
அற்புதப் படைப்பைத் தந்தவர் யார்?

அறிவை வளர்க்கும் நூலினையே
ஆக்கித் தந்தவர் வள்ளுவரே!
நெறியை உயர்த்தும் குறளினையே
நித்தமும் படித்து உயர்வோமே!

— எஸ். லதா (392), நாட்டரசன் கோட்டை.

பூவே பூவே!

பூவே பூவே பூவம்மா;
பூத்துக் குலுங்கும் அழகம்மா!
தாவிப் பாயுது கண்ணம்மா:
தரவா உனக்கோர் முத்தம்மா?

பூசைக் குகந்த பொன்னம்மா:
பூவையர் விரும்பும் சின்னம்மா!
வீசும் மணத்தில் மணியம்மா:
விரும்பார் யார்உன் பேரம்மா?

கண்ணிற் இனிய தாயம்மா;
காட்சி தந்திடும் நல்லம்மா!
உன்னால் மணம்பெறும் நாரம்மா;
உண்டோ யார்க்கும் ஐயம்மா?

— ஏ. எஸ். முத்துக் குமார், (14186). செட்டிகுறிச்சி.


வண்ணப் பென்சில்கள்

வண்ண வண்ணப் பென்சில்கள்
வாங்கி வந்தார் மாமாவும்.

பச்சை நிறப் பென்சிலைப்
பாப்பா எடுத்துக் கொண்டது.

சிவப்பு நிறப் பென்சிலைச்
சின்னத் தங்கை எடுத்தனள்.

தங்க நிறப் பென்சிலைத்
தம்பி தூக்கிக் கொண்டனன்.




மீதி ஒன்றும் இல்லையே,
மீனு அக்கா எடுத்திட.

பல்லில் லாத பாப்பாவோ
பார்த்தே இதனைச் சிரித்தது!

— அ. உஷாராணி (2307), சென்னை50.

கண்ணனின் பிறந்த நாள்

சந்திரா குமாரசாமி



ஊரிலிருந்து தாத்தா வருகிறார் என்றாலே கண்ணனுக்குக் கொண்டாட்டம்தான்! வீட்டிலிருந்து வேடிக்கைக் கதைகள் கூறவும் சரி, வெளியில் கடற்கரை, கோயில் என்று கூட்டிச் செல்லவும் சரி, அவர்தான் அவனுக்குச் சரியான துணை. சதா "பிஸினஸ், பிஸினஸ்" என்று அலைந்து கொண்டிருக்கும் அப்பாவால் அவனோடு பொறுமையாகப் பேசிக் கொண்டிருக்கவோ, அங்கே, இங்கே கூட்டிச் செல்லவோ முடியாது.

கண்ணன் பிறந்த உடனேயே அவன் அம்மா இறந்து விட்டாள் என்பதால், அம்மாவின் அன்புருவத்தைப் போட்டோவில் பார்த்துத்தான் கண்ணனால் ஆறுதல் பெற முடியும். தினம் ஆயா, அதட்டி, உருட்டிச் சாப்பிடச் சொல்லும் பொழுதும், ஊட்டுவதாகப் பேர் பண்ணிப் பெரிய பந்தளவு வாயில் வைத்து அடைப்பதும் அவனுக்கு எரிச்சலாத இருக்கும். சாப்பாட்டைக் கண்டாலே வெறுப்பாகத் தோன்றும். இதுவே அம்மாவாக இருந்தால், அன்பாகக் கதை சொல்லி ஆசையாக ஊட்டிவிடுவாளே என்று நினைப்பான்.

பக்கத்து வீட்டு பாலு கூடச் சொன்னானே, அவங்க அம்மா "வெண்டைக்காய் சாப்பிட்டால் மூளை நல்லா வளரும்', கீரை, கேரட் முதலியவற்றை எறியக் கூடாது, கண்ணுக்கு நல்லது. உனக்குப் பிடிக்காட்டி என்ன; கேரட்டைச் சாதத்துக்குள்ளே மறைச்சு வச்சு, உன் வாய்க்குள்ளே நான் போட்டுடுவேன், நீ கண்ணை மூடிண்டு சாப்பிட்டுடு, பார்த்தாத்தானே பிடிக்காது. எங்க பாலு சமர்த்து, மேகத்துக்குள்ளே ஒளிஞ்சிண்டிருக்கிற நிலா மெல்ல, மெல்ல வந்து எட்டிப் பார்க்கிறதுக்குள்ளே சாப்பிட்டுடுவானாம்," என்று சிரிக்கச் சிரிக்கப் பேசி எல்லாக் காய்கறியையும் சாப்பிட வச்சுடுவாங்களாம், அப்படிப் பார்த்துப் பார்த்துச் சாப்பிடச் சொல்ல எனக்கும் அம்மா இருந்தாங்கன்னா, கசப்பான பாகற்காயைக்கூட ஆசையாச் சாப்பிட முடியுமே என்று தோன்றியது கண்ணனுக்கு.

தாத்தா வந்து விட்டால் எந்தக் கவலையும் கிடையாது. சின்னச் சின்னப் பாட்டும், கதையும் சிரிப்புமாகப்

பொழுது போகும். அத்துடன் ஒன்றையும் கூற வேண்டும். கண்ணன் என்றாலே 'கேள்வி' என்று சொல்லி விடலாம். ''இது என்ன? அது என்ன?'' என்று ஆயிரம் கேள்விகள் கேட்பான். அவனது கேள்விகள் யாருக்குமே கோபத்தை வரவழைக்கும். ஆனால், தாத்தாதான், ''எதையுமே ஏன்? எப்படி? என்று கேட்டுத் தெரிந்து கொள்வது மூளை வளர்ச்சிக்கு முக்கியம்'' என்று கூறிப் பொறுமையாகப் பதில் சொல்வார்.

''ராத்திரியானா ஏன் தாத்தா இருட்டாப் போகுது...? சூரியனும் தூங்குமா....? காலையிலே நட்சத்திரமெல்லாம் எங்கே போகும்?'' இப்படி ஓயாமல் அவனுக்குத் தோன்றும் சந்தேகங்களுக்கெல்லாம் புரியும்படியாக அவர் தான் பதில் சொல்வார். அவர், அவனுடைய அம்மா ஜானகியின் அப்பா. காஞ்சிபுரத்தில் ஒரு பள்ளியில் ஆசிரியராக இருக்கிறார். ஒவ்வொரு விடுமுறைக்கும் கண்ணனைப் பார்க்க வந்து விடுவார். விடுமுறை அதிக நாட்கள் இருந்தால் கண்ணனைக் காஞ்சிபுரத்துக்குக் கூட்டிப் போய் விடுவார்.

வாயிற் கதவு கிரீச்சிட்ட சில கணங்களில் ''கண்ணா, கண்ணா'' என்று தாத்தா அழைக்கும் குரல் கேட்டுத் தாவி வந்த கண்ணன், ''தாத்தா'' என்று கட்டிக் கொண்டான். "கண்ணா, சௌக்கியமா இருக்கியாப்பா?... ஏன் இப்படி மெலிஞ்சு போயிட்டே?'' ஆதரவாகக் கேட்டபடி அவரும் அவனை அணைத்துக் கொண்டார். ''கண்ணா, இன்னும் இரண்டு நாளில் உனக்குப் பிறந்தநாள் வருதே, ஞாபகம் இருக்காப்பா, உனக்குப் புதுச் சட்டை, ட்ரவுசர் எல்லாம் வாங்கிட்டு வந்திருக்கேன். உனக்குப் பிடிக்குமேன்னு பாட்டி திரட்டுப் பாலும், மைசூர்ப்பாகும் செஞ்சு குடுத்திருக்கா."

''என் பிறந்த நாளா! ஹையா! ஜாலி! நீங்க ட்ரவுசர் வாங்கிட்டீங்களா! அப்பவேன்னு அப்பாகிட்டே சொல்லி, ட்ரவுசர் வேண்டாம், போலீஸ் டிரஸ் வாங்குங்கன்னு சொல்லப் போறேன். அப்புறம் தாத்தா, என் ஃபிரண்ட் ஜான், அவன் பிறந்தநாளுக்குக் கேக் வெட்டினான் தாத்தா. எனக்கும் அதைப் போல வெட்டணும்னு ஆசையாயிருக்கு தாத்தா!'' கொஞ்சலும், கெஞ்சலுமாகக் குதித்தான் கண்ணன்.

''அதுக்கென்னப்பா, சாயந்திரம் பீச்சுக்குப் போய்க் கொஞ்ச நேரம் இருந்துட்டு அப்படியே கேக்குக்கு ஆர்டர் கொடுத்துட்டு வருவோம்,'' என்றார் தாத்தா.

''ஆ! அப்படியே போகலாம் தாத்தா'' கைதட்டி ஆர்ப்பரித்தான் கண்ணன்.

கடற்கரை மணலில் கால் புதைய, தாத்தாவின் கையோடு கை கோத்துக் கொண்டு சந்தோஷமாக நடந்தான் கண்ணன். ஓயாமல் குதிபோடும் கடல் அலைக்கும் அவனுக்கும் வித்தியாசமில்லை போல் தோன்றியது. தாத்தாவைத் தொண தொணப்பதும், குதிப்பதுமாக நிலத்தில் உலவும் அலையாகவே தெரிந்தான் கண்ணன்.

''தாத்தா, எங்க பள்ளிக் கூடத்திலே பொங்கல் பண்டிகையைப் பத்திக் கட்டுரை எழுதணும்னு சொல்லியிருக்காங்க தாத்தா, அதை இப்ப எனக்குச் சொல்லிக் கொடுங்க தாத்தா.''

''சொல்லித் தரேன் கண்ணா, இப்படி உட்காருவோம், வா அங்கே, இங்கே வேடிக்கை பார்க்காமே நான் சொல்றதைக் கவனமாக கேக்கணும், சரியா?'' என்றார் தாத்தா.

''சரி தாத்தா'' என்று அமைதியாக உட்கார்ந்து அக்கறையாகக் கேட்கத் தொடங்கினான் கண்ணன்.



''உங்க ஆபீசிலே வேலை பார்க்கிறவங்க எத்தனை பேர்?''

''அதுவா? எங்க ஆபீசிலே இருக்கிறவங்க இருபது பேர். வேலை பார்க்கிறவங்க எத்தனை பேருன்னு நிச்சயமாச் சொல்ல முடியாது.''

— தேனி. கோ. இரமேஷ்.



''ஒருபண்டிகைகொண்டாடறோம்னு அதை எதுக்காகக் கொண்டாடறோம்னு முதலிலே தெரிஞ்சுக்கணும்'' என்று ஆரம்பித்தார் தாத்தா.

''கொஞ்சம் இருங்க தாத்தா, அப்படின்னு கொஞ்ச நாளைக்கு முன்னாலே தீபாவளிப் பண்டிகை கொண்டாடினோமே, அது எதுக்கு, என்னத்துக்குன்னு எனக்கு ஒண்ணுமே தெரியாது தாத்தா, அதை முதலிலே சொல்லுங்க தாத்தா,'' இடைமறித்தான் கண்ணன்.

''உஷ்! என்ன கண்ணா! குரங்குக் குட்டி ஒரு கிளையில் இருந்து இன்னொரு கிளைக்குத் தாவுற மாதிரி தாவறியே! கட்டுரைக்கு உள்ள பண்டிகையை முதலிலே பார்ப்போம். மத்ததை அப்புறம் பார்ப்போம்.''

''அப்புறம்னா மறந்து போயிடும் தாத்தா. கட்டுரை எழுதிறதிலே ஞாபகம் இருக்கும். கடைக்குப் போய் கேக் ஆர்டர் குடுக்கணும், போலீஸ் டிரஸ் அளவு பார்த்து வாங்கணும். இதுக்கு நடுவிலே ஸ்கூலுக்கு வேறே போயிட்டு வரணும், அப்புறம் பிறந்தநாளும் வந்துட்டுப் போயிடும், நீங்களும் ஊருக்குப் போயிடுவீங்க. கடேசிலே எனக்குத் தீபாவளிப் பண்டிகையைப் பத்தித் தெரியாமலே இருக்கப் போகுது.''

''ஏதேது ஒரேயடியா அடுக்கிக்கிட்டே போறியே கண்ணா, சரி முதலிலே தீபாவளிப் பண்டிகையைப் பத்திச் சொல்றேன். ஆனா ஒரு கண்டிஷன். அது ஒரு கதை. அதை நான் சுருக்கமாச் சொல்லி முடிச்சுடுவேன். நீ இது என்ன, அது என்னன்னு குறுக்கே பேசக்கூடாது. பேசினால், வளவளன்னு கதை பேசவே நேரம் போயிடும், அப்புறம் கட்டுரையைத் தெரிஞ்சுக்க நேரம் இருக்காது'' என்றார் தாத்தா.

''குறுக்கே பேசவே மாட்டேன் தாத்தா. நீங்க சீக்கிரமாச் சொல்லி முடிச்சுடுங்க'', என்றான் கண்ணன் உற்சாகமாக.

''முந்தைய காலத்திலே நரகாசுரன்னு ஓர் அசுரன் இருந்தான். அவனாலே மக்களெல்லாம் ரொம்பக் கஷ்டப் பட்டாங்க. காட்டு மிருகங்கள் மாதிரி ஜனங்களைப் பிடிச்சு விழுங்கிறதும், ஆடு, மாடுகளை அடிச்சுத் திங்கிறதும், ஜனங்களை அடிச்சுத் துன்புறுத்தி அவங்ககஷ்டத்தைப்பாத்துசந்தோஷப் படுறதுமா இருந்தான் அவன். அவனோடே இம்சை தாங்க முடியாத மக்களெல்லாம் மகாவிஷ்ணுவைப் பிரார்த்திச்சாங்க. அவர் வந்து அவனோடே யுத்தம் செய்து அவனைக் கொன்றார். அந்த அசுரன் சாகற சமயத்தில் என்ன கேட்டான் தெரியுமா?''

''என்ன, மன்னிப்புக் கேட்டிருப்பான்.''

''மன்னிப்புக் கேட்டான். அதோட இன்னொரு வரமும் கேட்டான்.''

''வரமா? எதுக்குத்தாத்தா? சாகாமே இருக்கறதுக்கா?''

''இல்லை, கண்ணா. நான் இதுவரைக்கும் ஜனங்களை எவ்வளவோ கஷ்டப் படுத்திட்டேன். என் பெயரைக் கேட்டாலே அவங்களெல்லாம் நடுங்குவாங்க. இப்ப நான் சாகப்போறேன்னு தெரிஞ்சா அவங்களெல்லாம் ரொம்ப சந்தோஷப்படுவாங்க. இனிமேல் என் ஞாபகம் வந்தா அவங்களுக்கு பயமோ நடுக்கமோ வராமே சந்தோஷம்தான் வரணும். இவன் ஒழிஞ்சானேன்னு இப்பக் கொண்டாடறதோடே, சந்

தோஷப்படறதோட வருங்காலத்திலேயும், வருங்கால சந்ததியும் கொண்டாடணும், சந்தோஷப்படணும். ஒவ்வொரு வருஷமும் இந்த நாளில் புதிய ஆடைகள் அணிந்து, இனிப்புகள் உண்டு தீபங்கள் ஏற்றி வைத்துத் தீபத்தின் ஒளியில் தீபாவளியாகக் கொண்டாட வேண்டும்' என்று கேட்டுக் கொண்டான். மகாவிஷ்ணுவும் மகிழ்வோடு வரம் தந்தார். தீப, ஆவளி, தீபங்களின் வரிசை என்று பொருள். தீபங்கள் ஏற்றிக் கொண்டாடுவதால் தீபாவளி என்று பெயர் வந்தது. இப்ப பொங்கல்பண்டிகைக்குப்போவோமா?" என்றார் தாத்தா. தலை கவிழ்ந்து அமைதியாக இருந்த கண்ணனிடம் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை.

"என்ன பதிலைக் காணோம், தூங்கிப் போயிட்டியா?" சிரித்தபடி அவன் முகத்தை நிமிர்த்திய தாத்தா, அவன் கண்களில் நிறைந்து கன்னத்தில் உருண்டு ஓடும் நீரைக் கண்டு பதறிப் போனார்.

"என்னப்பா கண்ணு? என்ன ஆச்சு? கதையைக் கேட்டு பயமாயிருக்கா? பசிக்குதா? ஏன் கண்ணீர் விடுகிறாய்?" துடித்தார் தாத்தா.

"எங்க அம்மா நல்லவங்களா... இல்லையா? சொல்லுங்க தாத்தா."

"அதைப்பத்திஇப்பஎன்னகண்ணு? முதலிலே நீ ஏன் அழறே, அதைச் சொல்லு."

"நீங்க சொல்லுங்க தாத்தா" விம்மல் வெடிக்கக் கேட்டான் கண்ணன்.

"சிரிப்பு மாறாத முகமும், சினம் காட்டாத குணமும்தான் ஜானகின்னு கடைசி வரைக்கும் நல்ல பெயரோடே தானப்பா வாழ்ந்துட்டுப் போனா உங்கம்மா. பணக்காரிங்கிற கர்வம் கொஞ்சமும் இல்லாமே, ஏழைகளுக்கு எல்லா உதவியும் செஞ்சு அவங்களை அன்பா நடத்துவா. அவ சாவுக்கு இந்த ஊரிலே பாதி ஜனம் வந்து நின்னு அழுது தவிச்சுதுப்பா", கண் கலங்க உணர்ச்சி பெருகச் சொன்னார் தாத்தா.

"நான் இனிமேல்என் பிறந்தநாளைக் கொண்டாடப்போறது இல்லே தாத்தா. எனக்குப் புது டிரஸ், கேக், மைசூர்பாகு எதுவுமே வேண்டாம்", என்றான் கண்ணன் அழுதுகொண்டே.

"என்ன கண்ணு, நீ பேசறதெல்லாம் ஒண்ணுமே புரிய மாட்டேங்குது! என்னமோ கதையைக் கேட்டுட்டு அழுகிறே, உங்க அம்மாவைப் பத்திக் கேட்டுப் பிறந்த நாள் வேண்டாம்கிறே, ஏன்?"

"தாத்தா, நரகாசுரன் கெட்டவன்ங்கறதுனாலேதானே நாமெல்லாம் இப்பவும் அவன் செத்த நாளைக் கொண்டாடுறோம். நான் பிறந்தவுடனேயே ஆஸ்பத்திரியிலேயே எங்க அம்மா செத்துப் போயிட்டாங்கன்னு சொல்லீங்களே... அப்ப நான் பிறந்தநாளும் எங்க அம்மா இறந்த நாளும் ஒண்ணுதானே! அப்ப அவங்க செத்த நாளில் நான் பிறந்த நாளைக் கொண்டாடினு, அவங்க செத்ததுக்கு நான் சந்தோஷப்படற மாதிரியும், அவங்க அந்த அசுரன் மாதிரிக் கெட்டவங்கங்கிற மாதிரியும்தானே தாத்தா ஆகும்? இனிமேல் நான் பிறந்தநாள் கொண்டாடி எங்க அம்மாவை நான் அவமதிக்க மாட்டேன் தாத்தா, அவமதிக்கமாட்டேன்" என்று கூறியபடி தாத்தாவின் மடியில் தலை வைத்து விசும்பி, விசும்பி அழுதான் கண்ணன்.

அந்தப் பிஞ்சு உள்ளம் தாயின் மீது வைத்திருக்கும் அன்பையும், மரியாதையையும் நினைத்துத் தாத்தாவின் கண்களிலும் கண்ணீர் சுரந்தது.



நோயாளி: டாக்டர்! எது சாப்பிட்டாலும் ஜீரணமே ஆகமாட்டேங்குது!


டாக்டர்: அப்படியா? இந்த மாத்திரையை சாப்பிடுங்க...!

நோயாளி: இது மட்டும் எப்படி டாக்டர் ஜீரணமாகும்?

— குத்தாலம் ராஜா.



புதிய புத்தகங்கள்



பாப்பா விரும்பும் பாட்டு

கவிஞர் இமயபாரதி இயற்றிய 44 சிறுவர் பாடல்கள் அடங்கிய புத்தகம் இது.

'அணிலே அணிலே கொஞ்சம் நில்,
அழகாய் எடுக்கப் புகைப்படமே.
கனிந்த கொய்யா கவைப்பதைப் போல்
காட்சி தேவை சற்றே நில்'

என்று காமிராவை வைத்துக் கொண்டு ஒரு சிறுவன் பாடும் பாடலும்,

ஏடெடுத்துப் பள்ளி செல்லும்
இளைய சிங்கங்காள்! — இந்த
நாடு யர்த்த ஞாலம் போற்ற
நன்கு படியுங்கள்.

என்று கல்வியின் அவசியத்தை நன்குணர்த்தும் பாடலும் குறிப்பிடத்தக்கன. 'எலி வளர்த்த பூனை' 'சுந்தனும் நந்தனும்,' 'குட்டி ஆடும் குள்ள நரியும்' போன்ற கதைப் பாடல்களும் புத்தகத்திற்குப் பெருமை சேர்க்கின்றன.

வெளியிட்டோர்: பைரவி பதிப்பகம், 76, புனித சேவியர் தெரு, சென்னை — 600 001. பக்கங்கள்: 64; விலை ரூ. 6/—.

Who's Who of Tamil Writers For Children

குழநதை எழுததாளர் சங்கம் ஏற்கெனவே குழந்தைகளுக்காக எழுதும் தமிழ் எழுத்தாளர்களைப் பற்றிய விவரங்கள் கொண்ட 'குழந்தை • எழுத்தாளர் யார், எவர்?' என்ற இரு புத்தகங்களை வெளியிட்டிருக்கிறது. இப்போது, ஆங்கிலத்தில் 339 குழந்தை எழுத்தாளர்களின் பெயர்கள், அவர்களின் முகவரிகள், புனை பெயர்கள் (இருந்தால்) பிறந்த தேதி, பிறந்த இடம், அவர்கள் எவ்வளவு காலமாக எழுதி வருகிறார்கள், எத்தனை நூல்கள் எழுதியிருக்கிறார்கள், அவர்கள் பெற்ற விருதுகள், பரிசுகள், பாராட்டுக்கள் போன்ற விவரங்களை வெளியிட்டிருக்கிறது

தொகுத்தவர்: டாக்டர் ஈ. எஸ். ஹரிஹரன் (ரேவதி), கிடைக்கும் இடம்: ஐந்திணைப் பதிப்பகம், பைகிராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை — 5. பக்கங்கள்: 116; விலை ரூ. 10/—.

சிலை சொல்லும் கதை

இந்தப் புத்தகத்தில் இரு கதைகள் இருக்கின்றன. முதல் கதையான 'சிலை சொல்லும் கதை'யில், மலைமேல் சிலைகளாக நிற்கும் யானையையும், ஒரு சிறுவனையும் பற்றிப் பூக்காரப் பொன்னம்மாப் பாட்டி சொல்லக் கேட்டு வியப்படைகிறார்கள், சுரேஷும் அவனுடைய தங்கைகளான சீதாவும், செல்வியும். பாரதியார் பாடினரே 'உயிர்களிடத்தில் அன்பு வேணும்' என்று, அதை நன்றாக உணர்த்துகின்றது இந்தக் கதை. 'உள்ளத்தால் உயர்ந்தவன்' என்ற இன்னொரு கதையில், குள்ளமாக இருந்து பலருடைய கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளான கோபி, எப்படி எண்ணற்ற குழந்தைகளை மகிழ வைத்து ஜெயகோபியாக மாறுகிறான் என்பதை எடுத்துக் காட்டுகிறார் திருமதி ராஜலட்சுமி சுப்பிரமணியம்.

வெளியிட்டோர்: தமிழ்ப் புத்தகாலயம், 58, டி. பி. கோயில் தெரு, சென்னை — 5. பக்கங்கள்: 96; விலை ரூ. 8/—.

கடவுளைக் கண்டவர்கள்

கோகுலத்தில் தொடர்ந்து வெளிவந்த பன்னிரண்டு நாயன்மார்களைப் பற்றிய கதைகளையும் இப்புத்தகத்தில் காணலாம். சாதி, குலம், செல்வம், ஆண், பெண், என்ற வேறுபாடு இல்லாமல், மக்கள் நாயன்மார்களைப் போற்றி வந்தனர். இன்றும் போற்றி வருகின்றனர் என்பதைச் சுவையாகக் கூறி உணர்த்துகிறார், திருமதி தேவி நாச்சியப்பன். உள்ளே ஒவ்வொரு கதைக்கும் ஓவியர் வினு வரைந்துள்ள படங்கள் சிறப்பாக இருக்கின்றன.

விற்பனை உரிமை: பாரி நிலையம், சென்னை — 108. பக்கங்கள்: 62; விலை ரூ. 5/—.






Parry's

Funpage


மிட்டாய் மன்னன்
சொல்லித்தருகிறார்—
கற்றுக்கொள்ளவும்
பொழுது போக்கவும்
குதூகலமான யோசனைகள்!

இங்குள்ள ஜம்போ யானையை நிற்க வைப்பது மிகவும் சுலபம். கீழே தந்துள்ளபடி செய்து பாருங்கள்.




1. ஜம்போவின் படத்தை மூன்று தடிமனான காகிதங்களில் (A,B,C) அப்படியே பதிவு ('ட்ரேஸ்') எடுங்கள்.

2. மூன்று ஜம்போக்களுக்கும் வர்ணம் பூசுங்கள். தனியாக வெட்டி எடுத்து, புள்ளிக் கோட்டை ஒட்டி மடியுங்கள்.



3. A-யின் பின்பக்கத்தின் ஒரு பாதியுடன் B-யின் பின்பக்கத்தின் ஒரு பாதியை பசையால் ஒட்டுங்கள்.

4. A மற்றும் B-யின் ஒட்டப்படாத பின் பாதி பகுதிகளுடன் C-யின் பின்பக்கத்தை ஒட்டுங்கள் (இங்குள்ள படத்தைப்பாருங்கள்)



இப்போது ஜம்போவை நிற்க வைத்தால் நிற்கும். பார்ப்பதற்கு அலங்காரமாக இருக்கும்.

உங்களுடைய பிறந்தநாளை நினைவில் வைத்துக்கொள்ள மிட்டாய் மன்னன் விரும்புகிறார்.

ஆகவே உங்கள் பெயர், விலாசம் பிறந்த தேதி, ஆகிய விவரங்களை கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்.

The King of Sweets
P.O. Box No 2040
Madras 600 001



Parry's

THE KING OF SWEETS



லீப் வருடத்தின் கதை

ஜானகி மணாளன்

குழந்தைகளே! இது 1988 ஆம் ஆண்டு. இந்த எண்ணை 4ஆல் வகுத்துப் பாருங்கள். மீதி வராது. அப்படி இருந்தால் என்ன? உங்களுக்குத் தான் தெரியுமே!


ஆம்! இது லீப் வருடம். எனவே இவ்வாண்டு பிப்பிரவரி மாதத்துக்கு ஒரு நாள் அதிகம். அதாவது 29 நாட்கள்.

ஏன் இப்படிச் செய்கிறோம்? இதற்குப் பின்னணியில் ஒரு வரலாறே இருக்கிறது. அதாவது கதை! லீப் வருடத்தின் கதை!

பண்டைக் காலத்தில் சந்திரனை வைத்துத்தான் வருடம்,மாதம் ஆகியவற்றைக் கணக்கிட்டனர். இரண்டு பௌர்ணமிகளுக்கு இடையில் உள்ள காலம்தான் ஒரு மாதம். அதாவது ஒரு சந்திர மாதம்.

நமது நாட்டுப் பஞ்சாங்கத்திலும் இந்த முறை உண்டு. பௌர்ணமி என்பது முழுச் சந்திரன் தோன்றும் நாள். பிறகு தினசரி தேயத் தொடங்கி 15ஆம் நாள் சந்திரன் மறைந்து விடும். அன்றுதான் அமாவாசை. மறுநாள் முதல்தினசரி துளித்துளியாக வளர்ந்து கொண்டே வந்து, அடுத்த 15ஆம் நாள் மீண்டும் முழுச் சந்திரனாகத் தோன்றும். அது அடுத்த பௌர்ணமி. இந்த இரு பௌர்ணமிகளுக்கும் இடையில் சந்திரனில் ஏற்படும் இந்த மாற்றத்தை வளர்பிறை, தேய்பிறை என்போம். இந்த இரண்டும் சேர்ந்தது தான் ஒரு சந்திர மாதம் என்பது. இதற்கு 29½ நாட்கள். அதாவது சந்திரன் நம் பூமியை ஒரு தடவை சுற்றிவர எடுத்துக் கொள்ளும் காலம். இதைப் போன்று, 12 மாதங்கள் சேர்ந்ததுதான் ஒரு 'சந்திர ஆண்டு.' அதற்கு 354 நாட்கள்.

பிற்பாடு சூரியனை ஆதாரமாகக் கொண்டு மாதங்களைக் கணக்கிடத் தொடங்கினார்கள். அதற்கு 'சூரிய மாதம்' என்று பெயர். அதன்படி, நம் பூமி ஒரு தடவை சூரியனைச் சுற்றி வருவதற்கு ஆகும் காலம் ஒரு ஆண்டு. அதற்கு 365¼ நாள் ஆகும்.



இந்தக் கணக்குகளின்படி சூரிய ஆண்டுக்கும் சந்திர ஆண்டுக்கும் 11¼ நாள் வித்தியாசம் வந்தது. எனவே இரண்டும் ஒத்துப் போகவில்லை. எனவே அவ்வப்போது சந்திர ஆண்டில் 'அதிமாதம்' என்று கூடுதலாக ஒரு மாதத்தைச் சேர்த்துக் கணக்கைச் சரி செய்து கொண்டனர்.

பிற்பாடு, நடந்ததைப் பார்ப்போம்.

பண்டைக் காலத்தில் ஐரோப்பாவில் ஒரு பேரரசு இருந்தது. ரோமப் பேரரசு என்று பெயர். ஜூலியஸ் சீஸர் அதன் பேரரசராக இருந்தார். அவர் பெயரால்தான் காலண்டரில் 'ஜூலை' மாதம் அமைக்கப்பட்டுள்ளது. அவர் காலத்தில் ஒரு வானியல் ஆராய்ச்சியாளர் ஒருவர் இருந்தார். 'சோஸிஜினிஸ்' என்று பெயர். அவர் சீஸருக்கு ஒரு யோசனை சொன்னார். அதை அரசர் ஏற்றுக் கொண்டார். அதன்படி புதிய காலண்டர் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

அந்தக் காலண்டர்தான், ஒரு சில மாற்றங்களுடன் இன்று நடைமுறையில் உள்ளது. இது நடந்தது கிமு 45—ஆம் ஆண்டு.

இக் கணக்குப்படி ஆண்டுக்கு 365 நாட்கள். ஆனால், பூமி ஒரு தடவை சூரியனைச் சுற்றிவர 365¼ நாள் என்று சொன்னேன் அல்லவா? அதை, துல்லியமாகக் கணக்குப் பார்த்தால், பூமி சூரியனைச் சுற்றிவர 365 நாள் 5 மணி 48 நிமிடம் 47½ நொடி ஆகிறது. அதில்365நாட்களை எடுத்துக்கொண்டு மீதியுள்ள 5 மணி 48 நிமிடம் 47½ நொடியை அதாவது கிட்டத்தட்ட ¼ நாளை விட்டு விடுகிறார்கள்.

இவ்வாறு விடப்படும் 5 மணி 48 நிமிடம் 47½ நொடி என்பது நான்கு ஆண்டுகளில் மொத்தம் எத்தனை ஆகும்? கணக்கிட்டுப் பாருங்கள். 23 மணி 15 நிமி 10 நொடி. அதாவது ஒரு நாள் அல்லது 24 மணிக்கு 44 நிமிடம் 50 நொடி குறைவு. அதை 24 மணி என்று வைத்துக் கொண்டு, அந்த ஒரு நாளை, நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை, பிப்பிரவரி மாதத்தில் சேர்த்து விடுகிறார்கள். 4ஆல் மிச்சமின்றி வகுபடக் கூடிய ஆண்டில் முதன் முதல் அது சேர்க்கப்பட்டது. அது முதல் தொடர்ந்து அத்தகைய ஆண்டின் பிப்ரவரி மாதத்தில் அந்த ஒரு நாள் சேர்க்கப்படுகிறது. அதை ஏன் பிப்ரவரியில் சேர்த்தார்கள் தெரியுமா? அதில்தானே ஆகக் குறைவாக 28 நாட்கள் உள்ளன! அந்த ஆண்டுதான் லீப் வருடம் எனப்படுவது.

சரி அதை ஏன் 'லீப் வருடம்' என்கிறார்கள் தெரியுமா? ஆங்கிலத்தில் 'LEAP' என்றால் 'தாண்டிக் குதித்தல்' என்று பெயர். லீப் வருடத்தில் ஒரு தினம் தாண்டிக் குதிக்கிறது. எப்படி? சொல்கிறேன்.


உதாரணத்துக்கு உலகம் முழுதும் பிரபலமான ஒரு நாளை எடுத்துக் கொள்வோம். கிறிஸ்துமஸ் தினம் தெரியுமல்லவா? டிசம்பர் 25—ஆம் நாள். அதை எடுத்துக் கொள்வோம்.


1985—ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் புதன் கிழமை வந்தது. 1986—ஆம் ஆண்டு வியாழக் கிழமை வந்தது. 1987ஆம் ஆண்டு வெள்ளிக் கிழமை வந்தது. ஆனால், 1988 லீப் வருடத்தில் இந்த வரிசைப்படி சனிக்கிழமை கிறிஸ்துமஸ் வராது. ஒரு தினத்தைத் தாண்டிக் குதித்து, சனி போக ஞாயிற்றுக் கிழமை வரும். காலண்டரில் சரி பார்த்துக் கொள்ளுங்கள்.

இப்படி நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை பிப்பிரவரியில் ஒரு நாள் சேர்க்கப்படும் போது கிழமையில் ஒரு நாள் தாண்டிக் குதித்து வருவதால்தான் இந்த ஆண்டை லீப் வருடம் என்கிறோம்!

சரி, இப்போது இன்னொரு கணக்கையும் பார்ப்போம்.

லீப் வருடத்தில் சேர்க்கப்படும் ஒரு நாள் 24 மணிக்குக் குறைவு என்று பார்த்தோம் அல்லவா? எத்தனை குறைவு? 44 நிமிடம் 50 நொடி அல்லவா? இந்தக் குறைவு, வருடங்கள் ஆக ஆக, அதிகரிக்குமே! அப்போது காலண்டர் கணக்குச் சரி வராதே! என்ன செய்வது? இப்போது நமக்கு வரும் இந்த ஐயம் முன் காலத்தில் அவர்களுக்கும்வந்தது. அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா?





நான்கு ஆண்டுகளில் அதிகமாகச் சேர்ப்பது 44 நிமி 50 நொடி. நானூறு ஆண்டுகளில் இந்த அதிகம் எத்தனை ஆகும்? நானூறு ஆண்டுகளில் எத்தனை லீப் வருடம் வருமோ அத்தனை தடவை 44 நிமி 50 நொடி அல்லவா? அதாவது 3 நாள் 0 மணி 28 நிமிடம் 50 நொடி அதிகமாகச் சேர்த்திருப்பார்கள். ஒவ்வொரு 400 ஆண்டிலும் இந்த வீதத்தில் சேர்த்திருப்பார்கள். அல்லவா?

இதை ஈடு செய்ய ஒரு ஏற்பாடு செய்தார், 13ஆம் கிரிகோரி என்ற ஒரு போப்பாண்டவர். ஜூலியஸ் சீசர் கொண்டு வந்த காலண்டரில் அவர் இந்த மாற்றத்தைச் செய்ததால், அதன் பிறகு ஏற்பட்ட காலண்டர் முறைக்கு கிரிகோரி காலண்டர் என்று அவர் பெயரே வைக்கப்பட்டுவிட்டது.

அவர் 1582 அக்டோபர் வரையில் அதிகமாகச் சேர்த்திருந்த நாட்களைக் கணக்கிட்டார். பத்து நாள் ஆகியிருந்தது. அதை என்ன செய்தார் தெரியுமா? பழைய காலண்டரை புதுப்பிக்கும் போது, அந்தப் பத்து நாட்களை விட்டு விட்டுப் புதுப்பித்து விட்டார்.

சரி! பழைய கணக்கு சரியாகப் போய் விட்டது. அதன் பிறகு வரும் ஒவ்வொரு லீப் வருடத்திலும் 44 நிமி 50 நொடி வீதம் அதிகம் சேர்க்கப் படப் போகும் நாட்களை என்ன செய்வது? எப்படி ஈடு செய்வது? அதற்கும் ஒரு நடைமுறையை வகுத்து வைத்து விட்டார். என்ன தெரியுமா?

சாதாரணமாக 4 ஆல் மிச்சமின்று வகுபடும் ஆண்டு லீப் வருடம் என்று கருதப்பட்டு பிப்ரவரியில் ஒரு நாள் கூட்டப்படும். ஆனால், 4 ஆல் வகுபட்டாலும் கூட, 100 ஆல் மிச்சமின்றி வகுபடும் ஆண்டு லீப் வருடமாகக் கொள்ளப்பட மாட்டாது. உதாரணத்துக்கு 1300 ஆம் ஆண்டு என்று வைத்துக் கொள்ளுங்கள். இது 4 ஆல் மிச்சமின்றி வகுபடும். எனவே லீப் வருடம் என்பீர்கள். அதுதான் இல்லை. ஏன் தெரியுமா? இது 100 ஆலும் மிச்சமின்றி வகுபடுகிறது அல்லவா? எனவே அது லீப் வருடம் அல்ல. இந்த ஆண்டில் பிப்ரவரிக்கு 28 தேதிகள்தான்.

இதே போன்று, மற்றொரு கணக்கையும் சரி செய்து வைத்துள்ளார்கள். என்ன தெரியுமா? 100 ஆல் மிச்சமின்றி வகுபட்டால் அது லீப் வருடம் அல்ல என்றோம் அல்லவா? மூன்று தடவை தொடர்ந்து 100 ஆல் வகுபட்ட பிறகு நான்காவது தடவையாக அதாவது 400 ஆல் மிச்சமின்றி வகுபட்டால், அது லீப் வருடம் என்று திட்டப்படுத்தியுள்ளனர்.

இந்த உதாரணத்தைப் பாருங்கள்; நன்கு புரியும். 1200, 1600, 2000 ஆகிய ஆண்டுகள் 400 ஆல் மிச்சமின்றி வகுபடும் அல்லவா? எனவே இவை லீப் வருடம்.

ஆனால், 1300, 1400, 1500, 1700, 1800, 1900, 2100 ஆகியவை 400 ஆல் வகுபடாது. 100 ஆல் வகுபடும்., எனவே 4 ஆல் வகுபட்டாலும்கூட இவை லீப் வருடம் அல்ல.

என்ன? புரிந்து கொண்டீர்களா?

இப்போது இன்னொரு கணக்கைப் பார்ப்போம். கிரிகோரி மிகத் துல்லியமாக எல்லாவற்றையும் கணக்கிட்டு, தவறு ஏற்படாவண்ணம் காலண்டரை மாற்றி அமைத்து விட்டார். என்றாலும் கூட, ஒவ்வொரு சூரிய ஆண்டிலும் அந்தக் காலண்டர் 26 நொடி முன் கூட்டிச் செல்கிறது என்பதைப் பிற்பாடு கணக்கிட்டுக் கணித்தார்கள். இதைச் சரிக்கட்ட என்ன ஏற்பாடு செய்துள்ளார்கள், தெரியுமா?

ஆண்டுக்கு 26 நொடி என்பது, 3323 ஆண்டுகளில் ஒரு நாள் ஆகி

றது. எனவே கிரிகோரி முறை காலண்டரின் மாற்றம் செய்யப்படுவதற்காக, 4000—த்தால் மிச்சமின்றி வகுபடும் ஆண்டு, 400 ஆல் மிச்சமின்றி வகுபட்டாலும் கூட, அது லீப் வருடம் ஆகாது. சாதாரண வருடம்தான்!

இது பற்றி நாம் கவலைப்பட வேண்டாம். ஏன் தெரியுமா? இப்போது நாம் கி.பி. 1988ல் இருக்கிறோம். அடே....யப்பா கி.பி. 4000த்துக்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் உள்ளன!!

குழந்தைகளே! இப்போது லீப் வருடத்தின் கதையைத் தெரிந்து கொண்டீர்கள் அல்லவா?

லீப் வருடம் என்று சொன்னாலே போதும்! பிப்பிரவரிக்கு 29 தேதி என்ற நினைவு உங்கள் மனத்தில் பளிச்சிடும்.

இதே போன்று, இந்த லீப் வருடத்தில் மேலும் இரண்டு சிறப்பு நிகழ்ச்சிகள் வழக்கமாக நடைபெறுகின்றன. அவை இரண்டும் உலகின் கவனத்தைக் கவரக் கூடியவை. என்ன தெரியுமா?

ஒன்று அமெரிக்க ஐக்கிய நாடுகளின் (USA) குடியரசுத் தலைவரின் தேர்தல். மற்றொன்று ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள்.

இவை இரண்டும் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை, ஒவ்வொரு லீப் வருடத்திலும்தான் நடைபெறும்.

இந்த இரண்டைப் பற்றியும் அறிந்து கொள்ள ஆர்வம் ஏற்படுகிறது அல்லவா? பிற்பாடு உரிய சந்தர்ப்பத்தில் இவை இரண்டின் கதையையும் சொல்லப் போகிறேன். அது வரையில் உங்கள் ஆவலுக்கு அணை போட்டு வையுங்கள். என்ன? சரி தானே!

சார்லஸ் டார்வின்



'மந்தியிலிருந்து மனிதன் வந்தான்' என்று சொன்னதுமே நம் நினைவுக்கு வருபவர் சார்லஸ் டார்வின் என்னும் விஞ்ஞானிதான். பரிணமைக் கொள்கையை வகுத்த ஆங்கிலேயரான இவர், சிறுவயதிலிருந்தே வண்டுகளைச் சேகரிப்பதிலும், விலங்குகளையும் தாவரங்களையும் ஆராய்வதிலும் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்.

இவரது பாட்டனாரும் தந்தையும் டாக்டர்களாகத் தொழில் நடத்தியவர்கள். டாக்டர் குடும்பத்தில் பிறந்த இவரும் ஒரு டாக்டராக வரவேண்டுமென இவருடைய தந்தை ஆசைப்பட்டார். எனவே, இவரை எடின்பரோ பல்கலைக் கழகத்தில் சேர்த்து விட்டார். இவருக்கு டாக்டராக விருப்பம் இல்லை. பாதிரியாராக நினைத்தார். ஆயினும், இவருடைய நண்பரான டாக்டர் கிராண்ட் என்பவர் இவருக்குள்ள ஈடுபாட்டை உணர்ந்து, இவரை இயற்கையை ஆராயும் வழியில் திருப்பி விட்டார்.

இவர் கப்பலில் இயற்கை விஞ்ஞானியாக வேலைக்குச் சேர்ந்து, ஐந்து ஆண்டுகள் அந்தக் கப்பலிலே சென்று பலவித ஆராய்ச்சிப் பொருள்களைச் சேகரித்து வந்தார். இரவு பகலாக ஆராய்ச்சி செய்தார்.

தாம் கண்ட விஞ்ஞான உண்மைகளை எழுதிப் புத்தகங்களாக வெளியிட்டார். இனங்களின் தோற்றம் (Origin of Species), மனிதனுடைய பாரம்பரியம் (The Descent of Man) — இந்த இரண்டு நூல்களும் மிகவும் குறிப்பிடத்தக்கவை.

டார்வின் பல ஆண்டுகள் நோயாளியாகவே இருந்தார். ஆயினும், இவர் விஞ்ஞான ஆராய்ச்சிகளை இடைவிடாமல் செய்து வந்தார். இவரது மதிநுட்பமும், விடாமுயற்சியுமே இன்று உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானிகளில் ஒருவராக இவர் விளங்கச் செய்துள்ளன!

பிருந்தாவனக் கதையரங்கம்

தவறும் தண்டனையும்



மு. திருநாவுக்கரசு (16472)

மகத நாட்டை மன்னன் மனோகரன் அரசாண்டு வந்தான். ஒருநாள் ராணியின் தங்க ஒட்டியாணம் களவு போய் விட்டது. திருடனை ஒரு வாரத்திற்குள் பிடிக்கும்படி தளபதி ராஜனுக்கு உத்தரவிட்டான் அரசன். ஒரு வாரமாகத். தேடியும் திருடன் அகப்படவே இல்லை.

திருடனைப் பிடிக்க இயலவில்லையென்றால் அரசர் தமக்குத் தண்டனை அளிப்பார் என்று எண்ணிய ராஜன், ஓர் ஏழை விவசாயியைப் பிடித்துச் சென்று 'இவன்தான் திருடன். ஒட்டியாணத்தை எங்கோ ஒளித்து வைத்திருக்கிறான். உண்மையைக் கூற மாட்டேன் என்கிறான்' என்று அரசனிடம் ஒப்படைத்தான். விவசாயி எவ்வளவோ கதறியும் மன்னன் அவனுக்கு 'மரண தண்டனை' விதித்தான்.

தன் தலையில் தூக்குக் கயிற்றை மாட்டப் போகும் சமயம் அந்த விவசாயி காவலாளிகளிடம், "எனக்கு ஒரு சிறு வருத்தம்தான் உள்ளது. அதை எப்படிச் சொல்வேன்?" என்று கூறினான். இதைக் கேட்ட தலைமைக் காவலாளி, "என்ன வருத்தம்? சொல்" என்றான்.

அதற்கு விவசாயி, "எனக்குத் தங்கம் விளைவிக்கத் தெரியும். என்னால் இந்நாடு வளமடையும் என்று நினைத்தேன். ஆனால், இதை உங்கள் அரசரும், குடிமக்களும் இழந்துவிடப் போகிறார்களே என்பதுதான் என் வருத்தம்" என்றான்.

இதைக் கேட்டதும் அரசனிடம் ஓடோடிச் சென்று காவலாளி, விவசாயி கூறியதை அப்படியே கூறினான். அதைக் கேட்ட அரசன், உடனே விவசாயிக்கு விதித்திருந்த மரண தண்டனையை ரத்து செய்தான். விவசாயிடம் வந்து, தங்கம் விளைவித்துத் தரும்படி கேட்டான்.

விவசாயி ஒரு நிலத்திற்கு அரசனையும், மந்திரி, தளபதி முதலியோரையும் அழைத்துச் சென்றான். "இப்போது ஒரு தங்கக் கட்டி வேண்டும். அதை இந்த நிலத்தில் விதைக்கவும், நான் ஒரு மந்திரம் சொல்வேன். ஒரு கட்டி பல கட்டிகளாக விளையும்" என்றான். உடனே அரசன் ஒரு தங்கக் கட்டியை அங்கே கொண்டுவர உத்தரவிட்டான்.

தங்கக் கட்டி வந்ததும், அதைக் கையிலெடுத்துக் கொண்ட விவசாயி, "இதை முதன் முதலில், இதுவரை தவறே செய்யாத ஒருவர் வந்து விதைத்தால்தான் இத்தங்கம் நல்ல விளைச்சலைத் தரும். தீயவர் நட்டால் விளையாது. தவறே செய்யாத யாரே

னும் ஒருவர் நடலாம்'' என்று கூறினான்.


அரசன் அமைச்சரை நோக்கி நடும்படி கூறினான். அமைச்சரோ, ''என் வாழ்க்கையில் நான் தவறே செய்யவில்லை என்று கூற முடியாது. ஆகவே இத் தகுதி எனக்கில்லை'' எனக் கூறி விட்டார்.

பின் தளபதியை நடும்படி அரசன் கூறினான். அவரும் அமைச்சரைப் போலவே கூறினார். அங்கு கூடி இருந்தவரில் எவருமே நடுவதற்கு முன் வரவில்லை. பின் அனைவரும் அரசனையே நடும்படி கூறினர். அரசனும் ''எனக்கு அத்தகுதி இருக்கோ இல்லையோ தெரியவில்லை. ஆதலால், என்னால் இயலாது'' என்று கூறினார்.

இதைக் கண்ட விவசாயி, ''அரசரோ, அமைச்சரோ, தளபதியோ, வேறு இங்கு உள்ளவர்களோ தங்கள் வாழ்க்கையில் ஒரு தவறோ அல்லது பல தவறுகளோ செய்திருக்கிறார்கள். ஆகையால்தான் ஒருவரும் முன் வரவில்லை. இங்ஙனம் இருக்க, வாழ்வில் எந்தத் தவறுமே செய்யாத எனக்கு மரண தண்டனை அளித்தது ஏன்?'' என்று கேட்டான்.

உடனே தளபதி ராஜன் தன் தவறை உணர்ந்தான். ''இந்த விவசாயி திருடனல்ல; திருடன் யாரென்று கண்டு பிடிக்க முடியாததால் இவனைப் பிடித்து வந்தேன்'' எனக் கூறினான். இதைக் கேட்டு வெட்கமடைந்த அரசன், உடனே தளபதியை வேலை நீக்கம் செய்து, விவசாயியின் அறிவாற்றலைப் பாராட்டி அவனையே தனது முதல் அமைச்சராக நியமித்துக் கௌரவித்தான். பழைய முதலமைச்சர் தளபதியாக்கப்பட்டார்.

இதோ சங்கிலி



நா.முருகேசன் (5989)

அன்று ஞாயிற்றுக் கிழமை. மணி 10 இருக்கும். மார்க்கெட்டில் எள் விழ இடமில்லாத கூட்டம். கடைக்காரர்களின் சத்தமும், வாடிக்கையாளர்களின் சத்தமும், காதைத் துளைத்தன. ஒரு வழியாக ராமு, அம்மா சொன்ன சாமான்களை வாங்கிக் கொண்டு மார்க்கெட்டை விட்டு நகர்ந்தான்.

அச்சமயத்தில் ஒரு பெண்மணி ''ஐயோ! திருட்டு! திருட்டு! என் குழந்தையின் சங்கிலி! தங்கச் சங்கிலி!!'' என்று அலறினாள். உடனே அவளைச் சுற்றிக் கூட்டம் மொய்க்க ஆரம்பித்தது.

அப்பொழுது ஒருவன் ராமுவை இடித்துக் கொண்டு கூட்டத்தில் விரைந்து சென்றான். ராமுவுக்கோ எரிச்சல் தாங்க முடியவில்லை. அந்த ஆளைப்பார்த்து, மெதுவாகத்திட்டியவாறே முறைத்தான்.

''என்னுடைய குழந்தையை நான் இங்கு விட்டு விட்டுக் கடையில் காய்கறி வாங்கினேன். வந்து பார்த்தால், சங்கிலியைக் காணவில்லை. அதோ ஓடுகிறானே, அவனைப் பார்த்தால், எனக்குச் சந்தேகமாக இருக்கிறது'' என்று ராமுவை இடித்து விட்டு ஓடியவனைச் சுட்டிக் காட்டிக் கூறினாள் அந்தப் பெண்மணி. உடனே, சிலர் ஓடிச் சென்று அவனைப் பிடித்துச் சோதனை செய்த போது, ஒன்றும் அவனிடம் அகப்படவில்லை. அவனை விட்டு விட்டனர்.

இதைக் கவனித்த ராமுவுக்கு மேலும் அங்கு நின்று கொண்டிருக்கப் பிடிக்கவில்லை. ஏற்கெனவே தாமதமாகி விட்டது. அவனுடைய அம்மா திட்டினாலும் திட்டுவான். எனவே வீட்டை நோக்கி விரைந்து சென்றான். அவனுடைய வீடு அப்படியொன்றும் தொலைவில் இல்லை. மார்க்கெட்டுக்

குச் சிறிது தூரத்தில் உள்ள ஒரு தெருவில்தான் இருந்தது.

ராமு தற்செயலாகத் திரும்பிப் பார்த்த பொழுது, அவனை இடித்துச் சென்ற தடியன், சிறிது தூரத்தில் தன் பின்னுலேயே வந்து கொண்டிருந்ததைக் கண்டான். ராமு அப்பொழுது தன்னுடைய வீடு இருந்த தெருவினருகே வந்து விட்டான். தெரு வளைவில், எதிரில் இருந்த சுவர் ஒன்றில் 'பளிச்' என ஒளி அடிப்பதைக் கண்டான். ஒளி தன்னுடைய கூடையிலிருந்து வருவதாக அறிந்தான். உடனே கூடையைப் பார்த்தான். உள்ளே தங்கச் சங்கிலி பளபளத்தது! நிலைமையை உணர்ந்த அவனுடைய மூளையில் 'பளிச்' என ஒரு எண்ணம் தோன்றி மறைந்தது.

தெருவின் வளைவில் திரும்பினுன். தன்னுடைய நடையின் வேகத்தை அதிகரித்தான். தடியனும் வேகமாக அவனை நோக்கி வந்து கொண்டிருந்தான். ராமு வீட்டிற்குள் வேகமாக நுழைந்தான். வீட்டில் சமைத்துக் கொண்டிருந்த அவனுடைய அம்மாவை நோக்கி, "அம்மா! யாரோ ஒரு தடியன் நம் வீட்டுக்கு வந்து கொண்டிருக்கிறுன். சற்று நேரம் அவனுடன் பேசிக் கொண்டிருங்கள். அதற்குள் நான் வந்து விடுகிறேன்" என்று அவசரமாகக் கூறிவிட்டு, காய்கறிக் கூடையை ஓர் இடத்தில் மறைத்து வைத்துவிட்டு, தன்னுடைய வீட்டின் கொல்லைப்புற வழியாகச் சிட்டாய்ப் பறந்தான்.

அவன் சென்ற சற்று நேரத்திற்கெல்லாம் அந்தத் தடியன் ராமுவின் வீட்டினுள் நுழைந்தான். வாசலில் நின்ற ராமுவின் தாயாரை நோக்கி, "என்னுடைய சங்கிலியைத் திருடி வந்த அந்தப் பையன் எங்கே?" என அதட்டுவது போல் அவன் கேட்டான்.

"என்ன! எங்கள் ராமு திருடினுனு! அவன் அதுபோலெல்லாம் செய்ய மாட்டானே" என்றுள் அவள்.

"எங்கே அவன்? எங்கே அவன் காய்கறி வாங்கி வந்த கூடை? அதைக் காண்பியுங்கள். அதற்குள் ஒருவேளை, வைத்திருப்பான்" என்றுன் அவசரமாக.

"இதோ பார்க்கிறேன்" என்று கூறியவாறே வீட்டினுள் நுழைந்தாள் ராமுவின் அம்மா. வீட்டினுள் சென்று கூடையைத் தேடிக் கொண்டிருந்த போது, ராமு வீட்டினுள் நுழைந்தான்.


"டேய்! என்னுடைய சங்கிலியை எங்கே வைத்தாய்?" என்று அவசரமாகக் கேட்டான், அந்தத் தடியன். அப்பொழுது, "இதோ சங்கிலி" என்று ஒரு குரல் கேட்டது. "ஆனுல், இது தங்கச் சங்கிலி அல்ல; இதோ இரும்புச் சங்கிலி" என்றவாறே நுழைந்தார் இன்ஸ்பெக்டர் கோபால கிருஷ்ணன். மறுநிமிஷம் அந்தத் தடியன் கையில் விலங்கை மாட்டினுர். ராமுவின் அம்மாவோ ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றுள். அப்பொழுது இன்ஸ்பெக்டர், "அம்மா, உங்களுடைய மகன் மிகவும் புத்திசாலி. அதனுல்தான் இவ்வளவு காலமாகப் போலீசுக்கு டிமிக்கி கொடுத்து வந்த இந்த பிக்பாக்கெட் திருடனைப் பிடிக்க முடிந்தது" என்று கூறியவாறே திருடனைக் கைது செய்தார்.

"ஏன் அந்த ஆளைக் கைது செய்கிறீர்கள்? ராமு திருடியதாகத்தானே அவன் என்னிடம் சொன்னுன். எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!" என்றுள் ராமுவின் அன்னை.

"அது பொய். மார்க்கெட்டில் தனியாக நின்று கொண்டிருந்த ஒரு குழந்தையிடமிருந்து ஒரு தங்கச் சங்கிலியைத் திருடினுன் இந்தத் தடியன். அந்தக் குழந்தையின் தாய் இவன் மீது சந்தேகப்பட்டதையடுத்து, சங்கிலியைக் கூட்டத்தில் இடிப்பது போலப் பாவனை செய்து ராமுவின் கூடையில் போட்டு விட்டான். பின்பு ராமுவிடமிருந்து மிரட்டி வாங்கி விடலாம் என்ற எண்ணம் இவனுக்கு.

ராமு நினைத்திருந்தால், தடியனைப் பார்த்துப் பயந்து அவனிடம் சங்கிலியைக் கொடுத்திருக்கக் கூடும். ஆனுல், சமயோசித புத்தியினுல் அவனை வீடு வரை வரவழைத்துப் பிடித்துக் கொடுத்து விட்டான். சபாஷ் ராமு!" என்று கூறி ராமுவைத் தட்டிக் கொடுத்தார் இன்ஸ்பெக்டர்.

ராமுவின் அன்னை தன்னுடைய மகனின் மதிநுட்பத்தை எண்ணி மகிழ்ந்தாள்.



வலிப்பு வருவது ஏன்?

டாக்டர் கு.கணேசன்

அருணும், சுரேஷும் நெருங்கிய நண்பர்கள். தனியார் பள்ளியொன்றில் பத்தாம் வகுப்பு படிக்கிறார்கள். அவர்கள் இருவருக்குமே நான்தான் குடும்ப டாக்டர். அதனால் எனக்கு அவர்களிடத்தில் அதிகமான பழக்கம் உண்டு.

ஒரு விடுமுறை நாளில் அருணும் சுரேஷும் என் மருத்துவமனைக்கு ரிக்ஷாவில் வந்து இறங்கினர். அவர்களுடன் அரைகுறை மயக்கத்தில் ஒரு பையனையும் கைத்தாங்கலாக அழைத்து வந்திருந்தனர்.

நான் அப்பையனைக் கவனித்தேன். அவன் வாயில் நுரை தள்ளியிருந்தது. தரையில் விழுந்து புரண்ட மாதிரி உடம்பெல்லாம் மண்ணும் தூசியும் ஒட்டியிருந்தன. கண்கள் செருகியிருந்தன. அப்பையனை ஒரு பெஞ்சில் படுக்கவைத்துவிட்டு, ''என்ன சுரேஷ், யார் இந்தப் பையன்? என்ன ஆச்சு இவனுக்கு?'' என்று அவசரமாக வினவினேன்.

சுரேஷ் பதற்றத்துடன், ''டாக்டர், இவன் பெயர் வேணு. எங்கள் வகுப்பு நண்பன். வழக்கம் போல் நாங்கள் மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்தோம். திடீரென்று வேணு மயங்கி விழுந்து விட்டான். என்ன, ஏது என்று கேட்பதற்குள் அவன் கைகளும் கால்களும் வெட்டி இழுக்க ஆரம்பித்தன. வாயில் நுரை தள்ளியது. எங்களுக்கோ பயம் பற்றிக்கொண்டது. என்ன செய்வதென்று தெரியாமல், அவன் கைகால்களைப் பலமாகப் பிடித்து அமுக்கிப் பார்த்தோம். பிறகும் இழுப்பது நிற்கவில்லை. உதவிக்கு எங்களுக்கருகில் யாரும் இல்லை. அருண்தான் ஓடிப் போய் ரிக்ஷாவை அழைத்து வந்தான். உடனே வேணுவை இங்கே கொண்டு வந்து விட்டோம். வரும் வழியில் வேணுவுக்கு வெட்டி இழுப்பது நின்றுவிட்டது. ஆனால், மயக்கம் மட்டும் தெளிந்தபாடில்லை. எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை டாக்டர்... வேணுவைச் சீக்கிரம் பாருங்கள்... அவனைக் காப்பாற்றுங்கள்...'' என்று சொல்லி அழ ஆரம்பித்து விட்டான்.

நான் உடனே வேணுவைப் பரி

சோதித்துப் பார்த்தேன். அவனுக்குத் தேவையான ஊசிகளைப் போட்டு விட்டு, நல்ல காற்றோட்டம் உள்ள இடத்தில் அவனைப் படுக்க வைத்தேன். பிறகு, அருணையும், சுரேஷையும் அழைத்துக் கொண்டு என் அறைக்குள் நுழைந்தேன்.

அங்கே நடந்த உரையாடல் இதோ உங்கள் கண் முன்னே விரிகிறது —

அருண்: டாக்டர், வேணுவுக்கு என்ன செய்யுது டாக்டர்? இன்னும் அவனுக்கு மயக்கம் தெளியவில்லையே! எனக்குப் பயமாக இருக்கிறது டாக்டர்...

நான்: பயப்படத் தேவையில்லை, அருண்! உன் நண்பனுக்கு 'வலிப்பு நோய்' வந்திருக்கிறது. அதனால் மயக்கத்தில் இருக்கிறான். ஊசி போட்டிருக்கிறேன். இன்னும் சற்று நேரத்தில் மயக்கம் தெளிந்து சுய நினைவுக்கு வந்துவிடுவான். அதற்குப் பிறகு நீங்களே அவனை வீட்டிற்கு அழைத்துச் செல்லலாம்!

சுரேஷ்: ஏன் டாக்டர், 'காக்கை வலிப்பு' என்று சொல்வார்களே, அதுவா டாக்டர் வேணுவுக்கு வந்திருக்கிறது?

நான்: ஆமாம் சுரேஷ்! அதேதான்!

சுரேஷ்: டாக்டர், காக்கை வலிப்பு என்றால் என்ன? நான் அரையும் குறையுமாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன், டாக்டர்!

நான்: அப்படியா! சொல்கிறேன் கேள். காக்கை வலிப்பு என்பது மூளை சம்பந்தப்பட்ட ஒரு வியாதி. சில காரணங்களினால் மூளைக்குள் சில அதிர்வுகள் உண்டாகி, அவை நரம்புகள் மூலம் வெளிப்பட்டு, தலை, கை, கால், என உடம்பு முழுவதும் பரவி, பலத்த அதிர்வுகளை உண்டாக்கும். அப்போது தலை, கை, கால்கள், வெட்டி வெட்டி இழுக்கும். இதைத்தான் 'வலிப்பு' என்று சொல்கிறார்கள். இதையே ஆங்கிலத்தில் 'Fits' என்றும், மருத்துவத்துறையில் 'எபிலெப்சி' (Epilepsy) என்றும் அழைக்கிறார்கள்.


அருண்: காக்கை வலிப்பு எதனால் வருகிறது, டாக்டர்? அதைப் பற்றியும் சொல்லுங்களேன். நாங்கள் தெரிந்து கொள்கிறோம்...

நான்: வலிப்பு வருவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் பொதுவான காரணம் அதீத காய்ச்சல். அதாவது, மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வலிப்பு வருவதற்கு முதற் காரணம் என்னவென்று பார்த்தால், அக்குழந்தைகளுக்கு 102°க்கு மேல் காய்ச்சல் இருப்பது தெரிய வரும். இதே மாதிரி மூளைக் காய்ச்சல், டெட்டனஸ், அம்மை நோய் போன்றவற்றால் குழந்தைகளுக்கு வலிப்பு வரும். பரம்பரை காரணமாகவும் வலிப்பு வருகிறது. தலையில் அடிபட்டாலோ, தலையில் இரத்த உறைவு ஏற்பட்டாலோ, மூளையில் கட்டி தோன்றினாலோ வலிப்பு வரலாம். நரம்புத்தளர்ச்சியின் காரணமாகவும் வலிப்பு வருகிறது...

சுரேஷ்: இந்த வலிப்பு நோய் சிறுவர்களைத்தான் அதிகமாகப் பாதிக்குமா, டாக்டர்?

நான்: அப்படியில்லை, சுரேஷ்! இது யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். மூன்று மாதக் குழந்தையிலிருந்து, சிறுவர்கள், இளைஞர்கள், வயோதிகர்கள் வரை வலிப்பு நோய் வருகிறது. ஆயிரத்தில் நான்கு பேருக்கு வலிப்பு நோய் இருப்ப

அடுத்த இதழில்—



* கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் மனு வெளிவருகிறது.
* குழந்தை இலக்கியப் போட்டியில் முதல் பரிசுபெற்ற கல்லூரி மாணவர் ஜெ. சீனுவாசனின் சிறுகதை 'அகிம்சையின் வெற்றி' இடம் பெறுகிறது.

தாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள்.

அருண்: ஏன் டாக்டர், காக்கை வலிப்பு என்று அழைக்கிறார்களே... காக்கைக்கும் இந்த வலிப்பு நோய்க்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?

நான்: நல்ல சந்தேகம் அருண். வலிப்பு நோய்க்கும் காக்கைக்கும் எந்தவிதச் சம்பந்தமும் கிடையாது. கால், கை வலிப்பு என்பதே நாளடைவில் மருவி காக்கை வலிப்பாகி விட்டது!

சுரேஷ்: அப்படியா டாக்டர்! இந்த வலிப்பு நோய் வரும்போது நோயாளி எப்படி இருப்பார் என்பதை எங்களுக்குச் சொல்லுங்களேன்...

நான்: அதைத்தான் நீ நேரிலேயே பார்த்திருக்கிறாயே, சுரேஷ். வலிப்பு வருபவர்களுக்கு முதலில் மயக்கம் வரும். அடுத்த விநாடியே அவர்களின் முகம் கோணிக் கொண்டு போகும். கண்கள் செருகிக் கொள்ளும். தலை, கை, கால்கள் வெட்டி வெட்டி இழுக்கும். வாயில் நுரை தள்ளும். இவை எல்லாமே சில நிமிடங்களுக்குத்தான். பொதுவாக வலிப்பு தானாகவே நின்று விடும். வலிப்பு வந்தவர் சில மணி நேரங்களுக்கு மயக்கமாகவே இருப்பார். இது பார்ப்பவர்களுக்கு வேண்டுமானால் பயமாக இருக்கலாமே தவிர, உண்மையிலேயே வலிப்பு வரும்போது பயப்படத் தேவையில்லை.

அருண்: டாக்டர், வலிப்பு வரும்போது அதை நிறுத்த நாம் என்ன செய்ய வேண்டும்?

நான்: சொல்கிறேன், கேள். வலிப்பு வந்தவரை முதலில் தரையில் படுக்கவைத்துவிட வேண்டும். அணிந்திருக்கும் ஆடைகளைத் தளர்த்திவிட வேண்டும். அவரைச் சுற்றிக் கூட்டம் கூடுவதைத் தவிர்க்க வேண்டும். வலிப்பு வந்தவருக்கு நல்ல காற்றோட்டம் அவசியம். வலிப்பின் போது நாக்கு கடிபடுவதைத் தவிர்க்க ஒரு சிறு கட்டையைப் பற்களுக்கிடையே வைக்கலாம். கட்டை கிடைக்காவிட்டால் சுத்தமான துணியையே பல மடிப்புகளாக மடித்துப் பற்களுக்கிடையே வைக்கலாம். வலிப்பை நிறுத்த கை, கால்களை அழுக்கிப் பிடிக்க முயல்வது தவறான செயல். அதே மாதிரி வலிப்பு இருக்கும்போது தண்ணீர், சோடா போன்றவற்றைக் குடிக்கச் செய்வதும் தவறு. பொதுவாக, சில நிமிடங்களுக்குள் வலிப்பு நின்று விடுமாதலால், பயம் தேவையில்லை. வலிப்பு வந்தவருக்கு மயக்கம் தெளிந்ததும் டாக்டரிடம் அழைத்துச் சென்று, முறையான சிகிச்சை முறைகளை மேற்கொண்டால், மீண்டும் வலிப்பு வருவதைத் தவிர்க்கலாம்!

சுரேஷ்: வலிப்பு வரும்போது இரும்புத் துண்டையோ, சாவியையோ கையில் கொடுத்தால் வலிப்பு நின்றுவிடும் என்று ரிக்ஷாக்காரர் சொன்னார் டாக்டர்! அது உண்மையா?

நான்: உண்மையில்லை சுரேஷ்! இரும்புக்கும் வலிப்பு நிற்பதற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதை மாதிரிதான். வலிப்பு நிற்க இருக்கிற நேரத்தில் இரும்புச் சாவியைக் கொடுத்துவிட்டு, சாவி கொடுத்ததால்தான் வலிப்பு நிற்கிறது என்று கூறுவது தவறான கருத்து. சாவியைக் கையில் கொடுக்காமலேயே வலிப்பு நின்று விடுகிறதே! இது என் கருத்தை நிரூபிக்கிறதல்லவா? இதே மாதிரி கையில் இரும்புக் காப்பு கட்டிக் கொண்டால், வலிப்பு வராது



ஒருவர்: இப்பொழுதுதான் "பட்டி மன்றம்" முடிந்தது. மறுபடி ஏன் பட்டி மன்றம் வைக்கிறார்கள்?

மற்றொருவர்: பட்டி மன்றத்தில் நடுவர் தீர்ப்பு சரியா, தவறா என்ற பட்டி மன்றம்.

— கி. சாகேதராமன்.
(4669), திருச்சி — 14.

என்று சொல்வதும் தவருன கணிப்பே!

அருண்: வலிப்பு நோய் வராமல் தவிர்க்க என்ன செய்ய வேண்டும், டாக்டர்?

நான்: வலிப்பு நோய் முதன் முறையாக வந்தவர்கள் உடனுக்குடன் மருத்துவரை அணுகி, தங்களுக்கு வலிப்பு வந்ததற்கான காரணத்தை அறிந்து அதற்கேற்ப மருந்து, மாத்திரைகளைத் தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். வலிப்பு நோய் உள்ளவர்கள் தண்ணீரில் நீந்தக் கூடாது. கிணறு, குளங்களில் குளிக்கக் கூடாது. தீக்குப் பக்கத்தில் விளையாடக்கூடாது. மரத்தில் ஏறக்கூடாது. சைக்கிள் கார் ஓட்டக் கூடாது. இதன் மூலம் வலிப்பு வருவதையும், அதனுல் வரக் கூடிய அபாயத்தையும் தவிர்த்து விடலாம்.

குழந்தைகளுக்குக் காய்ச்சல் இருந்தால், ஆரம்பத்திலேயே மருத்துவரிடம் அழைத்துச் சென்று வைத்தியம் பெற வேண்டும். காய்ச்சல் அதிகமாக அதிகமாகக் குழந்தைக்கு வலிப்பு வர வாய்ப்பு உள்ளது. அதைத் தவிர்க்க முயல வேண்டும். குழந்தைகளுக்குக் காய்ச்சலினுல் ஒரு முறை வலிப்பு வந்து விட்டால், அடுத்த முறை காய்ச்சல் வரும்போதும் வலிப்பு வரக் கூடும். எனவே, அம்மாதிரி குழந்தைகளை, கூடுதல் கவனம் செலுத்திக் காய்ச்சல் வருவதைத் தடுத்து, வலிப்பு நோயைத் தவிர்க்கலாம்!''

சுரேஷ்: சரி டாக்டர், வலிப்பு நோய் மூளை சம்பந்தப்பட்ட வியாதி என்று சொன்னீர்களே... அப்படியென்ருல் எங்களை மாதிரி சிறுவர்களுக்கு வலிப்பு நோய் வந்தால், எங்கள் படிப்பையும், அறிவையும் அது பாதிக்குமா?

நான்: நிச்சயமாகப் பாதிக்காது. வலிப்பு நோய்க்கும், அறிவு வளர்ச்சிக்கும் தொடர்பு இல்லை. அதனுல் வலிப்பு நோய் உள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு, தங்கள் படிப்பும், அறிவு வளர்ச்சியும் பாதிக்குமோ என்ற சந்தேகம் துளிக்கூட வேண்டாம்.

சுரேஷ், அருண் (இருவரும்): ஆ! அதோ வேணு வந்து விட்டான்! மிக்க நன்றி டாக்டர். வேணுவுக்குச் சிகிச்சை அளித்ததோடு, வலிப்பு நோயைப் பற்றியும் நன்கு கூறினீர்கள். இனிமேல் யாருக்காவது வலிப்பு நோய் வந்தால், எங்களுக்குத் தெரிந்த முதலுதவிகளை நிச்சயம் செய்வோம். நன்றி, வணக்கம்!

(இச்சமயத்தில் வேணு மயக்கம் தெளிந்து என் அறைக்குள் நுழையவும், மூவரும் மீண்டும் நன்றி சொல்லி விடைபெற்றுக் கொண்டனர்.)

ஷாலினிக்கு நல்ல எதிர்காலம் உண்டு!

ராணி சீதை ஹாலில் பிரபல நடிகர் சிவாஜி கணேசன், சுவாமி சின்மயானந்தா அமர்ந்திருக்க செல்வி ஷாலினியின் நடன அரங்கேற்றம்



தொடங்கியது. நான்கு வருஷங்கள் தம் நடன குரு ராதிகா கல்யாணியிடம் முறைப்படி ஐந்து வயதிலிருந்து கற்றுக் கொண்டாள் ஷாலினி. சிறுமி சின்மயா வித்தியாலயாவில் ஐந்தாம் வகுப்பு மாணவி. நடன ஆசிரியை ராதிகா கல்யாணியின் ஆசிரியை சித்ரா விச்வேச்வரன், நடனமாடிய சிறுமியை வாழ்த்தி ஆசீர்வதித்தது அபூர்வக் காட்சி. ஷாலினிக்கு நடனம் தவிர ஓவியம், நாடகம், நீச்சல் ஆகியவற்றிலும் ஈடுபாடு உண்டு. ஷாலினியின் நடனத்தின் நளினம், லாகவம் அனைவரையும் அயர வைத்தது.

புருக் காய்ச்சலா? புளூ காய்ச்சலா?

* அடே, திரு. தூரன் கார்ட்டூன்கூட நன்ருக வரைகிருரே! பேஷ், பேஷ்!

— கு. மதுரைமுத்து, மாளுமதுரை.

* 5 வயது முடிந்து 6வது வயதில் காலடி வைக்கும் கோகுலத்திற்கு கோ. கி. ச. உறுப்பினர் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

— பி. கோவிந்தசாமி (5703), பேதாதம் பட்டி.

* நகைச் சுவையோடு தம் குழந்தைப் பருவத்தை எழுதியிருக்கும் டாக்டர். பி. ராமமூர்த்தியின் தன்னம்பிக்கை எங்களைப் போன்ற மாணவர்களுக்கு ஒரு படிப்பினை.

— ஜே. பாபு, நீடாமங்கலம் — 4.

* 'குழந்தை இலக்கிய மாநாட்டில் கூறக் கேட்டவை' தொகுப்பும் படங்களும், அந்த மாநாட்டுக்குச் செல்லவில்லையே என்று ஏங்கியிருப்பவர்களுக்கு நேரில் அழைத்துச் சென்றது போலிருந்தது. (நான் நேரில் சென்று கலந்து கொண்டவன்)

— தேனி முருகேசன், தேனி.

* 'மிருதசஞ்சீவினி மந்திரம்' படிக்கப் படிக்க ஆர்வத்தைத் தூண்டிய அற்புதமான படக் கதை. எழுதிய ஆனந்திக்கும், படம் மூலம் கதைக்கு உயிரூட்டிய விஜுவுக்கும் எங்கள் பாராட்டுக்கள்.

— நாகை பாபு, நாகப்பட்டினம்.

* பிரான்ஸ் நாட்டுக் கதையான "கடைசிப் பாடம்" எங்களுக்குத் தாய் மொழிப்பற்றை நன்கு கற்பித்து விட்டது.

— புகழூர் வெ. தமிழ் (14,391).

* விஷக் காய்ச்சல் என்ருல் என்ன, அது எப்படி வருகிறது, வந்து விட்டால் என்ன செய்வது, அது வராமல் தடுப்பது எப்படி போன்ற பயன்மிக்க தகவல்களைத் தக்க நேரத்தில் தெளிவாக விளக்கிய டாக்டர். கு. கணேசன் அவர்களுக்கு நன்றி.

— நாகை. சத்யா, நாகப்பட்டினம் — 1.

* 'வந்தே மாதரத்தின் கதை' எங்கள் நரம்புகளைத் தட்டி எழுப்பி, உள்ளத்தில் கிளர்ச்சியை உண்டாக்கிய தேசபக்தி மணங் கமழ்ந்த சிறந்த சித்திரம்!

— க. ஸ்ரீராம் (8477) நெய்வேலி, புதுநகர் — 1.

* 'பத்துக் காசு தானே' கதையில் சங்கர் ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் போது நடந்ததையும், பல ஆண்டுகள் சென்று அவன் என்ஜினியரிங் கல்லூரியில் சேர மனு அனுப்பியதையும் இரண்டு பகுதிகளாகப் பிரித்துப் போட்டிருக்கலாம். நன்ருக இருந்திருக்கும்.

— தே. குப்புசாமி, கும்பகோணம்.

* என் கட்டுரையில் 'புளூ காய்ச்சல்' என்பது 'புருக் காய்ச்சல்' என அச்சிடப் பட்டுள்ளது. தயவு செய்து வாசகர்கள் இத் தவறைத் திருத்திக் கொள்ளவும்.

— டாக்டர். கு. கணேசன், இராஜபாளையம்.

* 'யார் அழகி?' அற்புதமான பாடல். மிக உயர்ந்த கருத்தை என் போன்ற சிறுவரும் எளிதாக அறியச் செய்த குழந்தைக் கவிஞரை எப்படிப் பாராட்டுவது?

— க. சிற்சபேசன், மேலூர்.

* 'அன்பு வழி' கதையைப் படித்ததிலிருந்து நான் என் தம்பியை உண்மையிலேயே அடிப்பதை நிறுத்தி விட்டேன். இக்கதையை அருளிய அருள் சிவபாலனுக்கு எமது பாராட்டுக்கள்.

— செ. குமார், (9102), மயிலாடுதுறை — 2.

* 'ஆள் உயர மாலை' விறுவிறுப்பாகப் போய் கடைசியில் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்து விட்டது.

— அ. இரவீந்திரன் (12761), குஞ்சன் விளை.

* மின்மினிக் கதைகள் 'பகுதியில் வந்த நன்னெறிக் கதைகள் மூன்றும் மூன்று முத்துக்கள்.

— ஜீயென். சரவணன் (14362) பழநி — 2.

* ஹலோ, குழந்தைக் கவிஞரா? நீங்கள் தமிழ் நாட்டிலுள்ள ஏனைய மாவட்டங்களை மறந்து விட்டீர்களா? அடுத்த குழந்தைகள் இலக்கிய மாநாட்டை மீண்டும் கோவையில் நடத்திளுல், நாங்கள் உங்களுடன் 'காய்' விட்டு விடுவோம்.

— நிர்மலா (11098), ஷீலா, திருச்சி — 11.

* மாணவர் மன்றத் திலகமாய் விளங்கிய திருமிகு மயிலை சிவமுத்து அவர்களின் படமும், குறிப்பும் இக் கால மாணவர்களுக்கு மிகவும் தேவையானவை.

— ஆ. செயராமன், வடசிறுவளூர்.

கேளுங்கள் ; சொல்லுகிறோம்

* 'கோயில்,' 'கடவுள்' என்றாலே என் நண்பன் கேலி செய்கிறான். "கடவுளை உன்னால் காட்ட முடியுமாடா?" என்று கேட்கிறான். என்ன செய்வது?

— ஆர். ராம்குமார், திருச்சி — 2.

இந்தக் கேள்வியைப் பார்த்ததும், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த ஏ. எஸ். பி. ஐயர் நினைவுதான் வருகிறது. அவர் ஒரு கூட்டத்தில் பேசும் போது, ஒரு நாஸ்திகர் எழுந்து, "கடவுளிடத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. கண்களுக்குத் தெரியாத எதையும் நம்புவது முட்டாள்தனம் என்று கருதுகிறேன்" என்றார்.

உடனே ஏ. எஸ். பி. ஐயர், "அப்பா, உன் மண்டைக்குள் இருக்கும் மூளை என் கண்களுக்குத் தெரியவில்லை. ஆகையால், உனக்கு மூளை இல்லை என்று கூற முடியுமா?" என்று கேட்டார்.

கூட்டத்திலிருந்த எல்லாரும் சிரித்தனர். நாஸ்திகர் தலைகுனிந்தார்.

* சமஸ்கிருதத்தில் 'வால்மீகி ராமாயணம்' என்று இருப்பது எனக்குத் தெரியும். அது தவிர, சமஸ்கிருதத்தில் பல ராமாயணங்கள் இருப்பதாகச் சொல்கிறார்களே, உண்மையா?

— சே. குருசாமி, மீஞ்சூர்.

உண்மைதான். அற்புத ராமாயணம், ஆனந்த ராமாயணம், அத்யாத்ம ராமாயணம், வாசிஷ்ட ராமாயணம், சேஷ ராமாயணம், என்று பல ராமாயணங்கள் உண்டு. மேலும் பௌத்த ராமாயணங்களும், ஜைன ராமாயணங்களும்கூட சமஸ்கிருதத்தில் இருக்கின்றன.

* 'முகம்மதிய மதம்' என்று சொல்கிறார்களே, முகம்மது நபி போதித்துச் சென்றதால் அந்தப் பெயர் வந்ததா?

— எஸ். கீர்த்திவாசன், தஞ்சை — 2.

'முகம்மதிய மதம்' என்று சொல்வது சரியன்று; 'இஸ்லாம்' என்றுதான் சொல்ல வேண்டும். குர் ஆன் இதை நன்றாக எடுத்துக் கூறுகிறது.

* 'பிளாரன்ஸ் நைட்டிங்கேல்' அம்மையார் எங்கு பிறந்தார்?

— கே. கமலா, காவேரிப்பட்டினம்.

அவர் பெயரிலேயே அவர் பிறந்த ஊர் இருக்கிறதே! இத்தாலியில் உள்ள பிளாரன்ஸ் என்ற ஊரில்தான் அவர் பிறந்தார்.



* நம் நாட்டின் முதல் ஜனாதிபதியாக இருந்த டாக்டர் ராஜேந்திர பிரசாத், எத்தனை ஆண்டுகள் ஜனாதிபதியாக இருந்தார்?

— த. பரமசிவம், சிங்கம்புணரி.

12 ஆண்டுகள்.

* முருங்கை மரத்தை யாரும் எதற்குமே பயன்படுத்தாமல் இருக்கிறார்களே, அது எதனால்?

— பி. சந்துரு, கும்பகோணம்.

அது எளிதிலே முறிந்துவிடும் என்பதனால்தான். அதனால் என்ன? அதன் காய்களும் கீரையும்தான் நமக்கு நன்கு பயன்படுகின்றனவே! இவை மட்டும்தானா? முருங்கைப் பட்டை, பூ, பிசின் முதலியனவும் மருந்தாகப் பயன்படுகின்றனவே!

* நம் தேசத்தைப் போலவே ரஷ்யாவிலும் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் ஏராளமாக இருந்தார்கள் என்றும், அந்த நிலைமையை லெனின் அடியோடு மாற்றப் பல திட்டங்களைக் கொண்டு வந்தார் என்றும், எங்கள் பள்ளியில் பேசிய ஒரு பெரியவர் சொன்னார். எப்படிப்பட்ட திட்டங்களைக் கொண்டு வந்தார் என்று அவர் சொல்லவில்லை. உங்களால் கூற முடியுமா?

— எம். சுபாஷ், சென்னை — 10.

அக்டோபர் புரட்சி ஏற்படுவதற்கு முன்பு 75 சதவிகித ரஷ்ய மக்கள் எழுதப் படிக்கத்

தெரியாதவர்களாக இருந்தார்கள். லெனின் ஆட்சித் தலைவராக வந்த பிறகு 8 வயது முதல் 50 வயதுக்கு உட்பட்டவர்கள் எல்லாரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார். ஏராளமான பள்ளிகளை ஆரம்பித்தார். முதியோர் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார். அஞ்சல்வழிப் பள்ளிகளை (Correspondence Schools) ஏற்படுத்தினார் இளம் தொழிலாளர் பள்ளிகளை (Schools for Young Workers) அமைத்தார். அவர் ஆணை பிறப்பித்தது 1919 – ஆம் ஆண்டு டிசம்பர் 26 – ஆம் நாள்.

* காஞ்சிபுரத்தில் நிறையக் கோயில்கள் இருப்பதாகக் கூறுகிறார்களே, எத்தனை கோயில்கள் இருக்கின்றன?

— வி. பெருமான்தாசன், ஸ்ரீவில்லிபுத்தூர்.

தற்போது காஞ்சியில் உள்ள கோயில்களின் எண்ணிக்கை 124. இவற்றில் 40 கோயில்கள் பெரிய கோயில்களாக உள்ளன. முற்காலத்தில் இங்கு 108 பெருமாள் கோயில்களும் 1008 சிவன் கோயில்களும் இருந்ததாகக் கூறப்படுகிறது.

* நம் தமிழ் நாட்டில் அதிகமான மழை பெய்யும் இடம் எது என்று கூறுவீர்களா?

— சே. பார்த்திபன், தேவகோட்டை.


நீலகிரி மாவட்டம்.



* நான் பல பத்திரிகைகளுக்குக் கதைகள் எழுதி அனுப்பினேன். ஒன்றுகூட வெளிவரவில்லை. இதற்கு என்ன செய்யலாம்?

— எஸ். குஞ்சிதபாதம், கொழும்பு.

ஒருவர் எழுதுவது எல்லாமே நன்றாக அமைந்து விடாது. எழுதும் கதையை உடனேயே பத்திரிகைக்கு அனுப்பிவிடாதே. உனக்கு வேண்டிய நண்பர்களிடம் கொடுத்துப் படித்துப் பார்க்கச் சொல். அவர்கள் நன்றாக இருக்கிறதென்றால், உனக்குத் தெரிந்த ஆசிரியர்கள் அல்லது பெரியவர்களிடம் கொடுத்து அவர்கள் அபிப்பிராயத்தை அறிந்து கொள். கதை நன்றாக இருக்கிறதென்றால், பத்திரிகைக்கு அனுப்பு. அவர்கள் ஏதேனும் திருத்தம் சொல்லி, அது சரியென உனக்குத் தோன்றினால், நல்லபடியாகத் திருத்தி அனுப்பு. அப்புறமும் பத்திரிகையில் வரவில்லையென்றால், அதற்காக மனம் தளர்ந்து விடாதே! தொடர்ந்து முயற்சி செய். முயற்சி திருவினையாக்கும்.



* 'சுதந்தரம்' என்பது சரியா? 'சுதந்திரம்' என்பது சரியா?

— இரா. இரமேஷ், சேலம்.

இரண்டுமே சரிதான் என்கிறது சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட தமிழ் லெக்சிகன் (Tamil Lexicon – பக்கம்: 1513).

* தமிழிலே முதல் முதலாக வெளிவந்த பத்திரிகை எது?

— எம். ராஜம், தூத்துக்குடி.

1812 – ஆம் ஆண்டு வெளிவந்த 'மாசத் தினச் சரிதை'தான் முதன் முதலாக வந்த இதழ் என்று திரு. அ. மா. சாமி ஆராய்ந்து கண்டுபிடித்து எழுதியிருக்கிறார்.

* இந்திய மொழிகளில் திரையிடப்படும் சிறந்த குழந்தைகள் படத்துக்கு நேரு மாமா பெயரால் தங்கப் பதக்கம் அளிக்கப்படுகிறதாமே, அது நம் தமிழ்ப்படம் எதற்காவது கிடைத்திருக்கிறதா?

— ஆர். சேதுராமன், மதுரை – 2.

தமிழ்ப் படத்திற்குக் கிடைக்கவில்லை. ஆயினும், நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த புகழ் மிக்க திரைப்படத் தயாரிப்பாளருக்குக் கிடைத்திருக்கிறது. ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் இந்தியில் எடுத்த 'ஹம் பஞ்சி ஏக் டால்கே' (நாம் எல்லாரும் ஒரே கிளையிலுள்ள பறவைகள்) என்ற குழந்தைகள் படத்துக்கு 1957 – ஆம் ஆண்டு கிடைத்தது.



இந்த இதழ் எழுத்தாளர்கள்



மொ. பா. குருராஜன்



சந்திரா குமாரசாமி



பாரதி பா. மு. தாசன்

பிருந்தாவனக் கவிஞர்கள்



இ. வெங்கடேசன்



பா. கணேசன்



இரா. சுமதி



அ. உஷாராணி



எஸ். லதா

பிருந்தாவனக் கதாசிரியர்கள்

வண்ண அட்டைப்படம்:
அழ. காசி. விஸ்வநாதன்.

நா. முருகேசன்






மு. திருநாவுக்கரசு

பரதன் அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக, அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கெ. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 4 3154 3, 4 34 157.



சார்லஸ் டார்வின்

தோற்றம்: 12-2-1809 மறைவு: 19-4-1882

Registered No. TN/MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka